# முடிவல்ல ஆரம்பம்

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்



F/C.75

F/C.75

# முடிவல்ல ஆரம்பம்

இணுவையூர்

சிதம்பரதிருச்செந்திநாதன்



மீரா வெளியீடு 4

யாழ்ப்பாணம் இலங்கை

முதற் பதிப்பு : கார்த்திகை 1988
பதிப்பாளர் : டேவிட் லிகோரி
ஓவியம் : தவம்
அச்சிட்டோர் : சித்திரா அச்சகம் யாழ்ப்பாணம்
அட்டை : 'தவம்' கதலிக் அச்சகம்'

- **MUDIVALLA ARARAMPAM.** *A Novel in Tamil by Inuvaiyoor Sithampara Thiruchchenthinathan*
- **First Edition** : *NOVEMBER 1988*
- **Published by** : *David Ligory Pathippalayam 38, Vembady Veethy Jaffna.*
- **Printed at** : *Chitra Achchakam, Jaffna.*
- **Cover** : *Thavam / Chtholic Press, Jaffna.*

**Price 25/-**

STOCKISTS IN THE CITY
**Poobalasingham Book Depot**
**Jaffna T. P. 23631**

விபரங்களுக்கு
டேவிட் லிகோரி பதிப்பாலயம்
83, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

# முன்னுரை

பிரசுர முயற்சி என்பது ஒரு அசுரத்தனமான வேலை யாகும் அதீத நம்பிக்கையுடன் இத்துறையில் இறங்கியுள்ள நண்பர் டேவிட் லிகோரி அவர்களை நினைத்து ஆச்சரியப் படத்தான் முடிகின்றது.

அவரது மீரா வெளியீட்டின் நான்காவது வெளியீடாக எனது ''முடிவல்ல ஆரம்பம்'' என்னும் இவ்நாவல் வெளி யாகின்றது.

சிறுகதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட வேண்டும் என்ற ஆவலின் மத்தியிலே நூலுருவாகும் எனது இரண்டாவது படைப்பு இது. (முதலில் வெளியானது என்றாவது ஒருநாள்? என்ற குறுநாவல்)

நாவலை வாசிக்கப்போகும் உங்களுக்கு அந்த நாவல் பற்றிய குறிப்புக்களையோ எழுதப்பட்ட காரண காரியங்களையோ விளக்கி நீண்ட ஒரு முன்னுரையினை எழுதவேண்டிய அவசியம் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

எனவே முன்னுரை என்னும் இந்தப்பக்கத்தின் ஊடாக இந்த நாவல் நூல் உருப்பெறக் காரணமாக இருந்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கவேண்டிய கடமையினை பெரிதாக மதிக்கின்றேன்.

இந்த நாவல் இவ்விதம் விரைவில் வெளியாக முதற் காரணமாக இருந்தவர் நண்பர் யாழூர் துரையாகும். அவருக்கும் பல விதமான கஸ்டங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டு மீரா வெளியீட்டின் ஊடாக நூல்களை வெளியிடும் நண்பர் லிகோரிக்கும் என் மனப்பூர்வமான நன்றி,

எனது இலக்கிய முயற்சிகளுக்கு எப்போதும் துணைபுரியும் என் இனிய நண்பர்களுக்கும் நன்றியினை தெரிவிக்கின்றேன்.

எழுதத் தொடங்கிய காலத்தில் இருந்து என் வளர்ச்சியில் எப்போதும் அக்கறையுடன் இருந்த மறைந்த எந்தை தம்பையா சிதம்பரநாதபிள்ளை (இணுவையூர் த. சிதம்பரநாதன்) அவர்களை நான் நினைவில் கொள்கிறேன்.

''தனஸ் தான்''
உடுவில் றோட்,
மருதனமடம்,
சுன்னாகம்.
07-10-88

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

## ஒரு வாசகியின் கடிதம்

" மீரா " வெளியீட்டாளருக்கு,

நான், இந்திய, எழுத்தாளர்களின் நூல்களை மட்டுமல்ல, ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களையும் வாங்கிப் படிக்கும் ஒரு வாசகி மீரா வெளியீடுகளையும் தொடர்ந்து வாங்கி வருகிறேன்.

செப்டம்பர் மாதம் இரண்டு மீரா வெளியீடுகள் செங்கை ஆழியானின் "மண்ணின் தாகம்" செம்பியன் செல்வனின் "கானகத்தின் கானம்" என்ற விளம்பரத்தை "முரசொலி" பத்திரிகையில் பல நாட்கள் பார்த்தேன். செப்டபர் மாதத்தின் வருகைக்காக காத்திருந்தேன்.

செப்டம்பரும் வந்து சென்றது ஒக்டோபரும் வந்து போகப் போகிறது நாவல்களைத்தான் காணவில்லை எப்போது வெளிவரும்?

இரண்டு நாவல்களையும் எதிர்பார்த்து என்னை இப்படிக் காக்க வைத்தது செங்கை ஆழியானின் 'மழைக்காலம்' நாவலும் செம்பியன் செல்வனின் " நெருப்பு மல்லிகை " நாவலும்தான்.

அந்த இரண்டு நாவல்களும் என்னைக் கவர்ந்து இதயத்தை தொட்டதன் விளைவுதான் " மண்ணின் தாகம் " "கானகத்தின் கானம்" நாவல்களைத் தேடி பூபாலசிங்கம் புத்தகக் கடையில் ஈழத்து நாவல்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கும் புத்தகப் பகுதியில் விழிகள் ஓடின. விழிகளுக்கு ஏமாற்றம்.

"மண்ணின் தாகமும்", "கானகத்தின் கானமும்" வெளிவருமா?

ஈழத்து படைப்பிலக்கிய வாசகர்களின் கனவை நனவாக்கிய உங்கள் முயற்சி வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்.

**Miss. நித்யா G.**

# பதிப்புரை

பிரியமுள்ள வாசகர்களுக்கு வணக்கம்!

இது போன்ற கடிதங்கள் என் முகவரிக்கு நிறைய வருவதுண்டு, பல கடிதங்களைப் பார்த்த போது ஈழத்து வாசகர்கள் எப்படி வளர்ந்திருக்கிருர்கள் என்று ஆச்சரியப் படுகிறேன்.

தமிழ் இலக்கிய உலகம் மோசம் போய்விடவில்லை தரமான படைப்புகளை இனம்கண்டு வரவேற்கும் வாசகர்கள் இருக்கிருர்கள் என்று தலை நிமிர்கிறேன்.

''கானகத்தின் கானம்'' மண்ணின் தாகம்'' இரண்டு நாவல்களிற்கும் அட்டைப் படங்கள் அச்சிடப்பட்டிருந்தும் எனது சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களால் இரண்டு நாவல்களுமே வெளிவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எப்பொழுது வெளிவரும் என்று இப்பொழுது என்னுல் சொல்ல முடியவில்லை

மீரா வெளியீடுகள் வெளிவருவதற்கு பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்து வைத்தவர்கள். தொடர்ந்து தங்கள் ஒத்துழைப்பைத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

என் மனதில் நான் விதைத்து வைத்திருக்கும் நம்பிக்கை என்னும் விதை காயவில்லை. அரும்புவிட்டிருக்கிறது. அதனுல் ''முடிவல்ல ஆரம்பம்'' என்னும் இந்த நாவல் இன்று உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நாவல் எங்கோ நமது கிராமத்து வீட்டில் அமர்ந்து கொண்டு ஜன்னல் வழியே தெரியும் காட்சியைக் காண்பது போன்று செல்லும் கதை.

பூக்கள் தாமதமாக மலர்கின்றன என்பதால் பெண்ணின் கூந்தல் கோபிப்பதில்லை

மீரா வெளியீடுகள் தாமதமாக வெளிவருகின்றன என்பதற்காக மீரா மீது அன்பு வைத்திருக்கும் வாசகர்களாகிய நீங்களும் கோபித்து விடாதீர்கள்.

மறுபடியும் ''பூஜைக்காக வாழும் பூவை'' நாவலில் சந்திக்கும்வரை உங்களிடம் இருந்து விடைபெறும்

என்றும் உங்கள் பிரியமுள்ள

டி. கிரோசி

38, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
4-11-1988

# இலவசம் புதிய நாவல்

குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பூவை ஒருத்தியின் புனித வாழ்வை சித்தரிக்கும் நாவல்

கே. எஸ். ஆனந்தன் எழுதும்

## " பூஜைக்காக வாழும் பூவை "

இந்த நாவலை மழைக்காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனிமலர்கள், முடிவல்ல ஆரம்பம். நாவல்களில் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பன்களை நீங்கள் மீரா வெளியீடுகளை வாங்கும் விற்பனையாளர்களிடம் கொடுத்து இலவசமாகப் பெறலாம்,

இந்த நாவல் மார்கழி மாதம்
வெளிவருகிறது

உங்கள் அபிமான நாவலாசிரியர்

செங்கை ஆழியான்

எழுதும்

இதுவரை வெளிவராத

புதிய நாவல்

## " மண்ணின் தாகம் "

விரைவில் உங்கள் கரங்களில்

# முடிவல்ல ஆரம்பம்

## 1

**வா**டிக் கருகிப் போய் இருந்த மல்லிகைக் கொடி இப்போது தான் முளைவிடத் தொடங்கியிருக்கிறது. எப் போது அதில் பூக்கள் மலரும்?

உயரமாக வளர்ந்திருந்த குரோட்டன் செடிகள் எத் தனையோ விதமான செவ்வரத்தைகள், இருந்த இடங்களைத் தேடித்தான் கண்டு பிடிக்க வேண்டும்.

அரைவாசியோடு முறிந்து கருகிப்போன தென்னை மரங் கள். இலையுதிர்ந்த மாமரங்கள், பூவோடும் பிஞ்சோடும் வாழ் விழந்த எலுமிச்சை மரங்கள். எல்லாமே இந்த மண் ணின் மனிதர்களைப் போல அவர்களின் வளமான எதிர்கா லங்களை ஒத்ததாக கருகிப் போய் இருக்கின்றன.

கடுஞ் சூறாவளியும், கொடிய வெய்யிலும் மனமாறப் பசியாறிய பின்னர் எ படி இருக்கும் என்பதற்கு இந்த வளவு மாத்திரம் அல்ல. இந்த மண்ணே சாட்சி.

வீட்டின் வெளி விறாந்தையில் ரேடியோ பாடிக் கொண்டிருந்தது. முன்பு கேட்ட சினிமாப் பாடல்களையே இப்போதும் அது கத்தித் தள்ளுகின்றது. என்றாலும் இப்போது அவைகள் இனிக்கவில்லை ரேடியோவை தூக்கிப் போட்டு உடைக்க வேணும் போல ராகினிக்கு மனம் அந்தரித்தது.

ஜன்னலுக்கு ஊடாக தோட்ட வெளி கணகளில் படுகின்றது. முன்பு என்றால் பச்சை பசேல் என்று பயிர்கள் நிறைந்து காணப்படும். இல்லாவிடின் கொத்திப் புரட்டி எடுத்த செம்பாட்டு மண்ணும் வரம்புகளுமாக இருக்கும்.

இப்போது அடர்த்தியான புற்கள் வளர்ந்து பின்னர் அவை வெய்யிலில் கருகி பாலைவனம் போல பாழ் பட்டு வாகனங்கள் தாராளமாய் தடம் பதித்துப் பதித்து மென்மையான தோட்டங்களை என்ன மாதிரியாக்கிவிட்டன அதிகாரவர்க்கத்தினரின் மனங்கள் போல இறுகிவிட்டன

தோட்டமாக இருந்து பாழ்பட்டுப் போன அந்தப் பகுதியைத் தொடர்ந்து பார்க்க ராகினிக்கு வேதனை நெஞ்சைத் துளைத்தது. ஆரம்ப நாட்களில் கண்ணீர் கூட வந்தது. ஆனால் இப்படி எத்தனை சம்பவங்களுக்கு கண்ணீர் வெளிப்பட்டு வெளிப்பட்டு கண்ணீர் விடுவதிலேயே அர்த்தமில்லாமல் போய் விட்டது.

அந்த தோட்டநிலங்கள் மட்டுமா அழகில்லாமல் போய் விட்டன ராகினி வீட்டாக்களின் இந்த வளவு கூட எத்துணை அழகாக இருந்தது. அந்த அழகு கூட எப்படி சூறையாடப் பட்டு விட்டது.

வாசலில் தளதளவென்று சடைத்து வளர்ந்த அந்த மல்லிகை மனத்தை சுண்டி இழுக்கும் அதன் இனிமையான வாசம் முன்பு கல்லூரிக்கு போகும் போதும்சரி பின்னர் ஆசிரியையாக தொழில் பார்க்கத் தொடங்கி விட்ட பின்

வரும் கூட அவசரம் அவசரமாக புறப்பட்டு போகும் போது ஒன்றோ இரண்டு மல்லிகைப் பூக்களை தலையில் செருகிக் கொண்டு போகாவிட்டால்? திருப்தி இருக்காது.

எத்தனை வருடத்துப் பழக்கம் மல்லிகைக் கொடியில் எப்போதும் பூக்கள் கிடைப்பது அரிது என்றாலும் தலைக்குப் பூ கிடைக்கா விட்டால் மனதுக்கு சந்தோஷம் வருவதில்லை.

ராகினி அறையை விட்டு வெளியே வந்தாள், அம்மா வசந்தமலர் குசினிக்குள் காலைச் சாப்பாட்டுக்காகப் போராடிக் கொண்டிருந்தாள். தங்கை வனஜா கிணற்றடியில் குளிப்பில் லயித்திருந்தாள். ஐயா வல்லிபுரம் சுருட்டுக்குப் போய் விட்டார்

வெளிவிருந்தை குட்டை சொறி பிடித்தது போல சுவர்களில் எத்தனை பள்ளங்கள் சீமேந்து தரையில் எவ்வளவு பிளவுகள் வானத்தில் இருந்து பாய்ந்த குண்டுகள் கூரைகளைப் பிய்த்துக் கொண்டு சுவர்களையும் தரையையும் மனித உயிர்களாக நினைத்துப் பதம் பார்த்ததின் அடையாளச் சின்னங்கள்.

எண்பத்தி ஐந்தில் ஒரு தடவையும் எண்பத்தி ஏழு அக்டோபரில் மறு தடவையுமாக சுகம் விசாரிப்பது போல தொடர்ச்சியான தாக்குதல்கள், இரண்டிலுமே அடிவாங்கியவர்கள் ஒரே ஆட்கள் தான்

கூரையில் சில திருத்தங்கள் செய்தாலும் கூட நல்ல மழை பெய்தால் தாராளமாக மழை வீட்டினுள் வரும். எல்லோராலும் முழுமையாக வீட்டை இடித்துக் கட்ட முடியுமா?

நல்ல கிழுவம் கதியால்கள் போட்டு அடர்த்தியாக இருந்த வேலி அடியோடு தறிக்கப்பட்டு விட்டதால் தோட்டத்தில் பயிற்றங் கொடி படரப் போடும் வேலிபோல இடையிடையே தடிநட்டு இரண்டு இரண்டாக தென்னோலைகளும் கட்டி தற்காலிக வேலி ஒன்று உருவாக்கப் பட்டு இருந்தது.

முன்பக்க கேற்ருேடு இருந்த மதிலின் அத்திவாரம் தான் இருக்கின்றது. கற்கள் உடைக்கப் பட்டு தூரத்தில் சென்றி ஆக்கப்பட்டு இருந்தது. சென்றியில் இருந்தவர்கள் போன பின்னரும் அந்தக்கற்களை எடுக்க முடியவில்லை.

இரண்டு வீடு தள்ளியிருந்தவர்கள் தாங்கள் அறுத்து வைத்த கற்கள் என்று சொல்லி பெரும் பகுதியைத் தூக்கிக் கொண்டு போக மிகுதியை ''என்ரை வளவுக்கை இருக்கி றது நீங்கள் எடுக்கேலாது'' என சென்றி இருந்த வளவுக் காரன் சொல்லிவிட்டான், ''இவ்வளவும் நடந்தும் எங்கடை சனம் திருந்தாது'' என்று கூறி வல்லிபுரத்தார் கவலைப்பட் டதை அப்போது ராகினி நினைத்தாள்.

குளிப்பை முடித்துக் கொண்டு வனஜா வந்தாள், முகத் திலே மலர்ச்சி... இனிமை களி நடனம் புரியும் உடல் அமைப்பு, எந்த நேரமும் புன்னகை பூத்தபடி இருக்கும் தன்மை.

ஒருநாள்கூட தன்னோடு சண்டை பிடிக்காத வனஜாவை ராகினி சந்தோஷமாகப் பார்த்தாள், எந்த விடயமாக இருந்தாலும் ஒத்துப் போகும் தன்மை கொண்டவள் அவள், எதிலுமே போட்டிக்கு நிற்கமாட்டாள், தனக்காக மற்றவர் களுடன் வாதாடுவாள்.

ராகினிக்கு தன்னுடைய தங்கையைப் பார்க்க பெருமை வெளிப் பட்டது, இருபத்தி நான்கு வயது என்று இவளைப் பார்த்தால் சொல்ல முடியுமா? இவளுக்கே கலியாணம் செய்து வைக்கும் வயதை தாண்டியாகி விட்டது, அவளை விட பத்துவயது மூத்த தனக்கு?

கலியாணத்தைப் பற்றி யோசிப்பதில்லை என்று எத்தனை தரம் முடிவு கட்டியாகி விட்டது: இருந்தாலும் திரும்ப திரும்ப ராகினி தன்னையே நொந்து கொண்டாள்.

'' என்ன அக்கா யோசினை '' வனஜா தான் கேட்டாள்.

'' ம் ... குளிச்சிட்டு வெளிக்கிட வேணும் ''

'' என்ருள் ராகினி.

"நேர மெல்லே போகுது போய் கெதியாய் குளிச்சிட்டு வாவன்"

"எப்பிடிப் போனாலும் பஸ்சில இருக்க இடம் கிடைக்குமே? எத்தனை கதாநாயகன்களின் அழுங்குப் பிடிக்குள் தப்பிப் பிழைக்க வேணும். ம்... என்று பெருமூச்சு விட்டாள் ராகினி.

வனஜா தமக்கையினைப் பார்த்து சிரித்தாள்.

"நீ -இண்டைக்கு ரெக்குக்குப் போகேல்லையே"

"போறன் அக்கா வாறகிழமை சோட்காண்ட் எக்ஸாம் -" என்றாள் வனஜா,

ராகினி எழுந்து அறைக்குள் போனாள் குளித்துவிட்டு மாற்றுவதற்காக உடைகளை கொடியில் தெரிவு செய்த போது அலுமாரியின் ஒருபுறத்தில் ஒட்டப்பட்டிருந்த அந்த சிறுபிரசுரம் கண்களில் தெரிந்தது.

நெஞ்சில் இனம் புரியாத ஒரு தவிப்பு உண்டானது,

"தம்பி என்றால் மனத்துக்குள் எடுத்த உடுப்புக்களுடன் அதனைக் கிட்டப் போய்ப் பார்த்தாள். தோற்றம் மறைவுக் குறிப்புக்களுடன் அவன் சார்ந்திருந்த அமைப்பு வெளியிட்டு இருந்த கண்ணீர்ப் பிரசுரம் அது.

எண்பத்தி ஐந்தில் இந்த மண்ணில் இப்போதும் உயிர் வாழ்கின்ற மண்ணின் மைந்தர்களுக்காக குருதி சொரிந்து மரணித்த எத்தனையோ இளம் கருத்துக்களில் ஒருவனாக ராகினியின் தம்பி கணநாதனும் மரணித்துப் போனான்.

பத்தாம் வகுப்பு பாஸ் செய்துவிட்டு உயர்தரத்திற்காக காத்திருந்த அவன் இந்த மண்ணின் அவலங்களைக் கண்டு கலங்கி தன்னுள் போராடி கடைசியில் காணாமலே போய் விட்டான்.

ராகினிக்கு தொண்டை அடைத்தது, ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தி எட்டாம் ஆண்டு பிறந்து இன்று வரை இந்த மண்ணில் வாழ்கின்ற எங்களுக்கு கிடைக்காமல் போய்

உள்ள நிரந்தர நிம்மதிக்காக எத்தனை கணநாதன்கள் பலி யாகி விட்டார்கள்?

அவள் உடம்பு பதறியது, வேறு ஆண் சகோதரங்கள் இல்லாத நிலையில், இருந்த ஒரே ஒரு தம்பி, தானே தூக்கி வளர்த்து, மாமர நிழலில் இருந்து விளையாட்டுக் காட்டி சோறு தீத்தி வளர்த்த தம்பி, பள்ளிக்கூடம் போகும் போது தன் கையைப் பிடித்துக் கொண்டு சிரித்து சிரித்து வந்த தம்பி, அக்கா! அக்கா' என்று கூவியழைத்து ஓடிப் பிடித்து விளையாடிய தம்பி என்ன விதத்தில் தன்னை அழித் துக் கொண்டான்.

தலையிலே ஓங்கியடித்து குழறி அழ வேண்டும் போல மன உணர்வு எழுந்தது. ஆனால் முடியவில்லை. வேதனைகளை அழுது தான் தீர்க்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை

இந்த ஏப்ரல் மாதத்துடன் அவன் மறைந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன, ஆனால் அவன் இந்தக் குடும் பத்து உறவுகளை ஒதுக்கி விட்டு மக்களுக்காக வாழத் தொடங்கி ஏழெட்டு வருடங்கள் இருக்குமா?

அவனது படத்தை பெரிதாக என்லாஜ் செய்து வீட் டின் முன் விறுந்தையில் கொழுவி மாலையும் போட்டு வைத் தார்கள், எண்பத்தியேழு ஒக்டோபரில் நடந்த அனர்த்தங் களின் போது வீடு எப்படி உடைந்ததோ வேலி எப்படி சித றியதோ! வளவு எப்படி சூறையாடப் பட்டதோ! அதே போல கணநாதனின் படமும் உருத்தெரியாமல் போய் விட் டது, திரும்பவும் அவன் படத்தினை பழைய இடத்தில் வைக்கண்டும் என எத்தனையோ தடவை 'நினைத்தாகிவிட் டது, இன்னும் சரிவரவில்லை.

ராகினியின் மனம் திரும்பத்திரும்ப பழசையே வருடுவ தால் பழைய தோப் போல வலி எடுத்தது. அது கராண மகா அனுபவித்துக் குளிக்கும் குளிப்பைக்கூட சரியாக குளிக்க முடியவில்லை.

குளித்துவிட்டு அறைக்குள் வந்த போது வனஜா புறப் படுவதற்கு தயாராகி நெற்றில் பொட்டு வைத்துக் கொண்டு இருந்தாள்

''என்னக்கா முகம் ஒருமாதிரியாய் இருக்கு''

''என்ன மாதிரிஇருக்கு''

''குளிச்சப் பிறகும் முகம் வாடிப்போய்-''

ராகினி அலுமாரியின் பக்கத்தினை காட்டினுள் வனஜா வும் அதில் ஒட்டப் பட்டிருந்த கணநாதனின் பிரசுரத்தி னைப்பார்த்தாள், அவள் முகமும் மாறியது, அவளும் மௌன மானுள், பிறகு இருவரும் பேசிக் கொள்ளவில்லை.

ராகினி தலையிருந்து சாறிக்கு மாறி லேசாகப் பௌடர் இட்டு பொட்டும் வைத்து மணிக்கூட்டினை அணிந்து கொண்டு வெளியே வந்த போது வனஜா சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் ''வாவன் பிள்ளை'' என்று குசினிக்குள் இருந்த அம்மா வசந்த மலர் கூப்பிட்டாள்.

''வாறன் அம்மா-'' என்றபடி குசினிக்குள் புகுந்தாள் ராகினி.

தட்டத்தில் இடியப்பத்தை அடுக்கி சொதியையும் விட்ட அம்மாவை அவள் நுட்பமாகப் பார்த்தாள்.

வசந்த மலருக்கு ஐம்பத்தி இரண்டு வயதுக்குமேல் இருக் கும், ஆனுல் தோற்றத்தில் அறுபத்தைந்து எழுபது வயது மதிக்கலாம், முதுகு சற்றே வளைந்து தலை முழுமையாக நரைத்து முகத்தில் கவலைகள் வளையங்களாக அச்சுப் பதித் திருந்தன, வாடிப் போன கத்தரிக்காய் போல் உடல் சரு மம் நன்றுகச் சுருங்கி, வெளிறிப் போன உள்ளங் கைகளும் கரிபடர்ந்த கை விரல்களுமாக தளர்ந்திருந்தாள், காற்று ஓங்கியடித்தால் தள்ளாடும் பல வீனமான நிலை.

அம்மா பாவம் என்னமாதிரி உருக்குலைந்து போனுள் ஐயாவின் சுருட்டு உழைப்பில் மூன்று பிள்ளைகள் கொண்ட

குடும்பத்தைப் பாதுகாப்பாக உருவாக்கி தன் உடலை கரைத்தது தான் அம்மா இதுவரை கண்டது.

அழகும் கம்பீரமும் மன உறுதியும், திடகாத்திரமும் கொண்ட அம்மா, யாருடனும் வம்பு பேசப் போகாத தன்மை கொண்ட அம்மா, கடைசியில் இப்படி ஆகி விட்டாளே.

''என்ன பிள்ளை இடியப்பத்தை சாப்பிடாமல் பிசைந்து கொண்டு இருக்கிறாய்.''

''சா....'' என்றாள் ராகினி.

மூன்று பரப்பு வெறும் வளவுக் காணியும் சில நகைகளும் மூவாயிரம் ரூபாய் காசுமாக சுருட்டுத் தொழிலாழியாகிய வல்லிபுரத்தை மணம் முடித்த அம்மா ஐயாவின் உழைப்பின் ஊடாக இந்தச் சின்னவீட்டை கட்டியதே பெரியவேலை.

அம்மா கணநாதனையே மலைபோல நம்பியிருந்தாள் அவன் மாறிப் போனதில் இருந்து நிலைகுலைந்து போன அவள் ராகினிக்கு கலியாணம் ஒன்றும் சரிவராமல் போகத் தொடங்க முற்றிலுமாக உடைந்து விட்டாள், கவலைகள் வேதனைகள் மனத்தை மட்டுமல்ல உடலைக்கூட நன்றாக அரித்தெடுத்து விட்டன.

''அக்கா நான் ரெடி; நீ என்ன மாதிரி வாறியோ-'' என வெளி விறுந்தையில் இருந்து வனஜா குரல் கொடுத்தாள்.

ராகினி யோசனையிலேயே அமிழ்ந்திருந்தாள் ''என்ன பிள்ளை அவள் ஏதோ கேட்கிறாள். நீ பேசாமல் இருக்கிறாய்'' என அம்மா ராகினியை சுய நிலைக்கு தள்ளினாள்.

''என்ன வனஜா -''

''நான் போகப் போறன் - நீயும் வாறியோ-'' என்றாள் மீண்டும் வனஜா.

"நீ போ நான் வாறன்-" என ராகினியின் பதில் வெளிப்பட்டது.

துள்ளிக்குதித்துக் கொண்டு வந்த வனஜா, "அம்மா போட்டுவாறன், அக்கா போட்டு வாறன் - " என்று சொல் லிக் கொண்டு விடைபெற்றுப் போனாள்.

மூன்பு என்றால் சின்ன தகரக் கேற்று திறந்து மூடும் சத்தம் கேட்கும். மதிலோடு கேற்றும் தொலைந்துபோக அந்த சத் தமும் தொலைந்து போய் விட்டது.

குசினியின் பதிந்த ஜன்னல் ஊடாகப் பார்க்கும் போது வனஜா விரைவாக நடந்து போவது தெரிந்தது.

"உவளுக்கும் இருபத்தி நாலு வயது முடியப் போகுது இன்னும் என்ன படிக்கிறாள், மாறி மாறி என்னத்தைத் தான் படிக்கிறாள், ஒரு வேலையாவது கிடைத்தால்-" என்று தாய் முணு முணுத்தாள்.

"அவள் வீண் பொழுதைப் போக்காமல் படிக்கிறாள், படிக்கிறது நல்லது தானே, எப்போதாவது பிரயோசன மாக இருக்கும், இப்ப படிக்கிற தமிழ் தட்டெழுத்து சுருக் கெழுத்து பாஸ் பண்ணினால் கடைசி பிறை வேற்றாகத் தன் னும் வேலை செய்யலாம்" என்றாள் ராகினி.

"வயதெல்லே போகுது ." என்ற அம்மாவைப் பார்த்து ராகினி வேடிக்கையாகச் சிரித்தாள், தொடர்ந்து.

"அம்மா வயது வயது என்று என்னத்தைக் கண்டீங் கள், எனக்கு எத்தினை வயது நீங்கள் அந்த லைநாளையீ பதி னேழுவயதில் கலியாணம் முடிச்சதை வைச்சுக் கொண்டு எல்லாத்தையும் அளக்காதேங்கோ.

அம்மாவின் முகம் மாற்றம் அடைந்தது.

"உனக்கு முப்பத்திநாலுவய தெண்டு எனக்கு சொல் லியே தெரியும் என நினைக்கிறாய், நீ வேலைசெய்தும் மாதச் சம்பளம் எடுத்தும் லட்சங்கள் இல்லாமல் கலியாணம் செய்

யேலாமல் என்று, எனக்கு இருக்கிற கவலே உனக்கு தெரியாதே, கொய்யாவின்ரை உழைப்பிலே இரண்டு அறையும் விருந்தையுமாய் இந்த வீட்டைக் கட்டவே என்ன கஸ்டப் பட்டு இருப்பம் என்று தெரியுமோ-'' என்று சொன்ன அம்மாவின் கண்கள் கலங்கின.

ராகினிக்கு சட்டென்று கோபம் வந்தது, சாப்பிட்ட தட்டத்தை ஓங்கித் தள்ளினுள், கையை உதறிக் கொண்டு இருந்த இடத்தை விட்டு எழும்பினுள்.

''அம்மா - உங்கடை புலம்பலேக் கொஞ்சம் நிப்பாட்டுங்கோ, இப்பநான் எனக்கு கலியாணம் செய்து வைக்கேல்லே எண்டே சொன்னனுன், நான் ஏதோ பிழையாய் கதைச்சுப் போட்டன் என்ட மாதிரி நீங்கள் புலம்பத் தொடங்கியாச்சு'' என்று வேகமாகக் கூறியபடி குசினியை விட்டு வெளியே வந்து கைகழுவினுள்.

''பிள்ளே நான் உன்னேப் பிழை சொல்லேல்லே, என்ரை மன வேதனேயைச் சொன்னனுன், பேசாமல் வந்து சாப்பிடு'' என்று அம்மா சொல்லி முடிப்பதற்குள் தோளிலே பாக்கும் கையில் குடையுமாக ராகினி புறப்பட்டு விட்டாள்.

அந்த நேரத்தில் வளவுக்குள் வந்தார் கந்தையா மாஸ்டர், சைக்கிளே நிறுத்திய அவர் ராகினியைப் பார்த்து.

''அவசரமோ - பிள்ளே'' என்ருர்.

''என்ன - '' என்ற ராகினியின்குரலில்கடுமை தெரிந்தது

''இல்லே - ஒரு கலியாண அலுவலாய் கதைக்க வந்தனுன்.''

ராகினியின் கோபம் முன்பைவிட அதிகமாக மூண்டது

''உங்களுக்கு வேறை வேலேயில்லேயோ'' என்று சத்தம் போட்டுக் கொண்டு வளவை விட்டு வெளியேறினுள்.

கந்தையர் ஆச்சரியத்துடன் வசந்தமலரைப் பார்த்தார் ''அவள் ஏதோ கோபத்தில நிற்கிருள் நீங்கள் வாங்கோ மாஸ்டர் - '' என்ருள் அம்மா.

## 2

ஸ்ராவ்றூம் அமைதியாக இருந்தது. ராகினியையும் மிஸிஸ் சந்திரா சண்முகலிங்கத்தையும் தவிர வேறுயாரும் இல்லை. மெதுவாக இரைந்து கொண்டிருந்த பானின் காற்றோட்டத்தில் லயித்தபடியே மிஸிஸ் சந்திரா சண்முகலிங்கம் பேப்பரில் மூழ்கிப் போயிருந்தாள்.

சில வேளைகளில் ஸ்ராவ்றூம் அமளிப்படும், பல் வேறு வகை வாதப் பிரதி வாதங்கள் சலசலப்புகள் - கலகலப்புகளில் ஆழ்ந்து போயிருக்கும்.

மிஸ், வானதி வைத்திலிங்கமும், மிஸ் செல்வராணி சிவலோகநாதனும் மிஸிஸ் அங்கையற் கண்ணி அருட்பிரகாசமும் வேறுசிலரும் சேர்ந்து விட்டால் அது ஸ்ராவ் றூம் என்பதையும் - இருக்குமிடம் கல்லூரி என்பதையும் ஞாபகப் படுத்த வேண்டியிருக்கும்.

பிள்ளைகளை வழி நடத்த வேண்டியவர்கள் வழி தவறி பேசுவதையும், பேசுவதாக நினைத்துக் கத்துவதையும் கேட்க கேட்பவர்களுக்குத் தான் சங்கடமாக இருக்கும் அவர்களுக்கு ...?

அவர்கள் இல்லாத சூழ்நிலை ராகினிக்கு மனத்துக்கு பிடித்திருந்தது, அவர்கள் இருந்தால் கதை எங்கேயோ எல்லாம் சுற்றிச் சுழன்று கடைசியில் ராகினியின் கலியாண விடயத்தில் வந்து முடிந்து கிண்டல் கதைகளும், ஆரோகண அவரோகண சிரிப்புமாக போய்விடும்.

கதிரையில் நன்றுச்சரிந்து இருந்து கொண்டு ஆறுதலாக இருக்க உடம்புக்கு நன்றுத் தான் இருந்தது, ஆனால் மனம்.

விளையாட்டு மைதானத்தின் ஒரு புறத்தில் இருந்த புளிய மரத்தின் கீழ் ஒரு வகுப்பு மாணவிகள் குழுமியிருந் தார்கள், ரீச்சர் கதிரையில்-

மைதானத்திற்கு அப்பால் தெரிந்த வீதியில் சனநட மாட்டம் மிகக் குறைவு, வயதான பெண்மணி ஒருத்தி தலை யில் கடகத்துடன் மிக மெதுவாக நடந்து கொண்டிருந் தாள், இயலாமை நடையில் தெரிந்தது.

அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் ராகினிக்கு அம்மா வின் நினைவு வந்தது. கூடவே மின்னல் அடித்தாற்போல காலையில் நடந்த சம்பவமும் வெளிப்பட்டது.

அம்மாவுடன் கோபித்தது சரிதானு? அந்தக் கோபத் துடன் கந்தையா மாஸ்டர் மீது பாய்ந்ததும் முறையா? யோசித்துப் பார்க்க தான் செய்தது பிழை தான் என் பதை உணர முடிந்தது;

அம்மாவுக்கு எவ்வளவு கவலைகள் உயிராக நேசித்த ஒரே ஒரு மகன் மறைந்தது மட்டுமல்ல முப்பத்தி நான்கு வயதையும் தாண்டி கலியாணம் முடிக்காமல் இருக்கும் தன்னை நினைத்தும், அடுத்ததாக காத்திருக்கும் வனஜாவை யும் நினைத்து எப்படி எப்படியெல்லாமோ யோசித்து யோசித்து எவ்வளவு மனக் கஸ்டங்களை அனுபவித்துக் கொண்டு இருப்பாள், அவற்றினை முழுமையாகப் புரிந்து கொண்ட நானே அவவைக் கோபித்துக் கொண்டால்?

ராகினிக்கு மனம் துடித்தது, அம்மா தன்னுடைய மன நிலையில் நின்று காலையில் அப்படிச் சொன்னுல் அதை புரிந்து கொள்ளாமல் ஏன் கோபித்துக் கொள்ள வேண்டும்.

நாலைந்து வருடங்களாக இப்படியான வெடுவெடு மனப் பாங்கு என்னில் வந்துவிட்டது? என்னை அறியாமல் என் னில் ஊடுருவிக் கொண்ட இந்த உணர்வுகளுக்கு நானே பலியாகிப் போய் விட்டேனே என நினைக்கும் போது சங் கடமாக இருந்தது.

எதனுல் இப்படியான மன மாற்றம் நிகழ்ந்தது, கலியாணம் முடியாததால் ஏற்பட்ட விரக்தியா? சில வேளை௳ளில் யாருக்காவது எதாவது வார்த்தைகளால் பதிலடி கொடுத்தால் அவர்கள் இப்படித்தானே நினைப்பார்கள் எத்தனைபேர் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எவ்வளவு தடவை நக்கல் அடித்துள்ளார்கள்.

பேப்பர் படித்துக் கொண்டிருந்த மிஸ்சிஸ் சந்திரா சண்முகலிங்கம் ஒரு தடவை ராகினியை நிமிர்ந்து பார்த்து விட்டு பேப்பரோடு மீண்டும் ஐக்கியமானுர்.

கல்லூரியிலோ' பஸ்சிலே, தெருவிலோ, வீட்டிலோ எந்த இடமாக இருந்தாலும் சில வேளைகளில் இந்த வெடுவெடுப்பு பதிலடி தேவையாக இருக்கின்றது, இல்லாவிட்டால் சுய பாதுகாப்பு தேடிக் கொள்வது மிகக்கஸ்டமாகி விடும்.

வனஜா கூட ஒரு தடவை "ஏன் அக்கா ஆட்களில பாயிறுய்'' என்று கோட்டும் இருக்கின்ருள்

சினிமாப் பாடல் ஒன்றை முணு முணுத்துக் கொண்டு மிஸ்சிஸ் அங்கையற்கண்ணி அருட்பிரகாசம் ஸ்ராவ் றூமிற்கு பிரசன்னம் தந்தாள், ராகினியை விட இரண்டு வயது குறைவு, அதீத மேக்கப் எவருடைய கண்களும் புகுந்து விளையாடக்கூடிய அளவு உடம்பின் பகுதிகளைக் காட்டும் வண்ணம் ஆடை அணியும் வழக்கம்

வசதியான குடும்பத்தில் பிறந்து பல்கலைக் கழகம் சென்று பின்னர் உயர்ந்த இடத்தில் திருமணம் செய்து எதிலுமே மேன்மை பெற்று இருந்ததால் ஏனையவர்களை மதிப்பது கஸ்டமாக இருக்கிறது

உயர் தொழில் காரணமாக மிஸ்டர் அருட்பிரகாசம் வெளிநாடு யோய் விட்டார், பிள்ளைகளும் இல்லாதபடியால் அங்கையற்கண்ணி பாடு. பரவாயில்லை

"என்ன ராகினி தனிமையில் இனிமை'' என்று கேட்டபடி ராகினியின் அருகில் வந்து அமர்ந்தாள் அவள்.

அவள் போட்டிருந்த பெவியூம் வாசம் மூக்கைக் கஸ்டப் படுத்தியது, ராகினிக்கு தன் தனிமை குலைக்கப் பட்டதால் வெறுப்பு உண்டானது.

''இப்ப ப்றி - பீரியட்''

'அது தெரியும் கிளாஸ் இருந்தால் இஞ்சை ஏன் இருக்கப் போறீர் அதுசரி இண்டைக்கு நல்ல சாறிதான் கட்டியிருக்கிறீர்''

உண்மையாகத்தான் சொல்லுகின்றுளா அல்லது கிண்டலா என்பது புரியவில்லை, மெதுவாக புன்னகைத்து.

''பகிடியே -'' ஒரு நாளைக்கு ஒரு சாறி கட்டுற நீங்கள் - என்னைப் பார்த்து நல்ல சாறி எண்டே சொல்லுறியள்-''

அங்கையற் கண்ணி புன்னகைத்தாள், முகத்தில் பெருமிதம்தொனித்தது.

''ஒமடியப்பா- அந்த மனிசன் அங்கையிருந்து நெடுக சாறியள் எடுத்து அனுப்பிக் கொண்டு இருக்கு, எனக்கு இஞ்சை இருக்கிறதைக் கட்டவே நாள் காணுது, அவருக்கு வேண்டாம் வேண்டாம் எண்டு எழுதினுலும் கேட்கிருர் இல்லை.' என அங்கையற்கண்ணி சொல்லிக் கொண்டு போனுள்.

பேப்பர் படித்து முடித்த மிஸ்சிஸ் சண்முகலிங்கம் பேப்பரை மடித்து வைத்துக் கொண்டே.

'உம்மட்டை கனக்க இருந்தால் அதை இல்லாத ஆட்கள் ஆருக்காவது கொடுக்கலாம் தானே அங்கையற் கண்ணி''

அங்கையற்கண்ணியின் முகத்தில் மெல்லிய மாற்றம் முளைவிட்டது.

''கொடுக்கிறது தான் சொந்தக் காரருக்கு எவ்வளவு தான் கொடுத்தாலும் அடங்காது, நாங்கள் எப்படித்தான்

அள்ளிக் கொடுத்தாலும் அதுகள் வாங்கிக் கொண்டே இருக்கும், என்ற அங்கையற்கண்ணி முகத்தைச் சுழித்தாள், பிறகு;

"எனக்கு உதில நல்ல அனுபவம், வீட்டுக்கு வராத ஆட்கள் எல்லாரும் என்ரை மிஸ்டர் வெளியில இருந்து வந்திட்டார் எண்டு கேள்விப்பட்ட உடனேயே தட்டிச் சுத்திக் கொண்டு போக வந்திடுவினம்."

"உண்மையான அன்போடை வாற ஆட்களையும் நீங்கள் சிலவேளை பிழையாக நினைக்கலாம் தானே." மிஸ்சிஸ் சண்முகலிங்கம் கேட்டார்.

"நல்ல அன்பும் ஆதரவும், எங்கடை ஆட்களை எனக்குத் தெரியாதே, மற்றவை நல்லாய் இருக்கிறதைக் கண்டு பொறாமையால் வெந்து சாகிற ஆட்கள் -" கோபத்துடன் அங்கையற்கண்ணி சொன்னாள்.

ராகினி மௌனமாக இருந்தாள். அங்கையற்கண்ணியின் குணாதிசயங்கள் ஒன்றும் புதினமானதல்ல.

வாழையடி வழையாக எங்கள் வழித் தோன்றல்களில் பெரும் பாலோரின் குணாதிசயங்கள், நல்லன வற்றை நாங்களே அணிய வேண்டும், வசதிகள், வாய்ப்புக்கள், வளங்கள் எல்லாமே எங்களை விட்டால் வேறுயாரிடம் இருக்க முடியும்.

மாபெரும் கோட்டை கட்டி அதிலே கொடியும் ஏற்றி உச்சியிலேநின்று ஏனைய மனித ஈனப் பிறவிகளைப் பார்த்துக் கட்டளையிட வேண்டும், அவர்கள் இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு சிரம் தாழ்த்தி வணங்கி ஏவல் செய்ய வேண்டும், இந்தப் பரம்பரையில் வந்தவள் தான் அங்கையற்கண்ணியும் என ராகினி நினைத்தாள்.

"மற்றவை பொறாமைப் பட்டு என்ன செய்யிறது உங்களை -" எனக் கேட்டார் மிஸ்சிஸ் சண்முகலிங்கம்.

அடக்கமாகவே காணப்படும் மிஸ்சிஸ் சண்முகலிங்கம் கண்டபடி கதைக்க மாட்டார் ஆனல் கதைக்க வேண்டிய நேரத்தில் கதைக்கமாலும் இருக்க மாட்டார்.

''உங்களுக்கு அது விளங்காது மிஸ்சிஸ் சண்முகலிங்கம் எங்களை மாதிரி வசதியாக இருந்தால் அதுவிளங்கும், கஸ்டப் பட்டு சீவிக்கிற ஆட்கள் தங்களை மாதிரி நாங்களும் கஸ்டப்பட்டு சீவிக்க வேணும் என்று விரும்பினம், நாங்களும் அவையள் மாதிரி பிச்சைப் பெட்டிகாவிக் கொண்டு திரிஞ்சால் என்ன எண்டு நினைக்கினம் கேடு கெட்ட சாதியள் -'' என்ருள் அங்கையற்கண்ணி.

அவள் முகம் சிவந்திருந்தது, உதடுகள் துடித்தன

''அங்கையற்கண்ணி நீர் தேவையில்லாமல் கோவிக்கிறீர் போல -''என்று மிஸ்சிஸ் சண்முகலிங்கம் சொன்னதை அங்கயற்கண்ணி உள்வாங்கிக் கெகண்டதாகத் தெரியவில்லை.

''இஞ்சை இருந்து இந்த செம்பாட்டு மண்ணைக் கிண்டிக்கொண்டு இருக்கிற ஆட்கள் வெளிநாடுகளுக்குப் போய் வடிவாய் உழைச்சு தங்கடை ஆசைகளை தீர்க்கலாம் தானே அதை விட்டுப் போட்டு தாங்களும் நிம்மதியாய் இராமல் மற்றவையளையும் நிம்மதியாய் இருக்க விடாமல் ---''என்று சொல்லிக் கொண்டுபோன அங்கயற்கண்ணியின் கதைகளால் ராகினியின் உடலில் பரபரப்பு ஏற்பட்டது.

மிஸ்சிஸ் சண்முகலிங்கத்திற்கும் ராகினிபோல கோபம் ஏற்பட்டு இருக்கவேணும்.

''உதுகள் உம்மடை அபிப்பிராயங்கள், வெளியிலை சொல்லா தேயும்'' என்ருள் காட்டமாக.

''ஏன் வெளியில சொன்னல் என்னவாம், இஞ்சை எது ஒழுங்காய் நடக்கு, எல்லாமே எப்படி சீர் கெட்டுப் போக்சு

உரிமைப் போராட்டம் எண்டு சொல்லி எங்கடை தலை யிலை மண்ணை அள்ளிப் போட்டம், நடந்தது என்ன? எல் லாம் நாசமாய்ப் போச்சு.''

''இப்ப நீங்கள் என்ன சொல்ல வாறியள்.'' எனக் கேட் டாள் ராகினி.

மிஸ்சிஸ் சண்முகலிங்கம் ஆச்சரியமானார்.

''நாங்கள் ஓண்டும் சொல்ல வரேல்லை. அதுவும் உங் களுக்கு ஏதும் சொல்லலாமே நீங்கள் பெரியதியாகிகள் பரம்பரை ஆட்கள்'' என்ற அங்கையற்கண்ணியின் கேலி நிறைந்த வார்த்தைகள் சட்டென்று ராகினியை கோபத் தின் உச்சத்துக்கு கொண்டு சென்றன

இந்தமண்ணை மண்ணையே நம்பியிருக்கும் மக்களை அவர் களின் ஏழ்மையை கிண்டல் செய்யும் அங்கையற்கண்ணி போன்றவர்களை?

ராகினிக்கு ஆத்திரம் அளவு கடந்த நிலையில் இருந்த அந்த நேரத்தில்கூட தகப்பனார் வல்லிபுரம் சொன்னசில விடயங்கள் ஞாபகத்திற்கு வந்தன.

அந்தக் காலத்தில் ஊரிலே ஒரு பரியாரி இருந்தார், ஊரில் வேறு பரியாரி இல்லாத படியால் அவரிடம் தான் ஆட்கள் போவார்கள் வைத்தியத்திற்கு, அவர் அறவிடும் பணம் அந்தக் காலத்திலேயே கட்டுப்படியாகாது.

பெரும் நோய்களுக்கு வைத்தியம் செய்பவர்கள் தங்கள் நிலங்களைக்கூட அவருக்கு எழுதி வைத்த சம்பவங்கள் அனே கம், பொருளாதார காரணங்களால் நலிவுபெற்று தாழ்த் தப்பட்ட மக்கள் மருந்துக்கு வந்தால் அவர் கையில் துணி போட்டுத்தான் நாடி பிடித்துப் பார்ப்பார், அப்படி துணி போட்டு நாடி பிடித்துப் பார்த்துப் பார்த்து அவர் சேர்த் துவிட்ட காணிகள் ஏராளம், அறியாமை, போதிய படிப் பறிவு இல்லாத தன்மை யாரையும் நம்பிவிடும் தன்மை கொண்ட அந்த மக்கள் பரியாரி போன்றவர்களை பெரி

தாக நம்பினுர்கள், விளைவு பரியாரி காணிக்காரன் ஆனது தான் மிச்சம்.

பரியாரியின் பரம் பரையில் சிலர் இப்போதும் தங்களை விட்டவர்கள் யார் என்ற நினைப் போடு ஊர் முழுக்க காணிகள் வியாபித்து இருக்க, கோலோச்சு கின்றுர்கள், தங் கள் காணி விடயத்தில் மட்டும் ஆண்ட பரம்பரை என்ற பெருநோக்கோடு.

அந்தப் பழைய சனங்களின் வழிவந்தவர்கள் இப் போதும் வறுமையில் வாடிக் கொண்டு பரியாரியின் பரம் பரையினரின் காணிகளைக் குத்தகைக்கு எடுத்து தோட்டம் செய்கின்றுர்கள்.

''எங்கடை ஐயா வின்ரை காணியும் இப்பிடித்தான் போனது, பிள்ளை ''என்று ஐயா சொன்னதை இப்போதும் நினைத்துக் கொண்டாள் ராகினி.

''இந்தக் கேடுகெட்ட மனுசரோடை இந்த எளிய மண் ணில சீவிக்காமல் நானும் என்ரை மிஸ்டரோடை வெளி யிலை போய்ச் சேர்ந்திடலாம், ஆனுல் இஞ்சை இருக்கிற காணி பூமியள் வீடு சொத்துக்களை விட்டிட்டுப் போகேலா மல் இருக்கு'' என்று சொன்ன அங்கையற் கண்ணியைப் பார்த்து மிஸ்சிஸ் சண்முகலிங்கம் சிரித்தார்.

ராகினிக்கும் அவர் சிரித்தது நன்றுகப் பிடித்தது, கல் லூரி மணி அடித்தது. ராகினியும் மிஸ்சிஸ் சண்முகலிங்க மும் ஸ்ராவ் றூமை விட்டு வெளியேறி சேர்ந்து நட ந் தார்கள்.

''என்னத்திலையோ தொடங்கி எதிலையோ வந்து நிற் கிறு அவ சுதாலையோ குழம்பி நிற்கிறு போல-'' என்றுள் ராகினி.

''உண்மையிலை அவ குழப்பித்தான் போய் இருக்கிறு சமூகத்தின்ரை உயர் மட்டத்தில் எப்பவும் இருக்க விரும் புற ஆட்களாலை சமூகத்திலை ஏற்படுகின்ற மாற்றங்களை

- மாற்றங்கள் ஏற்படா விட்டாலும்கூட அந்த மாற்றங்கள் வேணும் எண்டு விரும்புற ஆட்களை கண்டால் கடும் சினம் பொங்கிக் கொண்டு வருகுது அவ எதையோ சொல்ல நினைக்கிரு, அதை நேரடியாக வெளியில் சொல்ல முடியேல்லை, அதாலதான் தேவையில்லாமல் சொந்தக் காரரை இழித்துப் பேசுகின்ரு,'' என மிஸ்சிஸ் சண்முகலிங்கம் பதில் சொன்ஞள்.

''கேடுகெட்ட சாதியள் என்றும் எளிய மண்ணும் என்று சொல்லேக்கை சரியான ஆத்திரம் தான் வந்தது, ஆனுல் திமிர் குணத்தோடை கதைக்கிற அவவுக்கு பதில் சொல்லத் தொடங்கினுல் கடைசியிலை கண்டபடி கதைக்க வேண்டிவரும், அதுதான் நான் கேட்டும் கதைக்கேல்லை.''

''என்னதான் போராட்டம் நடந்து என்ன? எத்தனை உயிர்களைப் பலி கொடுத்து என்ன எங்கடை சில ஆட்களின்ரை அடிப்படை குணுதி சயங்கள் மாறேல்லை, அவையளுக்கு அந்தக் குணங்கள் மாறுவதும் கஸ்டம் தான்'' என்ருர் சலிப்புடன் மிஸ்சிஸ் சண்முகலிங்கம்.

மத்தியானம் இரண்டு மணிக்கு கல்லூரி முடிந்ததும் பஸ் ஸ்ராண்டை நோகி நடக்கும் போது ராகினிக்கு மனத்தில் அமைதி இருக்கவில்லை.

வழக்கமாக கூடவரும் சுகந்தி ரீச்சர் கூடவே வந்தார் இரண்டு பேரும் தான் பஸ்சுக்கு சேர்ந்து நடப்பார்கள். ஏனையவர்களுடன் சேந்து போவது ராகினியை பொறுத்த வரை அபூர்வமான விடயம்.

கும்பல் கும்பலாக சீருடை தரித்த மாணவிகள் போய்க் கொண்டிருந்தார்கள். சுறுசுறுப்பான விழிகள் வஞ்சக மின்லாத வதனங்கள், அவர்களை அள்ளி நிறைத்துக் கொண்ட சிறிய மினிவான்கள், ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்கள்.

வெய்யில் நன்ருக வதைத்தது, குடை பிடித்தாலும் சுள்ளிடும் வெய்யில், தலை வேறு வலித்தது.

"முந்தி மூன்றரைக்கு பள்ளிக்கூடம் விடேக்க வெய்யில் வேகம் குறைவாய் இருக்கும், இப்ப இரண்டு மணி வெய்யிலிலை வேக வேண்டி இருக்கு" என்ருர் சுகந்தி ரீச்சர்.

"எல்லாமே தலைகீழாகி விட்டுது, இதுதான் எங்களோடை ஒத்துழைக்குது, காலநிலை கூட எங்களுக்கு எதிரியாய்ப் போச்சு" பெருமூச்சுடன் ராகினி சொன்னுள்.

பிரதான வீதியில் இருந்த அந்த பஸ்ஸ்ராண்ட் மாணவிகளால் பூக்கூடையாய் இருந்தது, முன்பு ஒரு தகரக்கொட்டகை, அதிலே இருந்தது - அடர்த்தியான கிளைகள் பரப்பிய வாகை மரமும் ஒரமாக நின்றது இப்போது இரண்டையுமே காணேம், காணமல் போன பலவற்ருேடு அவையும் போய் விட்டன.

முன் பொருதடவை எண்பத்தி நாலா எண்பத்தி ஐந்திலா - ஹெலி கொப்டர் ஒன்று சுற்றிச்சுற்றி சுட்டபோது மாணவிகள் ரீச்சர்மார் உட்பட அந்த மரத்தின் அடியில் பதுங்கி நின்றுதான் தப்பினுர்கள், அப்போது தகரக் கொட்டகையில் ஒட்டைகள் விழுந்தனவே தவிர முழுமையாக இருந்தன.

ஆனல் இந்த வருடத் தொடக்கத்தில் கல்லூரிக்கு வந்தபோது தகரக்கொட்டகை சிதறுண்டு போயிருந்தது, வாகை மரமும் மூழியாகிப் போய் விட்டது சரிந்துபோன மரக்கிளைகளை விறகுக்காக கொத்திக் கொண்டு இருந்தார்கள்.

இப்போது பிள்ளைகள் நிற்பதற்கு நிழல் இல்லாமல் குடைகளைப் பிடித்தும், வதங்கிக் கொண்டு நிற்கிருர்கள். ராகினியும் சுகந்தியும் குடைகளுடன் ஒரமானுர்கள்.

நாலேந்து வாகனங்கள் படுவேகத்தில் பறந்தன, அதில் போனவர்கள் மாணவிகளைப் பார்த்து கையசைத்தார்கள். சைக்கிளில் இரண்டுபேர் சிகரெட் புகையைக் கக்கிக் கொண்டு கண்ணடித்து விட்டுப் போனார்கள்.

ராகினி முறைத்தாள்.

''ஏன் முறைக்கிறாய்'' என்று கேட்டாள் சுகந்தி.

''காறித்துப்பினாள் - துப்பல் அவன்களுக்கு பிடிக்குமா? எனக் கேட்டாள் ராகினி.

## 3

கா ற்றில் புழுதிமணத்தது. ஒழுங்கைவெறுமையாகிப் போய் இருந்தது எதிர் வீட்டில் கும்பலாக சேர்ந்திருந்து அவர்கள் உரையாடுவது ரி. விச் சத்தத்தையும் மீறிக் கேட்டது பக்கத்து வீட்டுக் கன்றுக்குட்டியின் கழுத்து மணி நாதமிசைத்தது, பின்வளவில் கோழிகள் ஆரவாரித்தன.

தயங்கித்தயங்கி இருள் பரவிக் கொண்டிருக்க நீலவானம் மங்கத் தலைப்பட்டு இருந்தது.

வெளிவிறாந்தை சாய்மனைக் கதிரையில் வல்லிபுரத்தார் ஒய்வாகப் படுத்திருந்து சுருட்டின் சுவாசத்தில் தன்னை மறந்திருந்தார், குசினி முன் திண்ணையில் வசந்தமலர் சாய்ந்திருக்க வனஜா விறாந்தைச் சுவரில் உடம்பைச் சரித்து கொண்டு தமிழ் நாட்டில் ஒரு ரூபாயும் இங்கு ஆறு ரூபாயும் விற்கும் மாத நாவலின் கதாநாயகனுடன் ஐக்கியப் பட்டு இருந்தாள்.

ராகினி விருந்தை முன்படியில் அமர்ந்தபடி தையல் விட்டுப்போன ப்ளவ்ஸ் ஒன்றினைத் தைத்துக் கொண்டு இருந்தாள்.

கைகள் வேலை செய்தாலும் மனம் எங்கேயோ நின்றது, இரண்டு நாட்களாக தாயுடன் அதிக பேச்சு வார்த்தை யில்லை, தேவையான போது ஒன்றிரண்டு வார்த்தைகள்

ஆனால்-

அம்மா எதையோ கதைப்பதற்கு தருணம் பார்த்து தனக்குள் முறுகிக் கொண்டு இருப்பதை ராகினி ஊகித் தாள், அதற்கான சாதகமான சந்தர்ப்பத்தினை அம்மா எதிர் பார்த்துக் கொண்டு இருக்கின்றார் என்பதையும் அவ ளால் உணர முடிந்தது.

அடிக்கடி தன்னைப் பார்ப்பதிலே விளங்கிக் கொள்ள முடிந்தாலும் தன் வேலையிலேயே கண்ணாக இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டாள்.

அன்றைக்கு வந்த கந்தையா மாஸ்டர், எதுவும் புதி தாக -கலியாணப் பேச்சுத் தொடங்கியிருப்பார், கலியாணக் கதையை விட வேறு எதைத்தான் கதைக்கப் போகின்றார் எனவும் நினைத்தாள்.

தூரத்து உறவினரான அவருக்கு வீட்டில் மதிப்பு உண்டு, ஐயாவும் அம்மாவும் அவரை பெரிதாக கனம் பண் ணுவார்கள்.

ராகினிக்கு அவரின் கதைகளில் ஈடுபாடு இல்லை, கருத் துக்களில் கூட உடன்பாடு இல்லை, இருந்தாலும் வயதுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியிருந்தது.

அசாதாரணமாக நிலவிய அமைதியை ஐயாகாறித்துப் பிக் குலைத்துக் கொண்டார்.

'என்னப்பா - கந்தையா மாஸ்டர் வந்தால் என்ன சொல்லுறது.'' என் அம்மா மெல்லக் கதையைத் தொடக் கினாள்.

''நான் என்னத்தைச் சொல்லுறது. பிள்ளையோடை கதைச்சனியே'' எனப் பதிலுக்கு கேட்டார் வல்லிபுரத்தார்.

''எங்கைகதைக்க நேரம்வரேல்லை -'' என்ற அம்மா குசினித் திண்ணையை விட்டு எழுந்து விறுந்தைப் படிக்கு வந்தாள்.

இவை காதுகளில் விழுந்தாலும் எதுவுமே கேட்காத வள் போல ராகினி தையலில் மூழ்கியிருப்பவள் போல பாவனை செய்தாள்.

''பிள்ளை -'' என்றுள் அம்மா.

ராகினிக்கு அந்த அழைப்பினை நிராகரிக்க முடியவில்லை அந்த சொல்லில் இருந்த கனிவும் ஆழமும் அவளை நிலை குலையச் செய்ய அம்மாவை நிமிர்ந்து பார்த்தாள்.

''அண்டைக்கு கந்தையாமாஸ்டர் வந்தவர் தெரியும், தானே.

''ம்-''

கதைப்புத்தகத்தில் மூழ்கியிருந்த வனஜா புத்தகத்தை மூடியபடி தாயையும் தமக்கையையும் மாறிமாறிப் பார்த் தாள்.

''அவர் ஒரு சம்பந்தம் கொண்டு வந்தவர்-''

''வேறை எதுக்கு அவர் வருவார்.'' என்ற வனஜா தமக்கையைப் பார்த்துச் சிரித்தாள்.

ராகினி பழையபடி தைக்கத் தொடங்கினுள்.

''ஏதோ- கவுண் மேந்திலை பெரிய உத்தியோகமாம், வயது நாற்பத்திரண்டுக்கு கிட்டவாம். நல்ல இடத்து ஆட்களாம்.''

''நாற்பத்திரண்டு வயதோ-'' என வனஜா கேட்டாள்.

''வேறை என்ன முப்பத்தி நாலுக்கு என்ன முப்பதே வரும்-'' ராகினி சித்தாள்.

அம்மா வல்லிபுரத்தாரைப் பார்த்தாள் - பிறகு.

"என்னபிள்ளை பேசாமல் இருக்கிறாய்.

"சொல்லுங்கோ" என்றாள் பதிலுக்கு ராகினி.

"நாற்பத்திரண்டு வயதுதானே. அது பரவாயில்லை, உத்தியோகமும் நல்லது" என்ற அம்மாவை வனஜா இடைமறித்தாள்.

"சீதனம் என்ன மாதிரி-"

"சீதனம் அவ்வளவாய் இல்லை."

"ஏன்-" என்று கேட்ட வனஜா ஆச்சரியத்துடன் கண்களை அகல விரித்தாள்.

"அது வந்து முந்திக் கலியாணம் முடிச்சு பொம்பிளை செத்துப் போய் இரண்டு வருஷமாகுதாம், ஆறு வயதிலை ஒரு பொம்பிளைப் பிள்ளையும் இருக்குதாம் -" என்று அம்மாவின் வார்த்தைகள் இடைவெளி விட்டு விட்டு தயக்கத்துடன் வெளிப்பட்டன.

ராகினி தையலை நிறுத்தி ஆழமாக அம்மாவைப் பார்த்தாள் அம்மா தலையைக் குனிந்து கொண்டாள்.

"நான் உன்னைக் கட்டாயப் படுத்தேல்லை, பிள்ளை ஒண்டு இருக்கு எண்டதைத் தவிர வேறை எந்தக் குறையும் இல்லை, குடி சிகரேட் ஒண்டும் இல்லையாம், நல்ல சாமிப் போக்கான ஆளாம். சாதகமும் நல்ல பொருத்தமாம் -"

"நீங்கள் எதுக்கு விரும்புறியள், சாதகம் பொருந்து தெண்டோ அல்லது சீதனம் இல்லை எண்டதுக்காகவோ-" ராகினி கேட்டாள்.

"அம்மாவுக்கு பயம் வந்திட்டுதோ - அக்காவுக்கு வயது போட்டுது இனிப் பிள்ளையும் பிறக்குமோ - என்னவோ

எண்டு தகப்பனோடை பிள்ளையுமாக கலியாணம் பேச வெளிக்கிட்டு விட்டா -''என்றாள் கேலியாக வனஜா.

அம்மாவின்முகம் இருண்டது.

''நீ என்னடி நினைச்சுக் கொண்டு விசர்கதை கதைக்கிறாய், எங்களுக்கு எங்கடை பிள்ளை நல்லாய் இருக்கிறது விருப்பமில்லையே- அதுவும் நானே என்ரை பிள்ளையை அநியாயமாக தள்ளி விழுத்துவன் எண்டு நம்புறியே-'' எனக் கேட்ட அம்மாவின் கண்கள் கலங்கின

''அதுசரி பிறகு எந்த யோசனையோடை அப்பாவும் மகளுமாய் பாக்கிறியள் என்ற வனஜாவின் தீவிரம் குறையவில்லை.

தாயும் பிள்ளைகளும் அமளிப்படுவதை வல்லிபுரத்தார் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் சுபாவம் அப்படி.

''உங்களுக்கும் ஐயாவுக்கும் சம்மதம் என்றால் எனக்கும் சம்மதம்-''

முகத்தில் எதுவித பதட்டமும் இல்லாமல் தனது தையல் வேலையை இயல்பாகச் செய்து கொண்டு ராகினி சொன்னாள்.

மின்சாரம் தாக்கிய போல வனஜா துள்ளி எழுந்தாள்.

''அக்கா உனக் கென்ன விசரே, கலியாணம் முடிச்ச கையோடை குழந்தையை தாலாட்டப் போறியோ அல்லது-''

''நீ சும்ம இரு வனஜா -'' ராகினி வனஜாவை சமாளிக்க முனைந்தாள்.

வனஜா ஆத்திரமானாள். அம்மாவுக்கு இதுவரை நேரமும் இல்லாது ஒருவகை சங்கடம் ஏற்பட்டது. ராகினி

ஏதாவது சொன்னால் அல்லது மறுத்துப் பேசினால் மனத்திற்கு சமாதானமாக இருந்திருக்கும். ஆனால் எதுவுமே சொல்லாமல், எதைப்பற்றியுமே கேள்வி கேட்காமல் சட்டென்று சம்மதிப்பது என்பது? அம்மா கடுமையாக சிந்தனையயப்பட்டாள்.

பிள்ளைகளும் தாயும் கதைப்பதை நாடகம் பார்ப்பது போல பார்த்துக் கொண்டிருந்த வல்லிபுரத்தார்கூட அதிர்ந்து போனார், என்ன நடந்தது இவளுக்கு.

''உன்ரை வடிவுக்கும் குணத்துக்கும் வாழ்விழந்த ஒருத்தனையே கலியாணம் முடிக்கப் போறாய் அக்கா. உனக்கென்ன குறை, உன்ரை புத்தி ஏன் நாசமாய்ப் போச்சு-',

உடல் பதற கண்கள் சிவந்த நிலையில் வனஜா கேட்டாள், வார்த்தைகள் ஆத்திரம் காரணமாக ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு வந்தன.

ராகினி சிரித்தாள்.

''உன்ரை கதையைப் பார்த்தால் இருபத்தைந்து வயதும் நிரம்பாத கதாநாயகன் ஒருவன் சினிமாப் படங்களிலை வாற மாதிரி வந்து என்னைத் தூக்கிக் கொண்டு போவான் எண்டு நினைக்கிறியா. கற்பனையும் எதிர் பார்ப்புக்களும் வேறை நடைமுறை வாழ்க்கை வேறை. உனக்கு இதுவிளங்கர்து உன்ரைவயதிலே நீ விதம் விதமாய் யோசிப்பாய் தான். எங்கடை சமுதாய கட்டுக்கோப்புகளுக்கும் நீள அகலங்கள் தடைதாண்டல் விளையாட்டுக்களுக்கு இடையில் தப்பிப் பிழைச்சு நாங்கள் நினைக்கிறபடி எல்லாம் நடக்கிறது என்பது முடியாத காரியம். ''சிரிப்பினூடாக வெகு நிதானமாக அவள் பதில்வந்தது.

ஆனால் வனஜா சாமாதானம் ஆகவில்லை.

''நீ இந்தக் கலியாணத்திற்கு எப்படிச் சம்மதிக்கிறாய். என்னகாரணத்திற்காக ஓமெண்டு சொல்லுறாய். அதைச்

சொல்லு. முப்பத்திநாலு வயதுவரை ஒரு கலியாணமும் சரிவரேல்லே எண்டதுக்காகவோ அல்லது இனிமேல் உனக்கு கலியாணமே நடக்காது கடைசி இதையாவது சம்மதிப்பம் எண்டதாலேயோ? எது உண்மை அதைச் சொல்லு ''

தான் இருந்த இடத்தினைவிட்டு வீராவேசத்துடன் எழுந்து வனஜா கேட்டாள்.

மூத்தவள் போசாமல் இருக்க அடுத்தவள் இப்படி சீறிப்பாய்வதைக்காண அம்மாவால்பொறுக்கமுடியவில்லை. இவளுக்கு என்னநடந்தது என நினைத்தவாறு.

''வனஜா சத்தம்போடாமல் இரு முன் வீட்டுக்காரர் மாதிரி நீயும் கத்தாதை-'' என்றாள்.

''அக்கா-நீ-பதில் சொல்லு ''

ராகினி வனஜாவை நிமிர்ந்து பார்த்தாள். இவ்வளவு நேரம் சிரித்துக்கொண்டிருந்த அவளின் கண்களில் கண்ணீர் அரும்பியது. ''வனஜா நீ என்னைவிட வயதில் குறைந்தவள் சில விஷயங்களை உனக்கு விளங்கப்படுத்தேலாது. என்ரை கலியாணம் நடக்கேல்லே எண்டதாலே அம்மா படுகிறவேதனை உனக்குத் தெரியாதே. எனக்கு எதிலேயுமே பற்றுப்பாசம் இல்லை. அக்கறையும் இல்லை. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு சேலை கட்டிக்கொண்டு பௌடர் பொட்டோடை போறதை வைச்சுக் கொண்டு என்னை நீ மதிப்பிடாதே. கனவுகள் கற்பனைகள், ஆசாபாசங்கள் எல்லாம் வசதியான ஆட்களுக்குத் தான் சரிவரும். நல்ல சீதன வசதி இருந்திருந்தால் நீயே இப்ப இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாய் இருப்பாய் நீ நினைக்காதே எங்கடை மண்ணிலே எங்களுக்கு அரசியல் சுதந்திரந்தான் இல்லை எண்டு அரசியல் சுதந்திரத்தை ஆரோ பறிச்சாங்கள். பொருளாதார சுதந்திரம் இன்னும் வராமைக்கும் எங்கடை ஆட்களுந்தான் காரணம். எங்கடை பொருளாதார வளங்களை, கஸ்டப்பட்ட ஆட்களிடம் சூறையாடுகிறது

தனிய எங்கடை அரசியல் உரிமைகளை பறிச்சவங்கள் மாத்திரமல்ல எங்களுக்கு மத்தியில் இருக்கிற அவங்களின்ரை எச்சங்களுந்தான்?''

ராகினியின் கண்களில் அரும்பிய கண்ணீர் நீள் கோடாக கன்னங்கள் வழியே பரவியது. விருந்தையில் இன்னமும் லைட்போடவில்லை என்றாலும் மங்கிய வெளிச்சத்தில் அந்தக்கண்ணீர் பளபளப்பினை வனஜா உணர்ந்தாள்.

மேடைப் பேச்சைப்போல இராமல் உணர்ச்சிகாரணமாக வெளிப்படுத்தப்பட்ட ராகினியின் கருத்துக்கள் வனஜாவின் தீவிரத்துக்குத் தடைபோட்டன.

அவள் நிதானமாக தமக்கையைப் பார்த்தாள்.

''நீ சொல்லுறது எனக்கு விளங்குது அக்கா எண்டாலும் அவசரப்படாதை இவ்வளவு நாளும் நீ ஒழுங்காய் இருந்ததுக்குப் பலன் கிடைக்காமல்போகாது.''

''எனக்கு ஒண்டுமில்லை. ஐயாவும் அம்மாவும் சரி எண்டால் சரி ஏதோ அவையின்ரைவிருப்பம்''.

வனஜா அம்மாவைப்பார்த்தாள் பார்வையில் முன்போல கடுமை இல்லை. தயவு இருந்தது.

''அம்மா பிளீஸ் அம்மா -சிலவேளைவேறை நல்லது ஏதாவது வரும். அம்மா வாழ்விழந்து ஆறுவயதுப் பிள்ளைக்கு தகப்பனுன ஒருத்தரை அக்காவுக்குப் புருஷனாய், அக்காவின் புருஷனாய் நினைச்சுக்கூடப் பாக்கேலாமல் இருக்கு. ''என்றாள் வனஜா

குறைச் சுருட்டைத் தூர எறிந்துவிட்டு வல்லிபுரத்தார் சாய்மனைக்கட்டிலை விட்டு எழுந்தார்.

''ஆர் சொன்னது இப்ப இதுதான் முடிவு எண்டு.''

தகப்பனாரின் இந்தப்பேச்சினை யாருமே கவனித்ததாகத் தெரியவில்லை'

"நீ-ஏனப்பா பேசாமல் இருக்கிறாய்" என மனைவியைக் கேட்டார் அவர்

பிரமை பிடித்தவள் போல இருந்த அம்மா வனஜாவையும் ராகினியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"பிள்ளை வனஜா நீ நம்பிறியே கொக்காவுக்கு இப்படி ஒரு கலியாணம் செய்ய நான் விரும்புவன் எண்டு. வடிவான பிள்ளையைப் பெத்தால் போட்டி போட்டுக் கொண்டு வந்து முஞ்சிக்கொண்டு போவான்கள் எண்டு அந்தக்காலத்திலே சொல்லுவினம். அதையும் அந்தக்காலத்திலே நான் நம்பிக்கொண்டு இருந்தன் கடைசியிலே எல்லாமே புஸ்வாணமாய்ப்போச்சு. மூத்தவன் வேலைசெய்யிறவன் தானே எப்படியும் கஸ்டப்பட்டு இருக்கிறதைக் கொடுத்து செய்துவைச்சால் வனஜாவுக்கு தம்பி இருக்கிறான் அவன் அவளைப்பார்த்துக்கொள்வான் எண்டு நம்பி இருந்தன் இப்ப எல்லாமே பிழைச்சுப்போச்சு. என்ன மாதிரி மூத்தவளுக்கு கலியாணம் பிழைச்சுப்போனதோ அதே மாதிரி என்ரைமோனும் என்னைவிட்டுப் போட்டான். ஒரே ஒருபொடியன் எண்டு நம்பியிருந்து எவ்வளவு அக்கறையாய்; அன்பாய், ஆசையாய் அவனை வளர்த்தன் கடைசியிலே "என்று சொன்னதாய் மேலும் வார்த்தைகளை முடிக்காமல் அழத்தொடங்கினாள்

ராகினிக்கு தாயின் வேதனையைப்பார்க்க பொறுக்க முடியவில்லை

"நீங்கள் ஏன் அம்மா அழுகிறியள். உங்களுக்குச் சம்மதம் எண்டால் இந்தக்கலியாணத்தை எனக்கு செய்து வையுங்கோ நான் என்ன கஸ்டப்பட்டு எண்டாலும் வனஜாவுக்கு கலியாணத்தை செய்து வைக்கிறன். என்னைப் பொறுத்தவரை தம்பி வீணாய் சாகேல்லை. அவன் தனக்காகவும் தன்ரை உயிரைவிடேல்லை. ஒரு கஸ்டப்பட்ட குடும்பத்திலே பிறந்த படியால்தான் அவனுக்கு சுதந்திரத்தின்ரை அருமை தெரிஞ்சுது. வசதியானஆட்கள் சாதா

லேயே எல்லாத்தையும் வாங்கிப்போடலாம். வாங்கலாமோ இல்லையோ அப்படி நினைக்கினம். தம்பிதன்ரை கடமையிலை இருந்து தவறேல்லை. அவன் எல்லோருக்குமாக கடமை செய்யப்போய் தன்னைப்பறிகொடுத்தவன். அவன் இல்லாட்டியும் அவன் இந்த வீட்டுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய நான் இருக்கிறன். அம்மா நீங்கள் ஒன்றும் கவலைப்படாதேங்கோ. வனஜா இந்தக்கலியாணம் செய்யிறதாலை ஊரிலை கொஞ்சப்பேர் விண்ணுணமாய்க் கதைப்பினம் அவ்வளவுதான். அதுவும் கொஞ்சநாளைக்குத் தான் கொஞ்சக்காலம்போக எல்லாம் பழங்கதையாய் விடும். நீ பெரிசாய் யோசிக்காதை'' என்றாள் ராகினி.

வனஜா அவளை அதிசயமாகப் பார்த்தாள். அக்காவால் எந்தவிதமான பதட்டமும் இல்லாமல் இப்படி எவ்வாறு கதைக்கமுடிகின்றது.

விருந்தை நன்றாக இருளில் மூழ்கிவிட்டது. முன்வீட்டு கண்ணாடி ஜன்னல் வழியாக பாய்ந்துவந்த நீல ஒளியினால் சிறிது வெளிப்புமாத்திரம் இருந்தது

அந்த இருளிலும் ராகினியின் விழிகள் பிரகாசமாக இருந்தன. அவள் வதனம் கூடபுதுவகையில் ஒளிர்வு பெற்றிருப்பதாக வனஜாவுக்குத் தோன்றியது.

இனம் தெரியாத ஒருவகை நெகிழ்ச்சி அவள் மனதில் உண்டானது. விபரிக்கமுடியாத உணர்வுகள் நெஞ்சத்திலை உருவாகி நர்த்தனம் புரிந்தன. தமக்கையைப் பார்க்கப் பார்க்க அது விடாமல் உருப்பெற்று உயிர் கொண்டது. அதுகாரணமாகத் தமக்கையை கட்டிப்பிடித்து அக்கா, அக்கா என அழவேணும் போல இருந்தது.

''அக்கா-நீ என்னதான் சொன்னாலும் எனக்கு நீ இந்தக் கலியாணத்துக்கு ஓம் என்று சொல்லுறது விருப்பமில்லை. அவசரப்பட்டு எந்தமுடிவும் எடுக்காதை அக்கா ''எனச்சொல்லும்போதே அவள் கண்கள் கலங்கின.

"நீ ஒரு சரியான விசர்ப்பிள்ளை." என்று சொல்லி மொதுவாகப் புன்னகைத்தாள் ராகினி.

"இனி எப்ப கந்தையா மாஸ்டர் வருவார்." எனக் கேட்டார் வல்லிபுரத்தார்.

வனஜா நிமிர்ந்து ஆத்திரத்துடன் தகப்பனைப்பார்த்தாள்.

"ஏன்" என்ற கேள்வி சற்று உறைப்பாகவே புறப்பட்டது.

"இஞ்சரப்பா-அவர் வந்தால் சொல்லு இந்தச்சம்பந்தம் வேண்டாம் வேறை எங்கையாவது வந்தால் பார்க்கச் சொல்லு இவ்வளவு நாளும் அவளைக் குமராய் வைச்சிருந்திட்டு கடைசியிலை நாங்கள் இப்படி அநியாயம் செய்ய வேண்டாம். நான் அண்டைக்கு நீ சொல்லேக்க பெரிசாய் ஒண்டும் யோசிக்கேல்லை. பிள்ளையோட சும்மா கதைச்சுப் பார்ப்பம் எண்டுதான் நினைச்சன்". என்றார் வல்லிபுரத்தார்.

வனஜாவின் முகத்தில் சிறிது வெளிப்பு உண்டானது. ராகினி முன்போலவே எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் இருந்தாள்.

"வனஜா நல்லாய் இருட்டிப்போச்சு லைட்டைப் போடன்" – என்றாள் அம்மா.

வனஜா எழும்பிப்போய் லைட்டைப் போட்டாள். இருளில் இருந்து வெளிச்சத்துக்கு மாறியதால் அவர்களின் கண்கள் கூசின. ராகினி தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"என்னப்பா கொஞ்சம் தேத்தண்ணி தாவன்" என்றார் வல்லிபுரத்தார்.

"அம்மா நீங்கள் இருங்கோ. நான் போய் ஆத்திக் கொண்டு வாறன்-" என்று எழும்பினாள் ராகினி.

"கேத்திலை தண்ணி இல்லை இனித்தான் சுடவைக்க வேணும்-"

''நான் அடுப்பை மூட்டுறன்'' என்று சொல்லிக் குசி னியை நோக்கி நடந்தாள் ராகினி.

''என்ரை அம்மாளே, என்ரை பிள்ளைக்கு நல்ல மாப் பிள்ளையாய் கிடைக்க வழிசெய்-'' என்ருள் அம்மா.

# 4

கிணற்றடியில் நின்ற அகத்திமரம் ஒன்று புதிதாகத் தளிர்விடத் தொடங்கி இருந்தது. சிறிய சிறிய அரும்புக ளாக பசிய மஞ்சளில் பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தது.

மட்டம் வெடித்துப் புறப்பட்டிருந்த வாழையின் சின் னக் குருத்துக்கள் சிலிர்த்துப்போய் இருந்தன. குளிக்கும் தண்ணீர் பரவிய இடங்களிலெல்லாம் பசிய புற்கள் தலை காட்டின. தென்னோலைகள் கருகிப் போயிருந்த தென்னை மரத்தில் கூட புதிய தாலிக்கொடியின் பளபளப்பில் குருத்து பளிச்சிட்டது.

எண்பத்தியேழு அக்டோபரில் வீட்டைவிட்டு ஓடி எண் பத்தியெட்டு பெப்ரவரியில் வீட்டுக்கு திரும்பிவர முடிந்தது.

வரண்டுபோய் இருந்த வளவில் இப்போதுதான் சின் னதாக கசிவுகள் ஏற்பட்டு பசுமை தலைகாட்ட ஆரம்பித் திருந்தன. மனித மனங்களில் இந்த கசிவும், பசுமையும் எப்போது தலைகாட்டும்.

இன்று சனிக்கிழமை. காலையில் அமளியும் அவசரமும் இருக்கவில்லை. அந்தரப்பட்டுக் கொண்டு இயந்திர கதியில் அலங்கரித்து வாயில் அள்ளிப் போட்டுக்கொண்டு குடை பிடித்து செயற்கையாய் புன்னகைத்து புறப்படத் தேவை யில்லை.

பஸ்சில் அள்ளி அணைப்பவர்களை முறைத்து தலைமயிரை முகர்ந்து பார்த்து விரல்களைத் தொட முனைபவர்களைத் தவிர்த்து கல்லூரிக்குப் போகவேண்டி இருக்கவில்லை.

மிஸ்சிஸ் அங்கையற்கண்ணி போன்றவர்கள் அதீத கதைகளைக் கேட்டு பிள்ளைகளுடன் மல்லுக்கட்டி பகல் இரண்டுமணி வெய்யிலில் வாடிவதங்கி வாகனங்களில் போகின்றவர்களின் கையசைப்புக்களைப் பார்க்க வேண்டிய கட்டாயம் இல்லை. இப்படி எத்தனையோ இல்லைகள்.

காலையில் ஆறுதலாக எழுந்து அம்மாவுக்கு குசினிக்குள் உதவி செய்து விட்டு, கிணற்றடியில் ஆசை தீர முழுகி உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெற்ற பின்னர் தலை மயிரை பரவவிட்டு வாடச்செய்வதற்காக கிணற்றடியில் காற்று வாங்கிக் கொண்டு தனித்திருந்தபோதுதான் இந்த சுக அனுபவங்களில் லயித்துப்போனாள் ராகினி.

தனிமையும் இயற்கையும் ஒன்று சேரும்போது கிடைக் கும் இனிமையான அனுபவத்திற்கு இணையில்லை. அந்த அனுபவத்தினை அனுபவித்துக்கொண்டு இருக்கும் போது தான்.

"பெரியக்கா - பெரியக்கா என்றபடி கிணற்றடியை நோக்கி வந்தான் சம்பந்தன்.

ராகினியின் அம்மா வசந்தமலரின் ஒன்றுவிட்ட தங் கையின் கடைசி மகனை சம்பந்தனும் கணநாதனும் ஒன் றாகப் படித்தவர்கள். கிழமைக்கு ஒரு தடவையேனும் சம் பந்தன் ராகினி வீட்டுக்கு வராமல் நிற்கமாட்டான்.

"பெரியக்கா - என்ன நடக்குது இங்கை-" அவன் கேள் வியில் ஆச்சரியம் இருந்தது.

முகம் பளபளக்க தலைமயிர் தோகையாக விரிந்திருக் கும். ராகினியின் கோலம் அவனுக்கு சுவாரசியமாக இருந் தது.

“என்ன விசேசம்-” ராகினி கேட்டாள்.

“பார்த்திபன் வந்திருக்கிறான்-” என்றான் வெகு உற்சாகமாக.

“அட பார்த்திபனோ-” விழிகள் மலர ராகினி கேட்டாள்.

கணநாதனும் பார்த்திபனும் நல்ல சினேகிதர்கள். எங்கு போனாலும் ஒன்றாக. கல்லூரி, ரியூசன், பொழுது போக்க எங்கும் எதிலும் கடைசியில் வீட்டை விட்டுப் போகும் போதும் ஒன்றாகவே போனார்கள்.

அன்றைய தினம் - அன்று நடந்த நிகழ்வுகள் அதன் விளைவுகள் எல்லாமே அக்கணத்தில் நிழல் உருவங்களாக ராகினியின் மனதில் உருப்பெற்றன.

கூரையைப் பார்த்துக்கொண்டு ஏங்கி இடிவிழுந்து போய் இருந்த ஐயாவும், ஓவென்று புலம்பி ஒப்பாரிவைத்த அம்மாவும் செய்வதறியாது இருந்த வனஜாவுமாக வீடு நிலைகுலைந்துபோய் இருந்த நேரத்தில்.........

பார்த்திபனின் தாயார் அழுதழுது சிவந்த முகமும்-கலங்கிய கண்களுமாக வந்தாள்.

வந்தவளை வாவென்று யாரும் அழைக்கவில்லை. வேதனையில் வெந்து கொண்டு இருப்பவர்கள் வேறு என்ன செய்வார்கள். பார்த்திபனின் அம்மாவை வீட்டாருக்கு அவ்வளவு பழக்கமில்லை எப்போதோ கணநாதன் அம்மன்கோயிலடியில் அறிமுகப்படுத்தியதாக ஞாபகம்.

பார்த்திபனின் தகப்பனார் பொன்னம்பலம் ரவுணில் கடைவைத்திருக்கும் முக்கிய புள்ளி. மூன்று ஆண்களும் மூன்று பெண்களும் உள்ள அந்தக் குடும்பத்தில் பார்த்திபன் தான் கடைசிப் பிள்ளை.

யாழ்ப்பாணத்தில் சிலர் நல்ல நிலையில் இருக்கின்றார்கள் என்று மற்றவர்கள் எதை எதையெல்லாம் வைத்து மதிப்பிடுகின்றார்களோ, எக்காரண காரியங்களால் சமூகத்

தில் உயர்மதிப்புக் கிடைக்கின்றதோ, அத்தனையும் ஒரு அணுப்பிசகாமல் பொன்னம்பலத்தார் வீட்டில் இருந்தது.

அவரின் ஆண்மக்கள் எல்லோரும் வெளிநாட்டில்-பெண் பிள்ளைகள் பெரும் பதவிகளையும் தங்கள் ஆண்மைகளையும் பல லட்சங்களுக்கு விற்றுவிட்ட மணவாளர்களுடன் தனித் தனி வீடுகளில் சேவகம் செய்ய சேவகர்களுடன் இருக்கின்றார்கள்.

டில்றூக்ஸ்சன், டாறிஸ், வீமோனிஸ், டிஞோஷ், டபில்யா பிரவ்தா என்று தமிழ் பண்பாடு காக்கும் பெயர் கொண்ட பேரப்பிள்ளைக்ளும் இருக்கின்றார்கள். பிறகென்ன பிரச் சனை?

வந்த கோலமும், சாடையான நினைவும் ராகினியைத் தட்டியெழுப்ப பார்த்திபனின் தாய் என்பதினை சிறுபொழு தில் உணர்ந்து கொண்ட அவள்,

"வாங்கோ - வாங்கோ-" என்றாள் மிகப் பவ்வியமாக

"வரவேற்பெல்லாம் காணும். எங்கை என்ரை மேன் பார்த்திபன்-"

ராகினிக்கு என்ன செய்யதென்று தெரியவில்லை. விப ரிக்கமுடியாத பயம் உடலில்பரத - அதுகாரணமாக உடல் நடுங்கத் தொடங்கியது.

"நீங்கள் இருங்கோவன்-" என்றாள் பதட்டத்துடன்,

"நான் இஞ்சை இருந்து விருந்து சாப்பிட வரேல்லை. என்ரை மோனைத் தேடித்தான் வந்தனான்" வார்த்தைகளின் வேகம் ஈட்டியாகத் துளைத்தது.

தேர்வடம் போன்ற கொடி, இரட்டைப்பட்டுச் சங் கிலி, கையிலே பலசோடிக் காப்புகள், பளீர் என மின்னும் மூக்குத்தி, தோடுகள் சகிதம் கோபாவேசமாக நின்ற பார்த்திபனின் தாயையும் நைந்துபோன சேலையும், வாடிப் போன முகமும், வெறுங்கழுத்துமாய் காட்சிதந்த தன் தாயையும் ராகினி பார்த்தாள்.

"பேசாமல் நீண்டால் என்ன அர்த்தம். என்னைப்பற்றி உங்களுக்குத் தெரியாது. வீணாகச் சிக்கல் படாதேங்கோ". என்றபடி வீட்டையும் வளவையும் வடிவாகப் பார்த்தாள். அவள் பார்வையில் ஏளனம் தொனித்தது,

அந்த ஏளனப்பார்வை ராகினியை பலமாகத் தாக்கியது. "இப்ப நீங்கள் என்ன கேட்கிறியள்-" என்றாள்வெகு நிதானமாக.

வல்லிபுரத்தார் என்ன நடக்கிறதென்பதைப் பற்றி உணராமலேயே இருந்தார். அம்மாவுக்கும் விடயம் விளங்கி விட்டது. ராகினி எதையாவது சொல்லுவாள் என்று தெரியும். மூலையில் இருந்த வனஜாவும் எழுந்து ராகினிக்கு முன்னால் வந்து நின்றாள்.

தமக்கையையும் தங்கையையும் ஆழமாகப் பார்த்த பார்த்திபனின் அம்மா-

''நான் தமிழிலை கதைக்கிறதும் விளங்கேல்லையே.வாத்தி வேலை பார்த்தால் தமிழும் விளங்காதே. என்ரை மேன் பார்த்திபன் எங்கை எண்டு தான் கேட்கிறேன்'' என்றாள் உரத்தகுரலில்.

அப்போதும் ராகினி நிதானமாகவே இருந்தாள்.
''நீங்கள் எங்களை ஏன் வந்து கேட்கிறியள். நாங்களும் எங்கடை தம்பியையும் காணேல்லை எண்டுதான் கவலைப் பட்டுக் கொண்டு இருக்கிறம். அங்கை பாருங்கோ அம்மாவை. நேற்றுத்தொடக்கம் சாப்பாடும் இல்லை. தண்ணி வென்னியும் இல்லை'' என்றாள் ராகினி.

''என்ன நாடகமே போடுறியள். குடிக்கக் கஞ்சிக்கு வழி இல்லாட்டியும் நேர்மையாய் இருக்கவேணும். என்ரை அருமந்த பிள்ளையை ஒருமாதிரி ஏமாத்தி, அவன்ரை மனசைக்குழப்பி உங்கடை பெடியனோடை சேர்த்து அனுப்பிப் போட்டு இப்ப கண்ணீர் விட்டு நடிக்கிறியளே-''

"உங்கடை மகனைக் காணுமல் உங்களுக்கும் எங்களைப் போல வேதனை இருக்குமென்பதை எங்களால் உணர முடியுது. எங்கட தம்பிபோன பிறகுதான் எங்களுக்குத் தெரியும் அவனுக்கு இப்படி ஒரு நோக்கம் இருந்ததெண்டு. உண்மையை அறியாமல் தேவையில்லாமல் கதையாதேங்கோ."

"என்ன - உங்கட பெடியன் போனது உங்களுக்குத் தெரியாதோ நல்ல பகிடிதான். செய்யிறதையும் செய்து போட்டு சுத்துமாத்துக் கதையும் கதைக்கிறியள்"

இதுவரை நேரமும் பேசாமல் இருந்த ராகினியின் அம்மா இப்போது கதையினுள் புகுந்தாள்.

"இஞ்சை பாருங்கோ, உங்களைப் போலதான் நானும் நேற்றுத் தொடக்கம் என்ரை முதலான முதலைக் காணுமல் நெஞ்சில் கல்லு விழுந்தமாதிரி இருக்கிறன். என்ரை கவலையை ஆரிட்டைச்சொல்லி அழுகிறதெண்டு எனக்குத் தெரியேல்லை. எங்கடை பிள்ளை போனதுக்கு நாங்கள் மற்றவையைக் குறைசொல்லிப் பிரயோசனம் இல்லை. நீங்கள் ஏன் எங்களைப் பிழையாய் நினைக்கிறியள். எங்கடை வாழ்க்கையிலை நாங்கள் மனமறிஞ்சு ஒருத்தருக்கும் துரோகம் செய்யிறதில்லை. உங்களைக் கையெடுத்துக் கும்பிடுறம் எங்களைப் பிழையாய் நினைக்காதேங்கோ. என்ரை பிள்ளையைக் காணேல்லை எண்டு நான் படுறபாடும் அடையிறமனவேதனையும் சொல்லி மாளாது." என தாய் அழுகை வெடிக்க சொன்னபோது ராகினிக்கும் அழுகை வந்தது. பின்னல் திரும்பிப் பார்த்தால் வனஜா விம்மிக்கொண்டிருந்தாள்.

"அழுது ஆட்டம் போடாதேங்கோ. உங்களைப்போல ஆட்களின்ரை பிள்ளையள் அவங்களோடையேன் போய் சேருறது எண்டு எங்களுக்குத்தெரியும். இயக்கம் எண்டுசொல்லி எங்களைப்போல வசதியான ஆட்களைக் கொள்ளையடிக்கத்தான் எண்டு தெரியும். என்ரை பொடியனுக்கு என்ன

குறை. அவனுக்கு பொக்கட் செலவுக்கே நான் தான் மாதம் மாதம் காசு கொடுக்கிறநான். உங்கடைபொடியன் தான் என்ரை ராசனே ஏமாத்திக்கூட்டிக்கொண்டு போய் விட்டான்.'' என பார்த்திபனின் தாய் சத்தம்போட்டுக் கொண்டு போக.

ராகினி குறுக்கிட்டாள். பொறிதட்டினுற் போல அவளுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது கூடவே வார்த்தைகளும் அதே தாக்கத்துடன் வெளிப்பட்டன.

''இஞ்சைபாருங்கோ-நீங்கள் எங்களைப் பிழை சொல் லுங்கோ, எங்களைத்திட்டுங்கோ ஆனுல் உயிரையும் உடம் பையும் மறந்துபோய் எங்களுக்காக செத்துக்கொண்டிருக் கிற பிள்ளையளை பிழைசொல்லாதேங்கோ சொத்து, சுகம் சமூகஅந்தஸ்து எண்டு ஒரு குறுகிய வட்டத்துக்குள் நிற்கிற உங்களுக்கு இதுகள் விளங்காமல் இருக்கிறது ஆச்சரியமில்லை.'' என்னும் போதே

''வாத்திவேலை பாக்கிறதாலை போதனை செய்யலாம் எண்டு நினைப்போ. உந்தக்கதையளை வேலையில்லாமல் ரோட்டுச்சுத்திற ஆட்களுக்குப் போய்ச்சொல்லு எங்களுக்கு உங்கடை போதனைதேவையில்லை. எங்களுக்கு எல்லாவசதி யும் இருக்கு. எங்களாலை எதுவும் இயலும் கெதியிலை என்ரை பிள்ளையை கொண்டுவந்து சேர்த்துப்போடுங்கோ பிறகு எல்லாமே பிரச்சனை.'' என்று காட்டமாகசொல்லிக் கொண்டுபோன பார்த்திபனின் தாயார் கடைசியில்.

''அவையளுக்கு தின்னுறதுக்கு வழியில்லை. நாட்டுக் காகப் போராடப்போயினமாம் என்று புறுபுறுத்துக் கொண்டு போனுள்.

உதடுகள் துடித்துக்கொண்டு நின்ற வனஜா ''பாரன் அவவின்ரை கொழுப்பை மரியாதைக்குப் பயந்து நாங்கள் கண்டபடி கதைக்காமல் இருக்க - அவ என்னமாதிரி கதைச்

சுப்போட்டுப் போரு. இவைபோல ஆட்கள் எந்த உலகத்தில சீவிக்கினம் எண்டு விளங்கேல்லே -'' என்ருன்.

''தம்பி போனது எனக்குக் கொஞ்சம் கவலேயாய்த்தான் இருந்தது. ஆனல் இப்ப அவன் போனது எனக்கு பெருமையாயும் இருக்கு'' என்று சொன்ன ராகினி கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

வெளியில் நின்று விடுப்புப் பார்த்துக் கொண்டு இருந்த அக்கம் பக்கத்து ஆட்கள் வளவுக்குள் வரத்தொடங்கினர்கள்.

ராகினி சுயநினைவுக்கு வந்தாள்.

இப்போது கணநாதன் உயிரோடு இல்லே. பார்த்திபன் உயிராக இருக்கிருன். இடதுகாலில் முழங்காலுக்கு கீழ் இல்லே. இடதுகையில் மூன்று விரல்களும் இல்லே. வேறுசில தழும்புகளும் இருக்கின்றன.

நீண்ட நாட்களுக்குப்பிறகு - சிட்டத்தட்ட ஒருவருஷம் இருக்கும்? பார்த்திபனேக் காணக்கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நினைத்து ராகினிக்கு இனம் தெரியாத பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

வெளி விறாந்தையில் பார்த்திபன் அமர்ந்திருந்தான். 'வாங்கோ அக்கா-'' என்ற அவன் குரல் கணநாதன், அழைப்பதுபோல இருந்தது. வழக்கமான அந்தப் புன்னகையுடன் அவன் காட்சிதந்தான்

''எப்பிடித்தம்பி சுகம்-'' என்ருள் எதிரே இருந்த கதிரையில் அமர்ந்தவாறு.

''இந்த நிமிஷம்வரை உயிரோடை இருக்கிறன் அது தான் புதினம்.''என்று சொல்லிச் சிரித்தான் அவன்.

நித்திரையாகிப் போயிருந்த வனஜாவும் அப்போது எழுந்து வந்தாள். வல்லிபுரத்தாருக்கு அன்றைக்கு சுருட்டு வேலே இல்லாவிட்டாலும் வீட்டில் இல்லே.

''அம்மா எங்கே'' என்று பார்த்திபன் கேட்கும்போது அம்மா குசினிக்குள் இருந்து வெளியே வந்தாள்.

பெற்றமகனைக் கண்டது போன்றதொரு உவகை அவள் முகத்தில் தேன்பட்டது.

''தம்பி ராசா - சுகமாய் இருக்கிறியே'' எனக் கேட்கும் போது மனத்தில் இருந்த சந்தோஷம் தொனித்தது.

பார்த்திபன் அதற்கும் பதில் சொல்லாமல் சிரித்தான். வழக்கமாக அவன் கதைப்பது குறைவு. இப்போது ஆகக் குறைந்து விட்டது எப்போதாவது தான் கதைப்பான். அத்தனையும் வடித்தெடுத்த மாதிரி சத்தாகத்தான் இருக்கும்.

''வீட்டை போகேல்லையோ...'' என வனஜா கேட்டாள்

''இப்ப வீட்டிலதான் இருக்கிறன்-'' என்றான் பார்த்திபன்.

''என்னவாம்-''

''ஆர்''

''உங்கடை வீட்டாக்கள்தான் ''என்றாள் வனஜா.

பார்த்திபன் சிரித்தான்.

''அவை எங்கை இருக்கினம்.''

''இப்ப ஒன்றும் கதைக்கிறதில்லையே.''

''ஏன் இல்லை எல்லாத்துக்கும் பேச்சும் திட்டும்தான். எனக்கு எல்லாமே பழகிப்போச்சு. எங்கடை மக்களைப்பற்றி இந்த சில வருஷத்திலை வடிவாய் படிச்சாச்சு. ஒரு பகுதி சனம் பிரச்சனையளுக்கை வாழ்ந்துகொண்டு போராடிப் போராடிச் செத்துக் கொண்டு இருக்கு. இன்னுமொரு பகுதி இதெல்லாம் தேவையில்லாத வேலை. என்● நினைச்சுக்கொண்டு எங்களைப் பிழை சொல்லிக் கொண்டும் இருக்கு. வேறை கொஞ்சப்பேர் ராமன் ஆண்டாலென்ன

இராவணன் ஆண்டாலென்ன. எண்டமாதிரி எல்லாத்துக்கும் ஓம் எண்டு, என்ன நடந்தாலும் கண்களையும் மூடிக்கொண்டு வாயையும் பொத்திக்கொண்டு இருக்கு. இப்பிடி எத்தனை விதமான ஆட்கள். இப்ப நான் சொன்ன வகை ஆட்களில் ஒருவகை தான் எங்கடை வீட்டாக்களும். என்றுன் பார்த்திபன்.

வெளியே போய் இருந்த ஐயா வீட்டுக்குள் வந்தார். தோளில் இருந்த சால்வையினுல் முகத்தைத் துடைத்துக்கொண்டு அவர் படியேற-

"வாங்கோ ஐயா-" என்றபடி இருந்த இடத்தை விட்டு எழுந்தான் பாாத்திபன்.

"இருதம்பி இரு." என்று அவர் தோளை ஆதரவுடன் தட்டிக் கொடுத்தார்.

வனஜா அதற்கிடையில் கோப்பியுடன் வந்து சேர்ந்து விட்டாள்.

"என்ன சம்பந்தன் பேசாமல் இருக்கிறுன்-" ராகினி கேட்டாள்.

"கனகாலத்திற்குப் பிறகு பார்த்திபன் வந்திருக்கிறுன் அவனுேடை நீங்கள் கதைக்கேக்க நான் ஏன் குழப்புவான் எண்டு தான் பேசாமல் இருக்கிறன்" என்றுன் அவன்.

வீட்டு வாசலில் சைக்கிள்மணி அடித்தது. நிமிர்ந்து பார்த்தாள் ராகினி. சைக்கிளுடன் கல்பனு என்கிற மிஸ்சிஸ் சிவக்குமார்.

உள்ளூர் அரசாங்க அலுவலகத்தில் பணிபுரியும் அவள் சிறுவயதில் ராகினியோடு படித்துப் பின்னர் வேறு இடத்துக்கு இடம்மாறிப் போனபின்னர் தொடர்பில்லாமல் போய்விட்டது.

சமீபத்தில் தான் இந்த ஊருக்கு வந்துள்ளார். அது காரணமாக நட்பும் புதுஉருவம் பெற்றுஇருந்தது

“இரு தம்பி வாறன்'' என்றபடி கேற்றடியை நோக்கி ஓடினுள் ராகினி

ஏன் கேற்றடியில் நிற்கிறீர் வாருமன் உள்ளுக்கை'' என ராகினி கேட்டாள்

''நிற்க நேரமில்லையப்பா வாறமண்டே நான் கெட் ஒவ்பீஸ்சுக்கு போறன். உமக்கும் ஏதோ அலுவல் இருக்கு என்று சொன்னீர் வாறீரோ என்ன மாதிரி?'' என்ருன் அவசரமாக

''மண்டே தானே. லீவைப் போட்டிட்டு வாறன். எத்தினை மணிக்கு பஸ்ஸ்ராண்டுக்கு வர''

''காலமை எட்டுமணிபோல வாருமன்'' என்று சொன்ன கல்பனு விரைந்து சைக்கிளில் போனுள்.

## 5

வழக்கமாக பஸ்சுக்கு காத்திருக்கும் இடத்தை விட்டு அதற்கு எதிரான திசையில் நிற்க எல்லாமே புதினமாகத் தெரிந்தன. எப்போதும் தன்னேடு நிற்பவர்கள் தன்னைக் காட்சிப்பொருளாகப் பார்ப்பதை ராகினி உணர்ந்தாள்.

கல்பனுவை இன்னமும் காணவில்லை. நேரம் எட்டுப்பத்தாகி விட்டது ஏற்கனவே ஒரு மினிபஸ்சை போகவிட்டு நிற்க சங்கடமாக இருந்தது.

கல்லூரிக்குப் போக பஸ்ஸ்ராண்டில் நிற்கும் போது வழக்கமாக கள்ளப் பார்வை பார்த்துக் கொண்டு போகும் அந்தஸ்கூட்டர்காரன் இன்ம் தேடிக்கொண்டு போனு.

சைக்கிளில் போகும் நடுத்தர வயதுக்காரர் இரண்டுபேர் வழக்கமான இடத்தில் இல்லாததைக் கவனித்து புதிய இடத்தில் நிற்பதைப் பார்த்துத் தங்களுக்குள் எதையோ சொல்லிச் சிரித்துக்கொண்டு போயினர்.

எதிரே இருந்த தேனீர்க்கடையில் தேனீர்குடித்துக்கொண்டிருந்த இரண்டுபேர் ஆவென்று பார்த்தபடி இருந்தனர். கடைக்காரன் கூட அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்த ஆண்களுக்கு பெண்களைப் பார்க்க, பேச, ரசிக்க, சந்தர்ப்பம் கிடைத்தால், தொட அதற்கும் மேல் சான்ஸ் கிடைத்தால் சேர்ந்து படுக்க, எத்தனை தடவை என்றாலும் சம்மதம். ஆனால் திருமணம் என்று வரும் போது ..

சாதி, சமயம், குலம், கோத்திரம் முன்பு யாரைப் பார்த்து சிரித்தவள், எவனோடு கதைத்தவள் என்பதையெல்லாம் ஆராய்ந்து - சீதனத்தில் அட்சரம் பிசகாமல் எவ்வளவு வேண்டலாம் என்றும் பார்த்து மிகமிக நுணுக்கமாக ஆராய்ந்து ஆராய்ந்து கடைசியில் குழம்பிப்போன கலியாணங்கள் எத்தனை.

கணப்பொழுதில் ராகினிக்கு இந்த சிந்தனை ஏற்பட்டது. தெருவில் அப்போது பல பெண்கள் விரைந்து கொண்டிருந்தார்கள். சைக்கிள்களில், பஸ்களில், அறிமுகம் இல்லாத முகங்கள் எத்தனை எதிர்பார்ப்புக்களுடன் நாளைக்கு இவர்களிலே எத்தனை பேருக்கு எல்லாமே உரியகாலத்தில் நடக்கும். இறுதியில் வெற்றியும் கிடைக்கும்

பஸ் ஸ்ராண்டில் புதிதாக கூட்டம் சேர ஆரம்பித்திருந்தது. நடுத்தர வயதுப்பெண் ஒருத்தி கையில் சிறுபெண் பிள்ளையுடன் வந்து நின்றாள். நெற்றி வெறுமையாக இருந்தது. கழுத்துக்கூட அப்பிடித்தான். சேலைக்குப் பொருத்தமில்லாத சட்டை.

அந்தப் பெண்ணின் வீட்டு நிலைமை நிச்சயமாக நன்ருக இருக்காது. முகத்தில் ஆயிரம் கேள்விக்குறிகள். விழிகளில் சோகம். புருஷனை பறிகொடுத்திருப்பாளா? பிள்ளை வீரமரணம் அடைந்திருக்குமா? இப்படி எத்தனை ஆயிரம் மக்கள் இந்த மண்ணில் இருக்கின்றுர்கள்? இவர்களின் சோகங்களுக்கு விடிவு எப்போது.

தம்பியை இழந்தவள் என்று தன்னை யாராவது பார்த்தால் நம்புவார்களா? சா - எப்படி வேஷம் போடவேண்டி இருக்கிறது.

கண்ணைப்பறிக்கும் உடைகளுடன் நான்கு பெண்கள் வந்தனர். தாயும் பிள்ளைகளுமாக இருக்கவேண்டும். தாய் நாகரீகத்தின் உச்சாணியிலே நின்ருள். இடுப்புச் சேலையை அவளைவிட பதிவாகக்கட்டத் தெரிந்திருந்தால் அது பெரிய உலகசாதனையாகத்தான் இருக்கும்.

பஸ்சுக்குள் நின்ருல் பக்கத்தில் நிற்பவன் ஏன் தொட முயற்சிக்க மாட்டான்? இப்படி அரைகுறையாக திறந்து காட்டினுல் தான் நாகரீகம் தெரிந்தவர்கள் என்று மற்றவர்கள் நம்பவேண்டும் என்ருல்? இப்படியானவர்களை என்ன செய்யலாம்.

எந்தப்பிள்ளை வெளிநாட்டில் இருந்து அதிகக்காசு பெற்று அனுப்புகின்றதோ, அல்லது முதுகுமுறிய வேலை செய்து பணத்தைத் தருகிறதோ, எந்த அப்பாவிக் கணவன் தான்......

ராகினிக்கு அவர்களைப் பார்க்கச் சங்கடமாகவும் ஆத்திரமாகவும் இருந்தது. பஸ் ஸ்ராண்டின் ஒரு புறத்தே இருந்த உயரமான சீமெந்துத் தளத்தில் நாலைந்து இளைஞர்கள் காரணமில்லாமல் சிரித்துக் கொண்டு இருந்தார்கள். கண்களில் முதல்நாள் அடித்ததன் போதை தெரிந்தது. கைகளும் புகைத்தன.

எட்டு இருபதாகி விட்டது. ஒரு மினிபஸ் தூரத்தில் கூரையிலும் ஆட்களாக வந்து கொண்டிருந்தது வியர்வை வழிய ஓட்டமும் நடையுமாக கல்பனு வந்து சேர்ந்தாள்.

''ப்ளீஸ் அப்பா கோவிக்காதேயும் கடைசி மகனுக்குச் சுகமில்லே. விட்டிட்டு வெளிக்கிட அழத் தொடங்கி விட்டான்- அது தான் பிரச்சனே, ஒருமாதிரி அம்மாவோடை நிற்கச்சொல்லி அவனேச் சாமதானப் படுத்திப் போட்டு வர நேரமாய்ப் போச்சு.''

இதுவரை நேரமும் கல்பனு வராததால் ஏற்பட்டிருந்த எரிச்சல் இருந்தஇடம் தெரியாமல் போக கல்பனுமேல் பரிவு உண்டானது.

''உதிலே வாறதிலே சரியான சனம். சி. ரீ. பி எண்டால் பரவாயில்லே, பார்த்து அடுத்ததிலே போவமே-'', ராகினி கல்பனுவை பார்த்துக் கேட்க ''ஓ - அதுக்கென்ன-'' என்ருள் கல்பனு.

நிறைந்து வழிந்த மினிபஸ்சில், நின்றவர்கள் மூச்சு விடச் சிரமப் பட்டுக் கொண்டு ஏறினுர்கள். மினிபஸ்சின் கண்டக்டர் பெடியன் இவர்களேயும் ''வாங்கோ-'' என்ருன்.

கல்பனு தலேயாட்டினுள் வரவில்லே என்று.

''அடுத்தது இதைவிட சனமாய் வரும்.''

கல்பனு பதில் சொல்லவில்லே.

''நீங்கள் எல்லாம் தனிக் கார் பிடிச்சுக் கொண்டு போகலாமே'' என்ருன் அவன்.

பஸ்சிற்குள் இருந்து தலேநீட்டிக் கொண்டிருந்த சிலர் கொல் என்று சிரித்தார்கள். தேவையில்லாமலே

''போடா விசரா-'' என்று தான் ராகினி சொல்ல நினேத்தாள். ஆனுல் சொல்லவில்லே.

மினிபஸ் அசையத்தொடங்கியது,

"பாத்திரே ராகினி எங்கட சமுதாய முன்னேற்றத்தை."

என கல்பனு சொல்லிக்கொண்டு இருக்கையில் அதிக சனமில்லாமல் சி-ரி-பி- பஸ் ஒன்று வந்தது. அதில் அவர்கள் ஏறினுர்கள்.

பஸ்சில் இருவரும் ஒன்ருக இருக்க இடம் கிடைத்தது பஸ் வேகமாக காற்று முகத்தில் ஓங்கியடித்தது தலைமயிர் காற்றில் பறக்க ஆரம்பித்தது. குளிர்மை கலந்த வெம்மை முகத்தை இதமாக்கியது.

அவர்களுக்கு முன்னுல் கணவனும் மனைவியுமாக இருக்க வேண்டும் அமர்த்திருந்தனர்.

இருவரிடையேயும் அன்னியோன்யம் இருக்கவில்லை பொருளாதார வளம் குன்றியவர்கள் போலவும் தென்பட்டார்கள்.

அந்தப்பெண் எதையோ சொன்னுள். ஒன்றிரண்டு வார்த்தைகள் அல்ல வேகமாக வெளிப்பட்ட ஏராளமான வார்த்தைகள். "வாயைப் பொத்திக் கொண்டு பேசாமல் இரு." என்ருன் புருஷன் அவன் வயது நாற்பதாக இருக்கலாம்.

பெண் சிறு பொழுது பேசாமல் இருந்தாள். மனம் கேட்கவில்லைப் போலும் மீண்டும் தொடர்ந்தாள்

"வாயைப் பொத்திக்கொண்டு பேசாமல் இருக்கப் போறியோ அல்லது பஸ் எண்டும் பாராமல் வாயைப் பொத்தித் தாறதோடி."

முன்பைவிட சற்று உரத்த குரலில் சொன்னுன் பஸ்சில் உள்ள சிலருக்கும் அது கேட்டும் இருக்கலாம். அந்த "டி" என்ற சத்தம் மிக நன்ருக உறைத்தது. பட்பட் என்று சிலபேர் திரும்பிப் பார்த்தார்கள். ஆனுல் அந்தப் புருஷன் எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் இருந்தான்.

ராகினிக்கு அந்தப் பெண்ணைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அவள் ஜன்னல் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கண்கள் கண்ணீரில் பளபளத்தது.

கல்பனு திரும்பி ராகினியைப் பார்த்தாள். கண்களில் கோபமும் தெறித்தது.

"நீ புண்ணியம் செய்தவள்." என்றுள் மிக மெதுவாக.

ராகினியின் விழிகள் வியப்புடன் விரிந்தன.

"ஏன்."

"உனக்கு கலியாணம் செய்யேல்லை எண்டது தான் பிரச்சனை. ஆனல் கலியாணம் செய்த ஆட்களுக்கு எத்தனை பிரச்சனையள்."

ராகினி மௌனமாக அவள் சொன்னதைக் கேட்டாள்.

"உனக்குத் தெரியுமோ என்னவோ. நான் என்ரை புருஷனோடை இல்லை."

தெரியும் எனத் தலையசைத்தாள் ராகினி.

"இஞ்சை மாறி வாறதுக்கு முதல். கிட்டத்தட்ட இரண்டு வருஷம் இருக்கும். நான் அவனைக் கைவிட்டு" கலியாணம் முடிச்சு ஐஞ்சு வருஷங்கள் அவனோடை இருந்து மூன்று பிள்ளைகள். கடைசிப்பிள்ளைக்கு இப்பதான் மூன்று வயது முடிஞ்சிருக்கு."

அவள் மிகமெதுவாக சொல்லிக்கொண்டு வருபவற்றை ராகினி மிக அவதானமாகக் கேட்கவேண்டியதாயிற்று. "அவனைக் கலியாணம் முடிச்சு ஐஞ்சு வருஷமும் நான் சந்தோஷமாக இருக்கேல்லை. மூன்று பிள்ளை பெத்திருக்கிறுளே - சந்தோஷமாய் இருக்கேல்லை எண்டு எப்படிச்சொல்லலாம் எண்டு நீ நினைக்கலாம். ஒரு பொம்பிளை சந்தோஷமாக இருக்கிறதுக்கும் பிள்ளை பெறுவதற்கும் சம்பந்தமே இல்லை. நான் என்ன சொல்ல வாறன் எண்டது உனக்கு

விளங்கும் எண்டு நினைக்கிறன். நான் அவனைவிட்டுப் பிரிஞ் சது நல்லதுக்குத்தான். இல்லாட்டி நாலாவதும் ஐந்தாவ தும் கூட பிறந்திருக்கும்.'' என்றாள் அவள். கண்களில் பளபளப்பு தென்பட்டது. ஓரங்களில் கண்ணீர் அரும்பு கட்டியிருந்தது.

ராகினி அவளை ஆழமாகப் பார்த்தாள். எந்நேரமும் சுறுசுறுப்பும் கம்பீரமும், புன்முறுவலும் கொண்ட இவ ளுக்கு கூட இந்த நிலையா?

''ராகினி எத்தினை பொருத்தம் பார்த்தும் கலியாணக் செய்தென்ன, சாதி, சமயம், குலம் கோத்திரம் செம்பு தண்ணி எடுக்கும் இடங்கள் என்றெல்லாம் பார்த்து முட் டையிலை மயிர் பிடுங்கிறமாதிரி விண்ணாணங்கள் எல்லாம் பார்த்து என்ன பிரயோசனம்? எத்தினை புருஷன் பெண் சாதிகள் சந்தோஷமாக நீண்ட காலத்துக்கு இருக்கினம் எத்தினைபேர் மனமொத்து வாழுகினம். இந்த மூன்சீற்றில் இருக்கிற புருஷன் தான் சொன்ன மாதிரி வாயைப்பொத்தி அடிச்சால் அந்தப் பெண் என்ன செய்வாள்? என்ன செய் யலாம்?

பஸ் விரைந்து கொண்டிருந்தது. ராகினியும் சிந்தனை வயப்பட்டாள்.

''என்ரை புருஷன் சரியான குடிகாரன். செலவாளி. அதோடை சந்தேகப்பேர்வழியும். வெறியில வந்து அவ னோடை உனக்கு என்ன கதை எண்டு அடிப்பான், உதைப் பான். பிறகு இரவிலை சேர்ந்து படுக்கவும் வந்திடுவான். நான் என்ன செய்யலாம் சொல்லு ராகினி. இது என்ரை குடும்பத்திலை மாத்திரமல்ல எல்லாக் குடும்பத்திலையும் இப் படித்தான். முன் சீற்றிலை இருக்கிற புருஷன் பெண்சாதி யைப் பாரன். இதுதான் உண்மையான நிலை. எங்கடை சமுதாய அமைப்பாலையும் மற்றவையள் என்ன நினைப்பி னம், பிழையாய் கதைப்பினம், மரியாதை இல்லை எண்ட தாலையும் தான் கன குடும்பங்கள் சந்தோஷமாய் இருக்கி

றதாய் நடிச்சுக்கொண்டு இருக்கு. வெளிநாடுகளிலை மாதிரி எண்டால் இஞ்சையும் ஒவ்வொருத்தரும் டைவோர்ஸ் எடுத்து எடுத்து நாலைஞ்சு தரம் கலியாணம் முடிச்சிடுவினம். நான் சொல்லுறது உனக்குச் சிரிப்பாயும் இருக்கலாம். ஆனல் வடிவாய் ஆராஞ்சு பார்த்தால் அதுதான் உண்மை. தனிய ஆம்பிளையளை மாத்திரம் தான் பிழை சொல்லேலல்லை சில இடங்களில் மாறியும் நடக்குது. ஆனல் கூடுதலாகப் பாதிக்கப்படுபவர்கள் பொம்பிளையள் தான். அதாலைதான் பிரிஞ்சு வாழவேண்டியிருக்கு. இதைத் தவிர வேறு வழி என்ன சாதகப் பொருத்தம், சாதிசமயம், குலம் கோத்திரம் பார்த்து வரட்டுத் தனமான சித்தாந்தம் பேசுகின்ற தாய் தேப்பன்கள் இல்லாத காலத்தில் எங்களைப் போல உள்ள பொம்பிளையள் என்ன செய்யலாம். என்னவோ நான் வேலை செய்யிற படியால் என்ரை காலிலை நிற்கக் கூடியதாய் இருக்கு. பொருளாதார வசதி இல்லாத பொம்பிளையள் முன் சீற்றிலை இருக்கிற பொம்பிளையள் மாதிரி கண்ணீரை விட்டுக் கொண்டு இருக்க வேண்டியது தான். வடிவாய் யோசித்துப்பார் ராகினி தாங்கள் ஒரு இனத்திடம் விடுதலை கிடைக்கிறதுக்காக பொருளாதார அரசியல் சுதந்திரம் வேண்டும் எண்டதுக்காக போராடுறம். ஆனல் எங்களுக்கு மத்தியிலை எவ்வளவு பிரச்சனையள் தெரியுமே? அடக்கி ஒடுக்கப்பட்டு கண்ணீர் விட்டுக் கொண்டே வாடும் சுதந்திரமில்லாத அதுவும் பொருளாதார சுதந்திரமில்லாத பெண்கள், இன்னமும் மறைமுகமாகவேனும் உள்ள சாதி அமைப்புக்கள் இவை எல்லாவற்றுக்குமான முடிவுகள் என்ன?'' என்றுள் கல்பனு.

ராகினிக்கு அவள் வேதனைகளுக்கு ஒத்டதம் கொடுக்க வேண்டும்போல இருந்தது. சொந்தமண்ணிலைவாழமுடியாது கஸ்டப்படும் மக்களுக்கு சொந்தவாழ்க்கையிலும் பிரச்சனை என்றுல் எப்படிவாழ்வது.

பஸ்ராண்டில் இறங்கி அலுவலகம் போவதற்காக பஸ் மாறியபோது அவர்களிடையே மௌனம் நிலவியது. பஸ்சைவிட்டு இறங்கியபோது அவர்களின் முன் சீற்றுக்காறன் "வா இதால போவம்" என்று ஒருதிசையால் போக அந்தப் பெண்ணும் அவன்பின்னல் கலங்கிய கண்களுடன் போனுள் அப்போதுதான் பார்த்தாள் அவள்தாய்மையடைந்திருப்பதை. ஆறேழுமாதங்கள்கூட இருக்கலாம்.

"பார்த்தியா ராகினி" என்ருள் கல்பனு.

"அடிவேண்டி உதைவேண்டி பிள்ளையைமாத்திரம் பெறவேண்டிய நிலைதான் பெம்பிளையளுக்கு." என்ருள் தொடர்ந்து.

சிரிபி பஸ் இல்லாத காரணத்தால் அவர்கள் மினி பஸ்சில் பிரயாணப்பட்டார்கள். மூச்சுத்திணற சனங்கள் ஏற்றப்பட்டபின்னரும் கூட "இடம் இருக்கு" "இடம் இருக்கு" என்று சனங்களை திணிக்க முயன்று வெற்றியும் கண்டபின்னர் மினிபஸ் புறப்பட்டது.

அந்து அலுவலகத்தை அடைந்தபோது காலை பத்து மணி இருக்கும். வெய்யில் கடுமையாகச் சுட்டது. வாசல் கேற்றில் நின்றவர்கள் புரியாதமொழியில்பேசினுர்கள். புரியாத மொழியாலே தானே அன்றும் இன்றும் பிரச்சினை.

கான்ட் பாக்கை திறந்து அதனைச்சோதனைசெய்துவிட்டு நாங்களும் இந்த நாட்டு பிரைஜைகள் என்பதை அடையாள அட்டைமூலம்காட்டி உள்ளேபோகவேண்டியதாயிற்று பொதுசனங்களால் அது திமிலோகப்பட்டது

ஒரு இடத்தில் புகுந்தார்கள் மேசைமுன்னல் இருந்து சிகரெட் புகைத்த ஒருவர் கல்பனுவைக் கண்டவுடன் அடித்துப்பாய்ந்துஎழுந்து ஓடிவந்தார். வெகுகரிசனையுடன் "என்ன விஷயம்வாருங்கோ கன காலம்கண்டு கொஞ்சம் மெலிஞ்சுபோனீங்கள் போல இவஉங்கடைபிரண்டா உங்கடை பிரண்ட்ஸ் எல்லோரும் உங்களைப் போல வடிவான ஆட்கள்தான் ,' என்ருர்தேவையில்லாமல் சிரித்து.

ராகினியின் மனம் சட்டென்று தீப்பிடித்துக் கொண்டது. யாரிவன்? என்னநடந்தது இவனுக்கு? அவன்பார்வை வெகுசுயாதீனமாக கல்பனாவைதடவியதை ராகினி உணர்ந்தாள்.

கீழ் இருந்து மேலாக மேல் இருந்து கீழாக பார்வை சுழியோடியது. தன்னையும் அவ்வாறு பார்வையால் மேய அவள் முற்படுவதை ராகினி உணர்ந்தாள். உடம்பில் ஏதோ அசிங்கம் பரவுவதைப்போல அருவருப்பு உண்டானது. தலையிலே தண்ணீரை ஊற்றவேணும் போல இருந்தது. அதுகாரணமாக ராகினி அப்பாற் செல்ல முற்பட்டாள்.

கல்பனு எப்படியோ தப்பிப் பிழைத்து ராகினியைப் பின்தொடர-

“உனக்கு கதைக்கிறதுக்கு வேறை ஆட்கள் இல்லையே? எனப் பார்வையாலேயே ராகினி கல்பனுவைக் கேட்டாள்.

“உன்ரை பார்வை எனக்கு விளங்குது ராகினி. நான் உந்த அயோக்கியனை எதிர் பாக்கேல்லை. உவனைப் போல இஞ்சை கனபேர் இருக்கினம் ஒருநாளைக்கு ஆரிட்டையாவது செருப்பால வாங்குவான்கள்.”

“அது மாத்திரம் காணுது” என்றாள் ராகினி.

‘புருஷன் இல்லாத பொம்பிளையள் அல்லது புருஷனை விட்டுப்போட்டு இருக்கிற பொம்பிளையள் எல்லாம் எதுக்கும் ரெடியான பொம்பிளையள் எண்டு இவன்களைப்போல ஆட்கள் நினைக்கினம் எந்த நேரமும் ஆம்பிளையளைத்தேடிக் கொண்டு படுக்கையை பங்குபோடத் தயாராய் இருக்கினம். எண்டும் நினைப்பு. இதுக்கு என்ன செய்யலாம் எண்டு சொல்லு. கலியாணம் முடிச்சால் புருஷன்மாராய் இருக்கிற ஆம்பிளையளும் எங்களை நிம்மதியாய்வாழ விடுறேல்லை. அந்த உபத்திரபம் வேண்டாம் எண்டு புருஷ பந்தத்தை உதறிக்கொண்டு வெளியிலை வந்தால் மன்மத பாணம் எய்கிற ஆம்பிளையளை என்ன செய்யலாம்.” என்று கேட்கும் போதே குரல் உடைந்துபோய் இருந்தது.

"நாங்கள் நாகரீகம்- அது இது எத்தனையோ விடயங்களிலை முன்னேறினாலும் இன்னும் கற்காலத்திலை தான் நிற்கிறம்." என்றாள் ராகினி.

நடைபாதை ஓரமாக ஒரு வயதான பெண்மணியும் இளம் பெண்ணும் நின்று கொண்டு இருக்க அவர்கள் எதிரே ஒரு நடுத்தர வயதுக்காரர் தீவிரமாகக் கதைத்துக் கொண்டு நின்றார்.

"கொஞ்சமாவது குறையுங்கோ ஐயா. நாங்கள் கஸ்டப்பட்ட ஆட்கள்" என்றாள் வயதான பெண்மணி.

"அப்பிடி என்றால் இது சரிவராது. இது எனக்கில்லை நானும் எத்தனை பேருக்கு கொடுத்து உங்கடை அலுவலைச் செய்யவேணும் இருநூறு ரூபாய்க்கு ஒருசதம் குறைந்தாலும் பிரச்சனை" என்றார் அவர்.

"ராகினி - உதிலை நிற்கிறவனை வடிவாய்ப் பார்" என்ற கல்பனா விரைவாக நடந்தாள். ராகினி அவரைப் பார்த்தாள் கசங்கிய சேட், லோங்ஸ் வாரப்படாத தலை, நரை மயிர்களுடன் கூடிய நாலைந்து நாட் தாடி முகத்தில் தொடர்ச்சியாகக் குடிக்கும் குடியின் வெம்மை.

இருவரும் அப்பால் நடந்தார்கள். அந்தமனிதர் இவர்களைக் காணவில்லை.

"ஆர் இவர்" என்றாள் ராகினி.

கல்பனா சிரித்தாள்.

"என்ரை புருஷனாய் ஐந்து வருஷம் இருந்தவன்" என்றாள் அலட்சியமாக.

ராகினி அவளை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

கல்பனா வேறேதும் கூறாமல் தொடர்ந்து நடந்தாள்.

# 6

மாலை ஆறுமணி என்றாலும் வெய்யிலின் கோரம்குறைய வில்லை. வேகமாக வீசிய காற்று புழுதியை அள்ளி வீசி யது. தத்தமது கருமங்க க்காக வெளியிடங்களுக்குச் சென்றவர்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் கள்.

ராகினியும் வனஜாவும் அம்மன் கோயிலுக்குப் போய் விட்டு வந்து கொண்டு இருந்தனர். தெருவின் இரண்டு பக்கமும் சில மாதங்களுக்கு முன்னர் இருந்த நிலைமை போல் இல்லாமல் ஆட்களின் நடமாட்டம் இருந்தது.

மதில்கள் இருந்த இடங்களில் கிடுகுவேலி தற்காலிக மாக உருவாகி இருந்தன. வேறு சிலர் உடைந்த மதில் களைப் புதிதாகக் கட்டிக் கொண்டிருந்தார்கள். கூரைக ளின் பழைய ஓடுகளுடன் புதிய ஓடுகளும் தெரிந்தன.

கார் ஒன்று அளவான வேகத்துடன் எதிர்ப்புறமாக வந்தது. காரை ஓடிக்கொண்டிருந்தவர் தலையை நீட்டிச் சிரித்தார்.

"உவரைப் பார்த்து ஏனக்கா சிரித்தாய்." என வேகத் துடன் கேட்டாள் வனஜா.

"ஏன்-" ராகினி கேட்டாள்.

"என்னக்கா- எங்கடை சனம் மாதிரித்தான் நீயும் இருக்கிறாய். எவ்வளவு கஸ்டங்களை அனுபவித்தாலும் அது களை கெதியிலை மறந்துபோற மாதிரி நீயும்......

"என்ன சொல்லுறாய்-" என ஆச்சரியமானாள் ராகினி

"என்னக்கா நீ எந்த உலகத்திலை இருக்கிறாய்? எண் பத்தியேழு அக்டோபர் நவம்பரிலை நாங்கள் கோயிலிலை அகதியாய் இருந்ததை மறந்து போனியோ."

''ஓமோம் இப்ப அதுக்கென்ன?''

வனஜா கோபமானுள்.

''என்னக்கா-'' என்ருள் மீண்டும் இறுக்கமாக தொடர்ந்து ''உந்தக் காரிலே போன மில்காரப் பொன்னுத்துரையிடம் நாங்கள் அரிசிக்குப் போனது ஞாபகம் இல்லையே–'' என்ருள்.

''அட நீ அதைச்சொல்லுறியே'' என்ற ராகினி சிரித்தாள்.

என்னக்கா- சிரிக்கக்கூடிய விசியமே இது.''எனக்கேட்ட வனஜாவைப் பார்த்தாள் ராகினி.

எத்தனையோ குடும்பங்களைப்போல அவர்களும் அந்தக் கோயிலில் அகதியாக இருந்தார்கள். கோயிலில் தங்கியிருந்து கொண்டு பக்கத்தில் இருந்த வீட்டில் சமைத்துச் சாப்பிட்டார்கள்.

எல்லோருக்கும் அந்த வசதி இருக்கவில்லை அனேகமானேருக்கு கோயிலிலேயே ஒரு நேரத்திற்கு சாப்பாடு வழங்கப்பட்டது. சிலர் ராகினி குடும்பத்தினர் போல வீடுகளிலும் சமைத்து சாப்பிட்டார்கள் அனேகமாக ஒரு நேரம் தான் சமைப்பார்கள்.

காலையில் ஒன்றும் இல்லை. மத்தியானம் சமைப்பார்கள். சாப்பிட்டு மிஞ்சுவதை இரவு வைத்துக் சொள்வார்கள். இதுதான் நிலைமையாக இருந்தது

வீட்டைவிட்டு போட்டிருந்த உடுப்புகளுடன் ஓடியதால் எதையுமே எடுக்கவில்லை. நிலைமை அப்படி இருந்தது. கோயிலுக்கு வந்த பின்னர் கையில் இருந்த காசில அண்மையில் இருந்த கடையில் அரிசி சாமான்களை வாங்கினுர்கள் எத்தனை நாட்களுக்கு கடையில் சாமான்கள் இருக்கும்? கையிலும் காசு இருக்கும். செல்களுக்கும் குண்டுகளுக்கும் தட்டுப்பாடு இல்லாத அந்த நேரத்தில் சாப்பாட்

ருக்கும் ஏனைய உயிர்காக்கும் நடவடிக்கைகளுக்கும் தான் மாபெரும் தட்டுப்பாடு.

கடையிலும் ஒன்றும் இல்லாமல்போய் இவர்கள் கைக ளும் வரண்டபோது நிலைமை மோசமாகி விட்டது. எல் லோரும் ஒரே நிலையில் இருக்கும் போது யார் யாருக்கு உதவி செய்வது. ஒரு சிலருக்கு வசதி இருந்தாலும் பிர யோசனம் இல்லை. கோட்டைகள் கட்ட நினைப்பவர்கள் சாகும்போது அதற்குத்தான் தேடிக்கொண்டிருப்பான்.

அந்த சமயத்தில் தான் சமீபத்தில் உள்ள மில்லில் அரிசி விற்பதாக கோயிலடியில் கதைத்தார்கள். வல்லிபு ரத்தாருக்கு அப்போது உடல்நிலை சரியில்லை. அந்த நிலை யிலும் அவர் யார் யாரிடமோ அலைந்து கஸ்டப்பட்டு கொஞ்சக்காசு கடன் வாங்கிக்கொண்டு வந்தார்.

அவரை கோயிலடியில் இருக்கச்சொல்லி விட்டு வன ஜாவும் ராகினியும் சிறிய பை சகிதம் மில்லுக்குப்போனார் கள். அசாதாரண சூழ்நிலை நிலவிய நேரம் வானக்கூரை யில் இயந்திரங்கள் பறந்து கொண்டிருந்தன. தூரத்தில் சட சடச் சத்தங்கள் வேறு.

மில்லின் இரும்புக் கேற்று உட்பக்கமாகப் பூட்டப் பட்டு இருந்தது. வெளியே மிகுந்த எதிர்பார்ப்புடன் கஸ் டங்களை அதன் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டு இருந்த மக்கள் சிறிய பெட்டி கடகங்களுடன் திருக்கதவு திருக்கதா? அருள் கிடையாதா? என்ற ஏக்கத்துடன் நின் றார்கள். அவாகளுடன் ராகினியும் வனஜாவும் சேர்ந்தார் கள்.

கேற்று இடைவெளிகள் ஊடாக உள்ளே நிற்கும் கார் கள், வான்கள், லொறிகள் தெரிந்தன. ஆட்களும் அம ளிப்பட்டார்கள். மூட்டை மூட்டையாக ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன.

வெகுநேரம் அவர்கள் சமாதானத்திற்காக ஏங்கி நிற் கும் மக்கள் போல காத்து நின்றார்கள். பொறுமையை இழந்தாலும் கூட என்ன உளத்துடிப்புடன் இருந்தனர்.

செக்கன்கள் மணித்துளிகளாக அசைந்து அசைந்து லொறிகள் வெளிவருவதற்காக கேற் திறக்கப்பட்ட போது அதைச் சாட்டாக வைத்துக்கொண்டு சனங்கள் உள்ளே நுழைந்தார்கள். மிகுந்த சங்கடத்துடனும் ராகினியும் வனஜாவும் உள்ளேபோனார்கள்.

போனவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. சில்லறை யாக விற்பனை இல்லை. ஒரு மூட்டை என்றால் தரலாம் என்று அங்கு நின்றவர்கள் பதில் சொன்னார்கள்.

அரிசி மூட்டையாக எடுக்க அங்கிருந்த பல பேருக்கு வசதியில்லை ராகினிக்கும் வனஜாவுக்கும் கூட அதுதான் நிலை. பத்து அல்லது பதினைந்து கொத்து அரிசி வாங்கக் கூடிய நிலையுடன் போனவர்களுக்கு இப்படியான ஒரு நிலை வந்தவுடன் அதிர்ச்சியாக இருந்தது.

வந்தவர்களில் சிலர் வாக்குவாதப்பட்டும் பிரயோசன மில்லை. ஆட்கள் குறையக்காத்திருந்தனர் ராகினியும் வன ஜாவும்.

சிலர் வாக்குவாதப்படாமலேயே திரும்பினார்கள். தங் கள் தலைவிதியை நொந்து கொண்டு சிறுபான்மைஇனமாக இருப்பதும் அதிலும் கஸ்டப்பட்ட நிலையிலும் இருப்பதை அவர்கள் தங்களைத் தாங்களே நொந்து கொண்டதன் மூலம் தீர்த்துக்கொண்டனர்.

''நாங்கள் ஒருக்கா. கதைச்சுப் பார்ப்பம்.'' என்றாள் வனஜா.

''கொஞ்சம் பொறு பார்ப்பம்.'' ராகினி சொன்னாள்.

மேலும் சில நிமிடங்கள் கரைந்தன

''என்னக்கா நான் கதைக்கட்டே'' ''வனஜா மீண்டும் தெண்டித்தாள்

''சரி வா பார்ப்பம்'' என்று இருவரும் பொன்னுத் துரையரை அணுகினார்கள்.

அவர் முகம் இறுகிப்போய் இருந்தது.

"என்ன விசயம்-" என்றார். இவர்கள் சொன்னார்கள்.

"என்னமாதிரி எடுக்கப்போறியள்-" அவர் கேட்டார்.

அதையும் சொன்னார்கள்.

"சா-" எனக் கவலைப்பட்டார் அது முகத்தில் தெரியவில்லை.

"நாங்கள் சில்லறையாய் விற்கேல்லை. அப்படிக் கொடுக்கத் தொடங்கினால் பிரச்சனை இருக்கிறதை ஐஞ்சு, பத்து மூட்டையாய் கொடுக்கிறம். அப்ப நீங்கள் என்ன செய்யப் போறியள்." என்றார்.

வனஜாவுக்கு வழக்கம் போலவே கோபம் வந்தது. ராகினியின் கையைச் சுரண்டி "வா அக்கா போவம்-" என்றாள்.

"கொஞ்சம் நில்லுங்கோவன் பார்ப்பம். அரை மூட்டை எடுப்பியளோ? வேறை யாராவது அரை மூட்டை எடுக்க வந்தால் சேர்த்துப் பங்கிடலாம்." என்று சொல்லிவிட்டு இவர்களின் பதிலை எதிர்பார்க்காமலே அப்பால் போனார்.

"போவம் அக்கா நேரம் நல்லாய்ப் போட்டுது. அம்மா பயந்துகொண்டு நிற்பா." என வனஜா முணுமுணுத்தாள்.

"திற்கச் சொன்னதுக்கப்புறம் போறது சரியில்லை. வனஜா நிண்டனுங்கள் கொஞ்சநேரம் நிண்டு பார்ப்பம்" என ராகினி சமாளித்தாள்.

ராகினியும் பொறுமை இழந்த போது நேரம் வெகுவாக போய் இருந்தது. பொன்னுத்துரையரையும் காண வில்லை. மேலும் நிற்பது பிரயோசனம் இல்லை என்பதை உணர்ந்த வனஜா.

"என்னக்கா நீ –" எனக் கோபிக்க முனைய வெறுங் கையுடன் கோயிலடிக்கு திரும்ப வேண்டியதாயிற்று.

அவர்களைக் கடந்து கொண்டு வான்களும், கார்களும் மூட்டைகளுடன் விரைந்து நகர்ந்தன. எத்தனை ரூபா கூட்டி எந்த இடத்தில் விற்பனையாகப் போகின்றதோ.

இப்போது நடந்து கொண்டு யோசிக்கஅன்றைய சம்பவத்தின் அப்போதைய தாக்கம் மிக அதிகமாக இருந்தது, வனஜா அன்றுசரி இன்றுசரி கோபப் பட்டதை பிழையாக நினைக்க முடியாது - என ராகினி நினைத்தாள்.

''அன்றைய நிலையில் அக்கா சும்மா குடுக்க வேண்டாம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐஞ்சோ பத்துக் கொத்து அரிசியை விற்றிருக்கலாம், அது தான் மனிதாபிமான முள்ள ஒரு ஆளுக்கு உரிய பண்பு - ஆனால் என்ன நடந்தது? ஏன் இப்படி நடந்தது? என வனஜா கேட்டாள்.

ராகினி பதில் சொல்ல வில்லை. அதனால் இருவரும் மௌனமாக நடந்தார்கள்.

தெருவில் இருந்து தங்கள் வீட்டுக்குப் போகும் ஒழுங்கையில் இறங்கினார்கள், ஒழுங்கை முகப்பில் இந்த வீட்டுக் கேற்றடியில் பொன்னம்மா நின்று கொண்டிருந்தாள். அவர்களுக்கு தூரத்து உறவினரான அவளைப் பார்த்து இருவரும் சிரித்தார்கள், அது காரணமாக கதைக்கவும் வேண்டியும் வந்து விட்டது.

''பொழுது படுற நேரத்திலை எங்கை போட்டு வாறியள் -'' எனக்கேட்டாள் அவள்.

''அம்மன் கோயிலடிக்கு'' எனப் பதிலளித்தாள் ராகினி.

''கோயிலடிக்கு போற தெண்டால் நேரத்துக்கெல்லோ போய் வரவேணும், இப்பத்தைய நிலைமை உங்களுக்குத தெரியாதே. உனக்குத்தான் வயது போட்டுது எண்டாலும் பரவாயில்லை, இவளையும் ஏன் கூட்டிக்கொண்டு திரியிறாய்-''

ராகினிக்கு நெஞ்சில் ஊசியின் முனை குத்தியது போல வலித்தது வனஜா தமக்கையைப் பார்த்தாள், மனத்தில்

ஏற்பட்ட மாற்றத்தை வெளிக் காட்டாமல் மறைக்க தமக்கை படும் பாட்டையும் பார்த்தாள்.

"நீங்கள் ஆரைப் பாத்துக் கொண்டு நிக்கிறியள்." எனக் கேட்டாள்.

"என்ரை மூத்தவள் ரஞ்ஞுக்கு புடவைக்கடைக்குப் போனவள் அவளின்ரைவயதுக்கு இன்னும் அவள் தனியப் போய்ப் பழக்கமில்லை. புருஷன் உங்கை இல்லைத்தானே. வந்து நின்றுட்டுப் போன கிழமைதான் திரும்பிப்போன வர்".

பொன்னம்மாவின் மூத்த மகளுக்கு ராகினியை விட இரண்டொருவயது அதிகம். மூன்று பிள்ளைகள்கூட இருக் கின்றார்கள்.

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போலவே பொன்னம்மாவும் ராகினியிலேயே வந்து நின்றாள்.
"கொய்யாவும் கொம்மாவும் என்ன செய்யினம்? இன் னும் உனக் கொண்டும் சரிவரேல்லையே –"

ராகினி பதில் சொல்லாமல் சிரித்து சமாளிக்க முனைந் தாள்.

"இப்பத்தைய மாப்பிளைமார் பதினெட்டு இருபது வய துக்குமர்ப் பெட்டையளாத்தான் பாக்கிறுன்கள் வயது போகப் போக பிரச்சனை தான், கிட்டடியிலை ஒன்றும் புதி சாய்ப் பாக்கேல்லையே –" என மனுசிவிடுவதாக இல்லை

என்ன சொல்லலாம், கொதிக்க கொதிக்க எண் ணெயை ஊற்றுவது போல பொன்னம்மாவின் வார்த்தை கள் இருந்தன, அமிலமாக மனத்தை அரித்தன, பொங்கி வரும் ஆத்திரத்திற்கு ஏற்ப பதில் சொல்லலாம், ஆனல் மனிசி ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிடும், எனவே சமாளிக்க வேண்டும் எப்படியும் சமாளிக்கவே வேண்டும், என ராகினி நினைத்தாள்.

வனஜா பொன்னம்மாவை தள்ளி விழுத்தி மிதித்து விடும் உச்சமான கோபத்துடன் நிற்பதை ராகினியால் உணர முடிந்தது.

"பார்ப்பம் - வசதியாய் ஒரு கிழவரும் வந்து அமை யேல்லை -" என்றுள் சிரித்துக் கொண்டு ராகினி. எப்படி யும் சமாளிக்க வேண்டும் என நினைத்தாலும் அதையும் மீறி சற்று கிண்டலாக வார்த்தைகள் வெளிப்பட்டன.

"ஏன் அப்படிச் சொல்லுறுய் - நாறபது நாற்பத்தைந்து வயதிலேயும் ஆம்பிளையள் கலியாணம் முடிக்காமல் இருக் கினம். மனிசிமார் செத்து வாழ்விழந்த ஆம்பிளையளும் இருப்பங்கள். சீதனம் இல்லாமலே செய்யலாம், நல்ல புறேக் கராய்ப் பார்த்து தெண்டித்தால் சரிவரும். மாப்பிள்ளை வரு வர் வருவர் என்று பேசாமல் இருந்தால் வருவரே கொஞ் சம் கஸ்டப்பட வேணும், ஏதோ நான் செய்த புண்ணிய மும் அம்மாளின்ரை அருளுமாக்கும் என்ரை நாலு பெட்டை யளுக்கும் உரிய உரிய காலத்திலை கலியாணத்தைச் செய்து போட்டன். உவள் கடைசிக்கும் இருபது வயதிலை கலியா ணம் செய்து கொடுத்தனுன், நீ-ஒண்டிக்கும் கவலைப்படாதை எல்லாம் நல்ல படியாய் நடக்கும். அதுக்கென்ன செய்யி றது ஒரே ஒரு பெடியன் எண்டு இருந்தான், கொய்யாவும் கொம்மாவும் அவனை நல்லாய் நம்பி இருந்தினம், அவன் இப்படி கூடாத கூட்டத்தோடை சேர்ந்து நாசமாய்ப் போவான் எண்டு ஆர் நினைச்சினம், இனி உதுகளை யோசிச்சு என்ன பிரயோசனம், உங்களை அம்மாள் கைவிடாள், நீங் கள் ஒண்றுக்கும் யோசிக்க வேண்டாம்-" என்று தன் நீண்ட பிரசங்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தாள் பொன்னம்மா.

தரையில் துடிக்கும் மண்புழுவை புரட்டிப்புரட்டி எடுத்து அதனுல் எழும் மகிழ்ச்சியை அனுபவிப்பது போன்ற ஒரு தன்மையினை பொன்னம்மா அனுபவித்தாளோ என் னவோ.

''நேரம் போட்டுது நாங்கள் போட்டு வரவோ– அம்மா தேடப்போறு'' என்றுள் ராகினி.

''அங்கை என்ரை மூத்தவளும் வாருள்.'' என்று பொன் னம்மா சொல்லும் போதே கைகளில் இரண்டு பெரிய பாசல்கள் கசிதம் பொன்னம்மாவின் மூத்த மகள் வந்து சேர்ந்து ராகினியைப் பார்த்துச் சிரித்தாள், வனஜா முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

சாறிகட்ட மறந்துபோய், காவ்ஸ்கேட்ப்ளவ்ஸ் உடன் போன பொன்னம்மாவின் மூத்தமகள்.

''அம்மா – பகிடி ஒன்று தெரியுமே என்னுடை முந் திப்படிச்ச ஒருத்தரை இண்டைக்கு நியூமார்க்கட்டில கண்டு கதைச்சனுன், ஏன் இன்னும் மறிபண்ணேல்லே என்று கேட் டார், அண்டைக்கு பாத்தமாதிரியே இப்பவும் இருக்கிறீர் என்றும் சொன்னுர், எனக்கு சிரிப்பாய் போச்சு, எனக்கு மூன்று பிள்ளையள். என்று சொல்ல அவர் நம்பேல்லே.'' என்று சொல்லி பெரிதாகச் சிரித்தாள்.

''உனக் கென்ன வயதே போட்டுது நாங்கள் வேளைக் குக் கலியாணம் செய்து வைச்சபடியால் மூண்டு பிள்ளைய ளுக்குத் தாயாய் போனுய், அவ்வளவு தான்.''

''நாங்கள் போட்டு வாறம் –'' இருவரும் நடக்கத் தொடங்க.

''வயது போகுது என்ற கவலேயிலே சாப்பாட்டைக் கவ னிக்காமல் விடாதைபிள்ளை இப்பவே தலேமயிரும் குறைஞ்சு கன்னங்களும் வத்திப்போய் சரியான கேவலமாய் போனுய்.'' என்று பொன்னம்மா சொல்லிக் கொண்டு இருக்கும் போது அவர்கள் நடையில் வேகம் பிறந்து விட்டது.

''என்னக்கா, உந்த மசினிக்கு விசரே.'' எனக் கேட் டாள் வனஜா.

''ஏன்–''

"என்ன கதையெல்லாம் கதைக்குது. சுய சிந்தனையுள்ள எவையாவது உப்பிடிக் கதைப்பினமே ஒவ்வொரு சொல் லும் திட்டம் போட்டுத் தெரிவு செய்து கதைக்கிறமாதிரி எவ்வளவு வேதனைப்படுத்துது" என்ற வனஜாவின் கேள் வியில் உள்ள நியாயத்தை ராகினி உணர்ந்து கொண்டாள்.

"வனஜா இது தான் எங்களுக்கு உள்ள சாபக்கேடு. எங்கடை ஆட்களுக்கு மற்றவையளின்றை மனத்தைப் புண் படுத்திறதிலே, வேதனைப் படுத்தி வேடிக்கை பாக்கிறதிலே ஒருவகை ஆசை இருக்கு, மற்றவையளை விட தாங்கள் தனித் தன்மை வாய்ந்த ஆட்கள், மேலான ஆட்கள் என்ட டதை மற்றவையை உணர வைக்கிறதுக்கும் இப்படியான கதையளை கதைக்கிறது வழக்கம், இது எங்கடை மண் ணோடை ஊறிப் போன பாரம் பரியம் - மிக்க பண்பாடாய் போச்சு? என்னோடை படிப்பிக்கிற மிஸ்சிஸ் அங்கயற் கண்ணி அருட்பிரகாசம் என்ட ரீச்சர் இப்படித்தான். இப் பிடியான கதையளைத்தான் கதைப்பா. உவையளை என்ன செய்யலாம் நீ - சொல்லு." எனக் கேட்டாள் ராகினி.

"உப்பிடி எல்லாத்துக்கும் நாங்கள் என்ன செய்யலாம்? என்று, எல்லாத்தையும் கேட்டுக் கொண்டு நாங்கள் இருக் கிறதாலே என்ன பிரயோசனம் அக்கா."

"உப்பிடி கேள்வி கேட்கிறது சுகம் வனஜா, உப்பிடி யான ஆட்களைத் திருத்துகிறது என் னென்று? எங்களுக்கு உண்டாகிற ஆத்திரத்திற்கு அல்லது வேதனையளுக்கு நாங் களும் திருப்பி ஏதாவது கதைக்கலாம் கதைச்சு என்ன பிர யோசனம் இப்படியான கதையள் கூட்டுறது தான் மிஞ் சுமே தவிர வேறை ஒன்றும் இல்லை"

வனஜா மௌனமாக நடந்தாள். ஒழுங்கைக் கரை யோர வீடுகளிலே விளக்குகள் எரிய ஆரம்பித்து விட்டன, மாலை இருள் கனதியான திரையாக மாறிக் கொண்டிருக்க இருவரும் முன்பை விட வேகமானார்கள்.

வீட்டு வளவு வாசலில் அம்மா கால்கடுக்க நின்று கொண்டிருந்தாள்.

"ஏன், என்ன நடந்தது. பூசைமுடிய நேரம் போட்டுதோ-" எனக் கேட்டாள் அவள்.

'இல்லை வழியிலை ஒழுங்கை முகப்பிலை பொன்னம்மாக் கிழவி எங்களை மறிச்சு வைச்சு பூசை செய்தது." என்றாள் வெறுப்புடன் வனஜா.

"மனிசி புளிச்சல் கதை கதைச்சிருக்குமே." என்றாள் அம்மா.

"மனிசியோ - அந்தக் கிழவிக்கு ஒருநாளைக்கு வாயைப் பொத்தி நான் தான் அடி கொடுப்பன்-" வனஜா இரைந்து கத்தினாள்.

வளவினுள் நுழைய விறாந்தையில் வல்லிபுரத்தாருடன் இரண்டுபேர் இருந்தார்கள். ஒருவர் கந்தையா மாஸ்டர் மற்றவர் யார் என்று தெரியவில்லை.

# 7

திடீர் என விழிப்பு ஏற்பட்டது ராகினிக்கு. ஒழுங்கையில் நாய்கள் தொடர்ச்சியாகக் குரைத்தன, காலடிகளின் ஓசை ஒரே சீராகக் கேட்டன.

தலைமாட்டில் இருந்த மணிக்கூட்டினை எடுத்து நேரம் பார்த்தால் பன்னிரண்டு ஐம்பது, கதவு இல்லாத ஜன்னல் ஊடாக நிலவுக் கதிர்கள் எட்டிப் பார்த்தன. சாக்குருவி ஒன்று சத்தம் போட்டுக் கொண்டு விரைந்தது.

நாய்களின் ஆரவாரமும் குரைப்பும் தேய்ந்து இடம் மாறிக் கொண்டிருந்தது ஊர்ந்து செல்லும் சாரைப் பாம்பினைப் பின் தொடர்ந்து நாய்கள் குரைத்தபடி பின்னாலே செல்லுமே அது போல?

எலியொன்று கூரைமுகட்டில் கீச் சிட்டபடி பாய்ந்து, சென்றது, ராகினி படுக்கை விட்டு எழுந்தாள். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தாள்.

நீல வெளியில் தோட்ட வெளி வெள்ளியாகப் பள பளத்தது மெல்லிய குளிர் காற்று முகத்தில் வந்து முட்டி மோதியது அரை இருளில் வாழை இலைகள் சதிராடின அவற்றின் நிழல்கள் பயங்காட்டின.

நெஞ்சத்தில் குழப்பங்கள் முட்டிமோதின இரவு வனஜா வும் அவளும் கதைத்துக் கொண்டிருந்து விட்டு படுக்கவே வெகு நேரமாகிவிட்டது. அப்படி இருந்தும் இடையில் இப் படி ஏன் விழிப்பு ஏற்பட்டது. என்பதை அவளால் உணர முடியவில்லை.

நித்திரையை உடனடியாக தொடக் கூடிய வாய்ப்பு இல்லை. எதையாவது வாசிக்கலாம் என்றால் "லைட்" போட் டால் வனஜாவும் எழும்புவாள். அம்மா ஏன் என்று கேட் பாள். இருவரின் நித்திரையையும் குழப்ப அவள் விரும்ப வில்லை.

ஜன்னல் ஊடாகத் தோட்டவெளியைப்பார்கச் சந்தோஷ மாக இருக்கின்றது. ஆனால் மனத்தில் குழப்பங்கள் இருந்த படியால் அதனை முழுமையாக ரசிக்க முடியவில்லை.

முதல் நாள் மாலைகோயிலால் திரும்பிவரும் போது பொன்னம்மா சொன்ன வார்த்தைகளை அப்போது கேட்டுச் சமாளித்தாலும் ஓ வென்று கதறி அழுதாலும் தீராத வேதனை அப்போது ஏற்படுத்தி இருந்தது.

இரவு வனஜாவுடன் கதைக்கும் போதும்சரி இப்போது யோசிக்கும் போதும் சரி வேதனையால் நெஞ்சு பொருமுகின்

றது. ஒரு பெண்ணுக்கு திருமணம் பிந்துவதற்கு எவை காரணங்கள்? அல்லது நேரகாலத்துடனேயே திருமணம் நடப்பதற்கும் என்ன காரணங்கள்.

காண்பவனை எல்லாம் பார்த்து பல்லைக் காட்டி வசதியாக வாறவனை மயங்க வைத்து தாலிகட்டச் செய்திருந்தால் அம்மாவின் கண்ணீரும் ஏனைய வர்களின் கிண்டலும் இல்லாமல் போயிருக்குமா?

எத்தனை பேர் கண்டவுடன் காதலித்து கலியாணமும் செய்திருக்கின்றார்கள். என்றால் அது ஏன் முடியாமல் போனது அதுதான் நான் விட்ட பிழையா?

சட்டென்று அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்தது. கரு கருவென்ற மீசையும் கருமை நிறமும் கொண்ட மனோகரன் மாஸ்டர் அவள் மனத்தில் தோன்றினார்.

நான்கு வருடங்கள் இருக்குமா? அந்த ஆண்கள் கல்லூரிக்கு அவள் இடமாற்றம் பெற்று வந்தபோது அவளை விட நான்கு பெண் ஆசிரியைகள் இருந்தனர்

மூன்றுபேர் திருமணமானவர்கள். ஒருவர் திருமணமாகாதவன் தான். என்றாலும் வயது நாற்பத்தைந்தைத் தாண்டியிருந்தது, எனவே வயதில் குறைந்த செல்வியான ராகினிக்கு விசேட மரியாதை இருந்தது.

பாடங்கள் இல்லாத நேரங்களில் ராகினி நூல் நிலையத்தில் பொழுதைப் போக்குவாள். எப்போதாவது தான் ஏனைய சக பெண் ரீச்சர்கள் ஒன்று கூடிக்கதைப்பார்கள்.

அவர்களில் ஒருத்தியான மிஸ்சிஸ் புவனேந்திரன் ஒரு சிடுசிடுப்புக்காரி. வாயைத் திறப்பதே கஸ்டம். எப்படி இவ பிள்ளைகளுக்கு படிப்பிக்கின்ற என ராகினி சிலவேளை யோசிப்பதுண்டு.

திருமணம் முடிக்காமல் நாற்பத்தைந்தைத் தாண்டி மிஸ் சின்னத்துரையும் ஒருமாதிரி. சிலவேளை நன்றாகச் சிரித்

னுக் கதைப்பார் இருந்தாப்போல "உம்" என்று முகத்தை வைத்துக் கொண்டு போய்விடுவார்.

இப்படியான சூழ்நிலையில் எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு செயற்படுவது ராகினிக்கு சிக்கலாக இருந்தது என்றாலும் சமாளிக்கவேண்டி இருந்தது

அந்தக்கல்லூரியில் தான் மனோகரன் மாஸ்டரும் படிப்பித்தார். மனோகரன் மாஸ்டர் போன்ற வேறு பல மாஸ்டர்களும் இருந்தார்கள். எல்லோரையும் போலத்தான் அவருடனும் பழகினாள் ராகினி.

ஆனால்,

மனோகரன் மாஸ்டருடன் கொஞ்சம் கூடுதலாகக் கதைக்கவேண்டி இருந்தது. வருட விளையாட்டுப் போட்டிக்கு இருவரும் ஒரே இல்லத்திற்கு நியமிக்கப் பட்டார்கள். அது தொடர்பாக அடிக்கடி சந்தித்து செயல்பட வேண்டி இருந்தது.

அவர் எப்போதும் உற்சாகமான ஆள். கலகலவென்று பேசிக்கொண்டிருப்பார். பொழுது போவது கூடத் தெரியாது சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேச்சு நடக்கும் இலக்கியம், சினிமா, அரசியல் என்றெல்லாம் பேசுவார்கள்.

நல்லூர்க் கோயிலடியில் கூட ஒரு தடவையும் கண்டு வெகு இயல்பாக வெகு நேரமாகக் கதைத்து விட்டுத்தான் போனார். இப்படி எத்தனையோ சம்பவங்கள்

வனஜா கூட

''நல்ல மாஸ்டர்'' என்று சொல்லிக் கொண்டாள்

உண்மையில் மனோகரன் மாஸ்டர் அபூர்வமான ஒரு வராகத்தான் ராகினிக்கு தெரிந்தார்.

தெரிந்து என்ன பிரயோசனம்.

மனோகரன் மாஸ்டரில் ஒருவிதமான ஈடுபாடு ஏற்பட்டாலும்- அவர் மீதும் விபரிக்க முடியாத மதிப்பு ஏற்பட்டாலும் கூட ராகினி ஒரு எல்லையைத் தாண்டிப் போகவில்லை. போகவும் விரும்பவில்லை

ஆனல்,

மனோகரன் மாஸ்டரில் ஏதாவது தீவிரத்தன்மை நடுவே உள்ள எல்லையை மீறி தன் உணர்வுகளை வெளிப்படுத்துவாரா? மாட்டாரா? என்ற எதிர்பார்ப்பு இருந்தது எப்போதாவது சந்தோஷமாக அவர் உரையாட வரும்போது கேட்பாரா? வெளிப்படுத்துவாரா? என்று எதிர்பார்த்து கடைசியில்-

அந்த வருட முடிவில் மனோகரன் மாஸ்டர் இடமாற்றம் பெற்றுப் போனார் போவதற்கு முதல்நாள் எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் வழக்கம் போலவே இயல்பான பேச்சுடன் அவர் ராகினியிடம் விடை பெற்றார்.

"என்னை மறந்து போய் விடாதேங்கோ- எப்பவாவது வேறைஒரு கல்லூரியிலும் சேர்ந்து பணியாற்ற சந்தர்ப்பம் கிடைக்கும்." என்று சிரித்துக் கொண்டு சொன்னார்.

ராகினியும் எப்போதும் போலவே அவருக்கு விடை கொடுத்தாலும். சட்டென்று மனத்தில் ஒரு வெறுமை உண்டாகி விட்டது போலவும் அதனல் விளங்கிக் கொள்ள முடியாத ஒருவிதமான வேதனை உண்டாவதையும் உணர்ந்தாள்

வெகு நாட்களாகவே அந்த வேதனையும் தாக்கமும் இருந்தது. பின்னர் அது கால ஓட்டத்தில் கரைந்து போய் விட்டது

இப்போது இந்த அர்த்த இராத்திரியில் நித்திரை குழம்பி மனோகரன் மாஸ்டரைப் பற்றிய நினைவு ஏன் வர வேண்டும் என அப்போது ராகினி யோசித்தாள்.

அந்த நேரத்தில் மனோகரன் மாஸ்டருடன் பழகிய நாட்களில் அவரிடம் கேட்டிருக்கலாம்? கேட்டு அவர் சம்மதித்து இருந்தால் ஏன் இந்தப் பிரச்சனை. சந்தர்ப்பத்தைத் தவற விட்டு விட்டேனு?

மீண்டும் நேரத்தைப் பார்த்தாள். ராசினி- ஒன்று இருபதாகி விட்டது. அரை மணித்தியாலமாக ஜன்னல் கரையோரமாக நின்றதை நினைத்து வியந்தாள்.

தூரத்தில் பறவைகள் சில வீரிட்டு அலறி-பழையபடி ஓய்ந்தன, நிலவு துல்லிய மாக இருந்தது, நாய் ஒன்றும் ஊளையிட்டது.

வனஜா புரண்டு படுப்பது தெரிந்தது. அம்மா இருமுவது கேட்டது கொஞ்ச நாட்களாக அம்மா இருமிக் கொண்டு தான் இருக்கின்றுள். ஆஸ்பத்திரிக்கு போம்மா என்று சொன்னுலும் கேட்பதில்லை.

ஐயாவுக்கும் வயது போய் விட்டது. உழைத்து உழைத்து உருக்குலைந்து போய் விட்ட உடல் பட்டென்று ஒரு நாள் போய் விட்டால்?

அந்த நினைப்பே நெஞ்சைச் சுண்டி இழுத்தது. கண்கள் கலங்கின. ஐயாவும் அம்மாவும் இல்லாமல் ஒரு வாழ்க்கை இருக்கத்தான் போகின்றது. ஆனல் அதனைத் தாங்கிக் கொள்ள முடியுமா? என்பதில் ராகினி பெரிதாக கலக்கம் அடைந்தாள்.

அம்மா அடிக்கடி சொல்லுவது போலத் "தான் செத்துப் போவதற்கிடையில் எப்பிடியும் உனக்குக் கலியாணம் நடக்கவேணும் பிள்ளை." என்ற வார்த்தைகளுக்கு பலன் கிடைக்காமல் போய் - அம்மாவின் ஆசை நிறைவேறுமல் போனல், அம்மா எவ்வளவு கவலைப் படுவாள் எனவும் ராகினி யோசித்தாள்.

அலுமாரியில் ஒட்டப்பட்டிருந்த கணநாதனின் அந்த அஞ்சலிப் பிரசுரம் சில வெளிப்பட்டுத் தெறித்ததால் வெறுமனே அடையாளமாகத் தெரிந்தது. என்றலும் மன உணர்வுகளுக்குள் கணநாதனின் முகம் தென்பட்டது.

கணநாதனுக்கு அப்போது பன்னிரண்டு வயதிருக்கலாம். ராகினியும் வனஜாவும் அவனையும் அழைத்துக் கொண்டு ஒரு கலியாண வீட்டுக்குப் போய் இருந்தார்கள்.

அந்தக்கலியாணவீட்டில் மாப்பிள்ளைத் தோழனுகவந்த சிறுவனும் கணநாதனைப்போலவே இருந்தான். சர்வாணியும் தலைப்பாகையுமாக கழுத்தில் பவுண் சங்கிலி, பூமாலை சகிதம் அந்தச் சிறுவனைப் பார்க்க கணநாதனுக்குப் புதுமையாக இருந்தது.

தன்னைப் போன்ற ஒருவன் பெரியவர்களான பொம்பிளை மாப்பிளையுடன் நிற்பது எத்துணை புதுமையானது

கலியாண வீட்டில் தாலிகட்டி முடிந்து சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு புறப் பட்டார்சள். உச்சி வெய்யின் காரணமாக ராகினி தம்பியின் கையைப் பற்றிக் கொண்டு குடையை அவனுக்கும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

"மாப்பிளை பொம்பிளையு ன் கூட நின்ற பெடியள் ஆர் அக்கா" என்றுள் தலையை நிமிர்த்தி தமக்கையைப் பார்த்தவாறு

"அதுவோ - மாப்பிளைத் தோழன்" என்றுள் ராகினி.

"மாப்பிளைத் தோழன் என்டால்" தொடர்ந்து கேள்வி பிறந்தது

"பொம்பிளையின்ரை சகோதரன் கலியாண வீட்டில மாப்பிளைக்குத் தோழனய்ப் போறவன்-"

சிறிது நேரம் மௌனமாக நடந்தான் அப்போது தீவிர சிந்தையில் இருந்தாள் அவள்

''ஆர் எண்டாலும் போகலாமே அக்கா.''

''பொம்பிளைக்கு கன சகோதரங்கள் இருந்தால் ஆராவது ஒரு ஆள் மாப்பிளைத் தோழனாய்ப் போகலாம். இப்ப எனக்கும் சின்னக்காவுக்கும் நீதான் ஒரே ஒரு தம்பி எண்டபடியால் எங்கள் இரண்டு பேருக்கும் நீதான் மாப்பிள்ளைத் தோழனாய் இருப்பாய்'' என்றாள் சிரித்துக் கொண்டு.

''என்னவாம் அக்கா உவன்.'' என்றாள் வனஜா

''மாப்பிளைத் தோழனைப் பற்றிக் கேட்டவன் அதுதான் நான் சொன்னனான்''

வனஜாவும் சிரித்தாள்.

''உண்மையாக வோ அக்கா.'' என்று கேட்ட அவன் முகத்தில் மாற்றம் ஏற்பட்டு இருந்தது.

கடைசியில் கலியாணமும் கேள்விக் குறியாகிவிட்டது மாப்பிள்ளைத் தோழனாகவர ஆசைப் பட்ட தம்பியும் அவனது எந்த ஆசையுமே நிதறவேறாமல் போய் விட்டான்.

ராகினி ஜன்னல் கம்பிகளை கைகளால் பிடித்துக் கொண்டாள்.

கணநாதன் வீட்டை விட்டுப் போய் இரண்டு வருடங்கள் கழித்து உடலில் வலிமையும் விழிகளில் உறுதியும் முன்பை விட அமைதியாகவும் வந்து சேர்ந்தான்.

இரண்டு நாட்கள் தான் வீட்டில் நின்றான் அதிகம் கதைக்க வில்லை. கதைத்த கதைகள் கூட மிகமிக இறுக்கமாக இருந்தன. வல்லிபுரத்தாரும் அம்மாவும் கூட அவனிடம் அதிக மரியாதை காட்டினார்கள்.

கண்களில் கண்ணீர் பெருகப் பெருக அம்மா அவனுக்கு உபசாரம் செய்தாள் அவனே சிறு பொழுது கண்கலங்கி ஞலும் விடை பெற்றுப் போனன்.

போவதற்கு முதல் நாள் இரவு அவன் விருந்தை முன் படியில் படுத்திருந்த வாறு வானத்தைப் பார்த்துக் கொண் டிருந்தான் அவன் தலை மாட்டில் வனஜாவும் கால் மாட் டில் ராகினியும், இருந்தார்கள்.

''பெரியக்காவின்ரை கலியாண வீட்டுக்கு நான் தான் மாப்பிளைத் தோழனய் வருவன் என்று சின்னவயதிலை யோசித்து சந்தோஷப் பட்டனன் இப்பவும் எனக்கு அந்த ஆசை இருக்கு ஆனல் நான் திரும்பி வாறவரைக்கும் அக் காவின்ரை கலியாணத்தை செய்யாமல் விட்டிடாதேங்கோ வசதியாய் எதுவும் வந்தால் செய்யுங்கோ நான் உயிரோட இருந்தால் கடைசி சின்னக்காவின்ரை கலியாணத்திற்கா வது மாப்பிளைத் தோழனய்ப் போகப் பாக்கிறன்–''

அமைதியான அந்த இரவில் அவன் கூறிய அந்த வார்த் தைகள் அங்கிருந்த எல்லோரையும் வேதனையால் சின்ன பின்னப் படுத்தின.

ராகினி அவன் கால்களைப் பிடித்துக் கொண்டாள். அவன் கால்களை உதறிக் கொண்டான்.

''அக்கா எங்கடை குடும்பத்திற்கு நான் செய்ய வேண் டிய எத்தனையோ கடமையள் இருக்கு ஐயா தனியச் சுருட்டுச் சுத்தி எங்கடை குடும்பத்தை வாழ வைக்கப் படுற கஸ்டம் எனக்குத் தெரியும். நானும் சின்ன வயசில படிச்சு நல்ல உத்தியோகம் பார்த்து ஐயாவுக்குத் துணை யாய் இருக்கவேணும் எண்டு நினைச்சன். ஆனல் எல்லாமே பிழைச்சுப்போச்சு என்னவோ தெரியாமல் எனக்கு இந்த வீட்டுக் கடமையைவிட பெரிய கடமைகள் இருக்கு எண்டு என்ரை உள்ளுணர்வுகள் சொன்ன படியால் தான் நான் உங்களுக்குக் கூடச் சொல்லாமல் போய்ச் சேர்ந்திட்டன்.

பெரியக்கா - சின்னக்கா நீங்கள் இரண்டு பேரும் என்னைப் போல ஆட்களைப் பிழையாய் நினைக்கமாட்டீங்கள் எண்ட நம்பிக்கை எனக்கு நல்லாய் இருக்கு. ஆனால் சில ஆட்கள் என்ன, கன ஆட்கள் எங்களைப் பிழையாக நினைக்கினம். கேலியாகவும் பாக்கினம். ஆனால் சண்டைக்கோ ஒருநாளைக்கு எங்களை நினைச்சுப் பாப்பினம். அப்ப நாங்கள் உயிரோடை இருப்பமோ தெரியாது. ஆனால் நிச்சயமாய் உணருவினம் என்றான் தீர்க்கமாக."

குசினித்திண்ணையில் அமர்ந்திருந்த அம்மா விம்முவது தெளிவாகக் கேட்டது. யாரும் பதில்சொல்லவில்லை.

"பெரியக்கா சின்னவயசிலை சின்னக்காவோடை ஒருக்கா நான் சண்டை பிடிச்சனான் அப்ப நீங்கள் சொன்னது உங்களுக்கு ஞாபகம் இருக்கோ இல்லையோ - எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு. நாங்கள் சகோதரர்களாக இனிமேல் இந்தத் தாய் தகப்பனுக்கு பிறப்பது எண்டது நடக்க முடியாத விசயம். அதை மறந்து போகாதை தம்பி கழிந்து கொண்டு போகும் ஒவ்வொரு நாளும் திரும்பி வராது. அந்த நாட்களை நாங்கள் ஏன் சண்டை பிடித்துக் கழிப் பான் எண்டு, கேட்டீங்கள் உண்மையிலை அக்கா அதுதான் உண்மை. நான் எங்கைதான் இருந்தாலும் இதை மறந்து போக மாட்டன் அக்கா.

நான் வேணுமெண்டு என்ரை கடமையளை விட்டிட்டு ஓடேல்லை. என்னை உங்களுக்கு விளங்கும். என்ரை இலட்சியம் சரிவந்த பிறகும் நான் உயிரோடை இருந்தால் உங்கடை கடமையளைக் கட்டாயம் செய்வேன் பெரியக்கா-" என்று சொல்லும்போதே அவன் குரல் உடைந்து போய் இருந்தது விழிகள் வழியாக கண்ணீர் வாய்க்கால் கட்டி பாய்ந்து கொண்டிருந்தது

வனஜா சத்தம் இல்லாமல் அழுதாள். ராகினியும் கண்ணீரைத் துடைத்தாள். நிற்கவில்லை தம்பியை ஆழமாகப் பார்த்தாள். எங்கள் வீட்டில் இப்படி நடப்பது

போல எத்தனை வீடுகளில் நடக்கும். எத்தனை பேர் அழுவார்கள். எத்தனை அக்கா தங்கைகள் மௌனமாக இருப்பார்கள் என்று யோசித்தான்.

ராகினிக்குத் தொடர்ச்சியாக அந்தச் சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. அந்த நினைவுடனேயே வந்து படுக்கையில் சரிந்தாள்.

தொடர்ந்து விழித்திருந்தாள். அடுத்தநாள் கல்லூரிக்கு போவது சிக்கலாகி விடும் என்பதால் கண்களை மூடி நித்திரையை வரவழைக்க முயன்றாலும் பலன் கிடைக்கவில்லை.

,'அக்கா அக்கா என்ன இது ஒருநாளும் இல்லாததிரு நாளாய்- ஏழுமணிவரை நித்திரை கொள்ளுறாய்.'' என்று வனஜா எழுப்பிய பின்னர் தான் திடுக்குற்று எழும்பினாள் ராகினி.

''ஏன் இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகேல்லையோ அல்லது லீவோ'' எனக்கேட்டாள் வனஜா.

''நான் லீவு போடேல்லை. பள்ளிக்கூடம் போகத்தான் வேணும்'' என்றபடி எழும்பிய ராகினியிடம் வல்லிபுரத்தார் வந்து,

''பிள்ளை ஒரு விசயம்'' என்றார்.

# 8

ஸ்ராவ் றூமில் தான் தனியே இருப்பது அதிசயமாகப்பட்டது ராகினிக்கு இரண்டு பேரோ மூன்று பேரோ எப்போதும் இருப்பார்கள். ஆனால் இன்று இரண்டாவது பாடத்தின் போதே இப்படியொரு ஓய்வு கிடைத்திருப்பது எதிர்பார்க்காத ஒன்றுதான்.

வழக்கம் போல சுகமான காற்று வீசியது. எதிரே இருந்த ஜன்னல் வழியாகத் தெரிந்த விளையாட்டு மைதானமும் வெறுமையாக காட்சி தந்தது. புளியமரத்தடியிலும் ஆட்கள் இல்லை. கிளைகள் காற்றில் அசைந்தாடின.

பக்கத்தில் இருந்த வகுப்பில் இருந்து மிஸ்சிஸ் அங்கயற்கண்ணி அருட்பிரகாசத்தின் கீச்சிட்ட குரல் கேட்டது தமிழ்பாடத்தில் எதையோ அறுத்துக்கொண்டிருந்தார்.

நல்லதொரு மனநிலையில் ராகினி இருந்தாள் இந்த அமைதியை நன்கு ரசிப்பாள் ஆனுல் இன்று மனநிலை உடல்நிலை இரண்டுமே குழம்பிப்போய் இருந்தன.

முதல்நாள் இரவு விழித்திருந்து பழைய நினைவுகளில் தடுமாறி பின்னர் அதிகாலையில் உறங்கியதால் நித்திரை போதுமானதாக இல்லை அதுகாரணமாக உடல் சோம்பல் மிகுந்திருந்தது.

வனஜா எழுப்பியதால் அவசரப்பட்டு எழும்பி ஐயாவின் கதையைக்கேட்டு பதில் சொல்ல முடியாமல் தடுமாறியது தன் மிச்சம்.

முதல்நாள் மாலை கோயிலடியால் வனஜாவுடன் திரும்பி வந்தபோது கந்தையா மாஸ்டருடன் இருந்த புதிய மனிதர் எதற்காக வந்திருக்கிறுர் என தாயிடமோ தகப்பனிடமோ கேட்கவும் இல்லை. அவர்கள் சொல்லவுமில்லை.

காலையில் வல்லிபுரத்தார் ராகினியிடம் கதைக்கத் தொடங்கிய பின்னர்தான் எல்லாமே புரிந்ததுடன் மனத் தவிப்பும் தொடங்கியது.

"பிள்ளை நான் கனக்க கதைக்கேல்லை எனக்கு அப்பிடிக் கதைக்கவும் தெரியாது உனக்குக் கலியாணம் செய்து வைக்க நான் படாத பாடு எல்லாம் படுறன் எண்டது உனக்கும் விளங்கும் எங்கடை கஸ்டத்துக்காக உன்னைக் கொண்டுபோய் கூடாத இடத்திலை தள்ளி விழுத்திற எண்ணமும் எனக்கில்லை. கொம்மாவுக்கும் இல்லை. நேத்துப்

பின்னேரம் கந்தையா மாஸ்டர் வந்தவர். அவரை நீ பிழையாய் நினைக்காதை எனக்கு ஏதோ கூடப்பிறந்த சகோதரம் மாதிரி உதவி செய்யிருர் ஒரு நல்ல இடத்து சம்பந்தம் கொண்டு வந்திருக்கிருர். என்னைப் பொறுத்தவரை நான் அப்பிடித்தான் நம்புறன். ஒரு குறையுமில்லை. ஏன் தெரியுமே அவர் கொண்டுவந்த பெடியன் இந்த ஊர் தான். நாங்கள் கிழக்கு அவை மேற்கு. பெடியன்ரை தேப் பனையும் எனக்குத் தெரியும். தோட்டம் செய்யிறவர்தான் நேர்மையான மனுசன். அவருக்கு நாலு பெடியள். இந்தப் பெடியன் மூன்ருவது. இரண்டு பொம்பிளையள். அதுகள் இரண்டும் கலியாணம் முடிச்சிட்டுதுகள். பெடியனுக்கு இப்பதான் முப்பத்தெட்டு வயது. ஒன்பது பத்து வருஷமாய் ஜேர்மனியில் இருக்குதாம். அங்கை குடியுரிமைகூடக் கிடைச்சிட்டுதாம். இப்ப கலியாணம் செய்து கொண்டு போக வந்திருக்குதாம். மாப்பிள்ளை பகுதி ஆட்கள் கன இடத்திலை ஓடித்திரிஞ்சு ஒன்றும் சரிவரேல்லையாம். ஏதோ நல்ல காலத்துக்கு உன்ரை சாதகம் பொருந்திவிட்டுதாம். சீதனம் ஒன்றும் பெரிசாய் எதிர்பார்க்கேல்லை. பொம்பிளை வடிவாய் இருந்தால் மாத்திரம் காணுமாம்'' நீண்டதொரு பிரசங்கத்தை நிகழ்த்திவிட்டு ஓய்வதைப்போல வல்லிபுரத்தார் சொல்லிவிட்டு மகளை மிக நுட்பமாகப் பார்த்தார். பார்வையில் இறைஞ்சும் தன்மை இருந்தது

நித்திரை மயக்கத்துடன் இருந்த ராகினி கண்களைக் கசக்கிக்கொண்டு தகப்பனுரைப் பார்த்தாள்.

''பிள்ளை கந்தையா மாஸ்டர் இஞ்சை எங்களோடை வந்து கதைக்கமுதல் சாதக பொருத்தமும் பார்த்து உன்னையும் பெடியனுக்குக் காட்டிப்போட்டாராம். நேற்றைக்குக் காலமை நீ பள்ளிக்கூடம் போகேக்கையோ, அல்லது பஸ் ஸ்ராண்டிலையோ பெடியன் உன்னைப் பார்த்திருக்க வேணும். பெடியனுக்கு முழுச்சம்மதமாம் வீட்டுக்காரருக்கும் நல்ல விருப்பம். எல்லாம் சரி இப்ப உன்ரை கையில் தான் மிச்சம் இருக்கு. என்னைப் பொறுத்தவரை இந்த

இடம் பிழையில்லே. வயதும் உன்னேவிட மூன்ருே நாலு தான் கூட வாத்தியார் சொல்லுறமாதிரியைப் பார்த்தால் பெடியனும் பிழையில்லேப்போல வெளிநாட்டிலே இருந்து வந்தபடியால் ஆளும் மினுமினுப்பாய் வடிவாய் இருப்பான் தானே. இனி உன்ரை விருப்பம். பிள்ளே உனக்கு விருப்பம் இல்லாட்டி நாங்கள் தெண்டிக்கேல்லே. ஏதோ யோசிச்சுச் சொல்லு. பின்னேரம் மாஸ்டர் வருவார். ஆனல் நல்ல இடம். என்று திருப்பத் திரும்பச் சொன்ன வல்லிபுரத்தார் மகளே ஆதரவாகப் பார்த்தபடி அறையை விட்டுப் போனர்.

வனஜாவின் முகத்தில் மலர்ச்சி தென்பட்டது விழிகளில் வியப்பும் வெளிப்பட்டது.

"அக்கா ஐயா சொல்லுறதைப் பார்த்தால்- ஏதோ நல்ல இடம் மாதிரித் தெரியுது. ஆனல் கலியாணம் முடிச்சால் நீ ஜேர்மனிக்குப் போக வேணும்" என்ருள்.

'ராகினி பதில் ஏதும் சொல்லவில்லே. இதை ஒரு சந்தோஷமான செய்தியாக எடுப்பதா? அல்லது என்ன விதமாக எடுப்பது? என்பதைக்கூட நிர்ணயிக்க முடியவில்லே. நெஞ்சில் இனம் தெரியாத ஒருவிதமான படபடப்பு உண்டாகியிருந்தது. அதுகூட எதனல் என்று புரியவில்லே என்னவோ ஒன்று அவள் இதயத்தைக் கவ்விக் கொண்டது.

"என்னக்கா ஏன் பேசாமல் இருக்கிருய். உனக்கு நித்திரைவெறி மாறேல்லேயோ. அல்லது ஐயா சொன்ன கதையளேக் கேட்டு ஏங்கிப் போட்டாயோ-" எனக்கேட்டாள் வனஜா.

பதில் சொல்லாமலே தலேயசைத்தாள் ராகினி.

கொஞ்சம் பொறு வனஜா என்னேக் குழப்பாதை பின்னேரம் வந்து எல்லாத்தையும் பற்றிக் கதைப்பம்.'

"அக்கா என்னேடை மேற்குப்பகுதிப பெட்டை ஒன்று படிக்குது. ஐயாவிட்டை அவையின்ரை பெயரைக் கேட்டால் விசாரித்துப் பார்க்கலாம். ஐயா சொன்ன கதையளே வைச்

சுக்கொண்டு பார்த்தால் நல்லது போலதான் தெரியுது ஒரே ஊர் எண்டபடியால் டுப் விளையாட்டுக்கள் இராது.'' என முன்பைவிட உற்சாகமாக வனஜா சொன்னாள். அவள் விழிகளில் பரவசம் கொப்புளித்தது.

அவளின் உற்சாகத்தினைப் பார்த்த ராகினிக்கு என்னவோ போல் இருந்தது. இவை எல்லாம் உண்மையா நள்ளிரவில் எழும்பியிருந்து யோசித்து யோசித்து குழம்பிப் போனதன் எச்சசொச்சங்களா? என்றுகூட குமைந்துகொண்டாள்.

அவசரப்பட்டு அலுவல்களைப் பார்த்து குளித்து உடைமாற்ற முனைந்தபோது முதல்நாள் கட்டிய சாறி மடித்து வைக்காமல் அவிழ்த்து வைத்தபடி கொடியில் கிடந்தது.

அந்தக்கலர் அவளுக்கு மிகப்பிடித்தது. அதனை உடுத்துக் கொண்டால் இயல்பாகவே ஒரு கம்பீரம் வந்து விடுவது போல அவளுக்குத் தோன்றும் மற்றவர்கள்கூட பெரிதாக அந்த சாறியைப் பற்றியும் அவளுக்கு மிக நன்றாக இருப்பது பற்றியும் கதைப்பதுண்டு.

நினையாப்பிரகாரமாக நேற்றுத்தான் அவனும் அவனா? அவரா? பார்த்திருக்கின்றார் என நினைத்தபோது ராகினிக்கு மனம் பதட்டப்பட்டது

சாப்பிடக் குசினிக்கு வந்தபோது தாய்கூட வழக்கத்தைவிட அன்பாகவும் ஆதரவாகவும் நடந்து கொண்டாள்.

வீட்டின் சூழ்நிலை சட்டென்று மாறிவிட்டது போல ராகினிக்குத் தோன்றியது எல்லோரும் ஒருபக்கம் சேர்ந்து விட்டது போலவும் தான் தனியே மற்றப்பக்கம் நிற்பதாகவும் அவளுக்கு ஒரு உணர்வு முளைவிட்டது.

நாற்பத்திரண்டு வயதான ஒருபிள்ளைக்குத் தகப்பனை ஒருவனுக்கே மனைவியாகப் போகச் சம்மதித்த நான் இப்போது இதற்கு என்ன சொல்லமுடியும். என்று அப்போது யோசித்தாள்.

இப்போது ஸ்ராவ் றூமில் இருந்தும் அதையே தான் யோசிக்கிறள். நிச்சயமாக எனக்கு விருப்பமில்லை என்று சொல்லமுடியாது. ஆனல் சொந்த ஊரைவிட்டு அம்மாவை விட்டு ஐயாவை வனஜாவை விட்டுப் பிரிந்து போவது என்பது எத்துணை துன்பமான விடயம். இதயம் நொருங்க கண்களில் கண்ணீர் எட்டிப்பார்த்தது.

யோசித்துப் பார்க்க— சந்தோஷப்படுவதா? துக்கப் படுவதா? என்று தெரியவில்லை பின்னேரம் போய் ஐயா விடம் என்ன சொல்லுவது? என்னத்தைச் சொல்லமுடியும்? ஓம் ஐயா எனக்குச் சம்மதம் என்றுதான் சொல்லமுடியும்.

ஐயாவும் அம்மாவும் சந்தோசப்பட்டுக் கொண்டு காரி யமாற்ற முனைவார்கள். ஒருசில நாட்களில் வார்த்தைக ளால் விபரிக்கமுடியாத வகையில் மாற்றங்கள் ஏற்படும். பிறகு கல்யாணப் பெண்ணுக.

உடல் சிலிர்த்தது. அதற்குபேல் அவள் சிந்தனை வயப்படவில்லை. மூச்சை அடைப்பது போலவும் நெஞ்சிலே பாரம் ஏற்றிவிட்டது மாதிரியுமான உணர்வுகள் கிடைத் தன.

பஸ் ஸ்ராண்டில் தன்னையுமறியாமல் தன்னைப் பெண் பார்த்து சம்மதமும் தெரிவித்துவிட்ட முன்னைநாள் இலங் கைப் பிரஜையும் தற்போதைய ஜேர்மன் பிரஜையுமான அவரை நினைத்துப் பார்த்தாள்.

பஸ் ஏறும்போது கடையடியில் கறுத்தக் கண்ணுடி போட்டுக்கொண்டு விடாமல் பார்த்தானே ஒருவன். அவன் தான் அவரா? ஆள்கூட சிவப்பாக இருந்தாரே.

அல்லை பஸ்ஸில் ஏறியபின்னர் ஓடிவந்து தொத்திக் கொண்டு நாலைந்து ஆட்களுக்கு அப்பால் தள்ளி நின்றுனே அவனு - அவர்.

யாராக இருந்தால் என்ன. எப்படியான தோற்றம் கொண்டவராக காட்சி தந்தால் என்ன? அவர் சம்மதம் தெரிவித்து விட்டார். சீதனப் பிரட்சனை இல்லை. வயதுப்

பிரச்சனை இல்லை. நிச்சயம் இது நடந்தேதீரும். அம்மாவை விட்டு ஐயாவைவிட்டு வனஜாவை வீட்டு எங்கோ கண் காணுத இடத்துக்கு முன்பின் பழக்கமில்லாத பூமிக்குச் செல்ல வேண்டும்.

திடீர் எனத் தோன்றி கண்மூடி முழிப்பதற்கு இடையில் தாலிகட்டப் போகிறவருக்கு சொந்தமாகி அவர்தாழ் படிந்து அவர் சிரிக்கும்போது சிரித்து அவர் முறைக்கும் போது அடங்கி ஒடுங்கி

''என்ன ராகினி தனிய இருந்து தீவிரமான யோசனை''

சட்டென்று தலை நிமிர்ந்தாள் ராகினி. மிஸ்சிஸ் சந்திரா சண்முகலிங்கம் அவளுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தார். அவரை அவள் பார்த்து மெதுவாகப் புன்னகைத்தாள்.

மிஸ்சிஸ் சண்முகலிங்கத்திற்குச் சொல்லுல் என்ன. இந்தக் கல்லூரியில் தான் நேசிப்பவர்களின் முதன்மையானவர் பிரச்சனைகளை யதார்த்த ரீதியில் ஆராயக் கூடியவர். அதுவும் தன்னுடைய நிலையில் நிற்காமல் மற்றவர்களின் நிலைக்குப் படியிறங்கி உணர்ந்து கொள்ளக்கூடியவர்.

''என்ன பிரச்சனை வீட்டிலே ஏதாவது சிக்கலா? அல்லது பஸ்ஸில் ஏதாவது பிரச்சனையா?'

ராகினி தலையசைத்தாள்.

''அப்ப'' என்ருர் அவர்.

ராகினி நிமிர்ந்து இருந்தாள். பார்வை ஜன்னல் ஊடாகச் செல்ல புளியமரம் தட்டுப்பட்டது. அதனைப் பார்த்துக் கொண்டே அவள் தனக்கு முடிவாகிக் கொண்டிருக்கும் ஜேர்மன் மாப்பிள்ளையைப் பற்றிச் சொன்ஞள்.

சொல்லி முடிந்தும்கூட பார்வையை புளியமரத்தை விட்டுத் திருப்பவில்லை.

திடீர் என அவளது கையைப் பிடித்துக் குலுக்கினுள் மிஸ்சிஸ் சண்முகலிங்கம்.

''ராகினி உண்மையிலே கேட்கச் சந்தோஷமாயிருக்கு. நீர் இவ்வளவு காலமும் ஒழுங்காய் ஒழுக்கமாய் இருந்த தற்குக் கிடைத்த பரிசு ராகினி. நீர் கொடுத்து வைச்ச வள். சொந்த ஊருக்குள் இப்படி ஒருநாளும் வசதியாய் வந்து அமையாது ஏதோ எல்லாம் நல்ல படியாய் நடக்க வேணும் எண்டு கடவுளை வேண்டுகிறேன. இந்தக்கதையை இப்போதைக்கு இஞ்சை பள்ளிக்கூடத்திலே தெரிய விடாதையும்'' என்று சொல்லிக்கொண்டு போன மிஸ்சிஸ் சண் முகலிங்கத்தை ராகினி பார்த்தாள்.

எப்படி வனஜா சந்தோஷமாக பூரித்துப்போய் நின் ருளோ, எவ்வாறு அம்மா தனது மகிழ்ச்சியை வெளிக்காட் டாமல் சந்தோஷமாக நின்ருவோ - என்ன மாதிரி ஐயா நல்லஇடம் நல்லஇடம் என்று சொல்லி தனது விருப்பத்தை திரும்பத் திரும்ப வெளிப்படுத்திஞரோ- அதேபோல மிஸ்சிஸ் சண்முகலிங்கமும் இருந்தார். அவர்களது பக்கம் புதிதாக இன்னுமொருவர் சேர்ந்துவிட்டதை ராகினி உணர்ந்தாள்.

''அப்ப என்ன கெதியிலே கலியாணத்தை வைப்பினமோ- அவர் எத்தினை மாதலீவிலே வந்தவராம் எண்டு தெரியுமே. கடைசி வாறமாதம் தன்னும் ஜோமனிக்குப் போகவேணும். அங்கை போனாலும் என்னை மறந்து போகாதை ராகினி. கடிதங்கள் போடவேணும் என்ன. கலியாணம் முடிச்சபுதி சிலே புதுப்புருஷனோடை இருக்கேக்கை எங்கடை ஞாபகம் வராமல்தான் போகும் என்று சொல்லிச் சிரித்த அவரின் பகிடியை ராகினி ரசிக்கவில்லை

''என்ன ராகினி ஒரு சந்தோஷமான விசயத்தைச் சொல்லிப்போட்டு உம்மென்று இருக்கிறீர். ஏன் என்ன விச யம். உமக்கு இது விருப்பமில்லையோ ''

இதற்கு என்ன சொல்லலாம்.

''அப்பிடி ஒன்றும் இல்லை.''

''ஐயா, அம்மா, தங்கச்சியை விட்டிட்டு வெளிநாடு போறதைப்பற்றி யோசிக்கிறீரோ- அப்பிடி எண்டால் உண

மையிலே கவலையாய்த்தான் இருக்கும். ஆனால் என்ன செய்யிறது. பொம்பிளையளின் தலைவிதியே இப்படித்தான் ''

வழக்கம்போல கல்லூரி முடிந்ததும் பஸ் ஸ்ராண்டில் குடை பிடித்தும் வெய்யில் காய்ந்து பஸ் ஏறியபோதும் எட்டாத உயரத்தில் இருந்த கலியாணம் என்ற கனவு தரைக்கு வந்துவிட்டதை நினைத்து சந்தோஷப்பட முடியவில்லை,

பஸ்சில் எப்போதும் போல இருக்க இடம் கிடைக்கவில்லை. அவள் நின்ற இடத்திற்குப் பக்கத்தில் இருந்த இருக்கையில் இளம் வயதுடைய ஆணும் பெண்ணுமாக இரண்டுபேர் இருந்தார்கள்

அந்தப் பெண்ணின் கழுத்தில் தாலிக்கொடி மிகநன்றாக மஞ்சளாய் பளபளத்தது. அவள் தேவையில்லாமலே புன்னகைத்துக் கொண்டு இருந்தாள். விழிகள் படபடவென அடித்தன கன்னங்களில் செம்மை கனிந்து இருந்தது நீண்ட விரல்களின் நகங்களில் சிவப்பு ஒளிர்விட்டது. முழங்கைக்குக்கீழே அடுக்கிவிட்ட பவுண்காப்புக்கள் பிரகாசித்தன மொத்தத்தில் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருந்தாள்.

ஆனால் அவனிடம் அவளுக்கு ஈடான கம்பீரமும் கவர்ச்சியும் இல்லை. இரண்டு பேரையும் பார்த்தால் இந்தப் பெண் எப்படி இவனைத் திருமணஞ்செய்ய சம்மதித்தாள் என்றுதான் யாரும் கேட்பார்கள். ராகினிக்கு அந்த எண்ணம்தான் ஏற்பட்டது.

காற்றில் அள்ளுண்டு வந்த ஒருசிறு பூச்சி அவள் தலைமலரில் சிக்கிக் கொண்டது. அவன் அதை வாயினால் ஊதினான். ஆனால் பூச்சி அசையவில்லை எனவே அவன் கையினால் அதனை எடுத்துவிட்டான்

அவள் உடலைக் குறுக்கிக் கொண்டு மிக இனிமையாகச் சிரித்தாள். வெட்கம் உடலில் இழையோட அவள் பூக்கள் சிதறுண்டதுபோல சத்தமில்லாமல் சிரித்தாள்.

"பெண்ணே நீ உண்மையில் சந்தோஷமாகவே இருக்கின்றாயா? எனக்கேட்க வேண்டும்போல ராகினிக்கு இருந்தது."

என்ன காரணத்தினால் நீ இவனைத் திருமணம் செய்யச் சம்மதித்தாய். சீதனம் குறைவாகக் கேட்டதாலா? வீட்டார்களின் நெருக்குதலா? அல்லது இவனின் ஏதாவது திறமை உன்னைக் கவர்ந்ததால் காதல் கொண்டு மணந்தாயா அல்லது ஜேர்மனிக்கோ கனடாவுக்கோ போய் உன்சந்ததியையே திசைமாற்றப் போவதற்காக விருப்பம் தெரிவித்தாயா?

நன்றாகக் களைத்துப்போய் வீடுபோய்ச் சேர்ந்தபோது நேரம் மூன்றரை மணியாகி விட்டது வெளிவிறாந்தையில் ஐயா காத்திருந்தார் அம்மாவும் இருந்தார்

ஐயா இன்று சுருட்டுக்குப் போகவில்லைப் போல என ராகினி நினைத்தாள். அவர் ஆவலுடன் ராகினியைப் பார்த்தார்

"போய் தேத்தண்ணியைக் கொண்டு வா பிள்ளை களைச்சுப்போய் வந்திருக்கு" என்று அம்மாவைக் கலைத்தார் அவர்.

உடைமாற்றிச் சாப்பிட்டுவிட்டு ஆறுதலாகக் கூட ஐயாவுக்கு ராகினி முடிவைச்சொல்லி இருக்கலாம் ஆனால் படியேறி ஐயாவின் முகத்தினைக் கண்டவுடனேயே

"ஐயா எனக்கு கலியாணத்திற்குச் சம்மதம்-" என்று சொல்லிக் கொண்டு அறைக்குள் போனாள். ஐயா பூரித்துச் சிரித்ததைக்கூட அவள் கவனிக்கவில்லை.

# 9

கிணற்றுக்கட்டில் வந்து அமர்ந்தபோது- குளிர்காற்று அடித்தது. வெம்மையான உடலுக்கு அது கதகதப்பைக் கொடுத்தது.

சின்னச்சின்னக் கிளைகளுடன் நின்ற அகத்திகூட நாட்டியம் ஆடியது. வாழை இலைகள் மேலும் கீழும் அசைந்தன. ஒழுங்கை வழியாக அவர்கள் நடந்து போனார்கள். காலையும் மாலையும் நடக்க அவர்களுக்கு அலுப்பதில்லையா? என யோசித்தாள்.

எதிரே பாலைவனமாகப் போய்விட்ட பெருந்தோட்ட வெளியில் சிறுவர்கள் சிலர் விறகு பொறுக்கிக் கொண்டு இருந்தார்கள். அதில் தோட்டம் செய்தவர்கள் எங்கே கூலிவேலை செய்கிறார்களோ? என்ன ஆனார்களோ? யாரைக் கேட்க முடியும்?

என்னென்ன மாதிரி இருந்த மண்ணும்- மக்களும் எப்படி எப்படியெல்லாம் மாறிவிட்டார்கள். மாற்றப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

தப்பி ஓடக்கூடியவர்கள் இந்த மண்ணும் வேண்டாம். இந்த மண்ணின் வாழ்க்கையும் ஒருவாழ்க்கை என சுக போகத்திற்காகவோ எதற்காகவோ டோய்ச் சேர்ந்து விட்டார்கள் அங்கு மன்னர்களாக வாழ்வதாகக் கேள்வி இன்னும் பலர் இழக்கக்கூடிய உயிரையே கொடுத்து விட்டு அழிந்து விட்டார்கள்.

வசதிகள் இல்லாதவர்கள், வாய்ப்புகள் இல்லாதவர்கள் இந்த மண்ணை நேசிப்பவர்சள், மக்களை விரும்புபவர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டு எத்துணை கஸ்டத்திலும்

சீவித்துக் கொண்டு இறங்கச் சொல்லும் போது இறங்கி ஓடச்சொல்லும் போது ஓடி கையைத்தூக்கு எனும்போது தூக்கி அடையாள அட்டைகாட்டி-

ராகினிக்கு துக்கம் நெஞ்சில் இருந்து உடல் வழியாக எங்கும் பரவியது. இவை பற்றிக் கவலைப்பட்டு என்ன பிரயோசனம் அடுத்த மாதமோ அதற்கடுத்த மாதமோ கலியாணம் முடித்து புதுக்கணவனின் புருச்சுகத்துடன் இந்த ஊரைவிட்டு அன்னியதேசம் போய் முற்றிலுமாக மாறி நாட்டைத் துறந்து போய்விட்ட ஆயிரக்கணக்கானவர்களுடன் சேர்ந்து-

"பிள்ளை வாவன் சாப்பிட" என அம்மா அழைப்பது கேட்டு சுயநினைவுக்கு வந்தாள்.

"ஏன்பிள்ளை வழக்கமான உன்ரை நேரம் போட்டுது. ஏன் சாப்பிட வரேல்லை" என்று கேட்கும் அம்மாவிடம் முன்னைவிட அக்கறை இருப்பதுபோலத் தோன்றியது

பசிக்கேல்லை என்று உண்மையைச் சொல்லவும் விருப்பமில்லை அப்படிச் சொன்னல் கலியாணச் சந்தோஷத்தால் பசிக்கவில்லைப்போல என்று அம்மா நினைத்துவிட்டால் என்ன என்று நினைத்த ராகினி-

"இப்ப சாப்பிடேல்லை. வனஜாவும் வரட்டும் சாப்பிடுறன்-" என்றாள்.

"ஐயா கந்தையாமாஸ்ரரிட்டைப் போட்டாா-" என்ற அம்மாவின் குரலில் ஆர்வம் இருந்தது.

ராகினி அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. மகள் அக்கறையோடு ஏதாவது கேட்பாள் என எதிர்பார்த்த தாய்க்குக்கூட ஏமாற்றமாகத்தான் இருந்தது. அவள் மௌனமாக இடத்தைவிட்டு நகர்ந்தாள்.

பொழுது சாய்ந்துவிட்டதால் மழைகாலத்து மப்புப் போல வானம் இருளத் தொடங்கிவிட்டது இன்னும் எத்தனை நாளைக்கு இதிலே இருக்கமுடியும் என யோசித்தாள்

இப்போதுதான் அவள் வந்திருக்கவேண்டும். உடை கூட மாற்றாமல் காய்ந்து வாடிப்போன முகத்துடன் தமக்கையின் பக்கத்தில் வந்து அமர்ந்தாள்.

''அக்கா ஒரு புதினம் ரெக் முடிஞ்சு நான் காலைமை சொன்னேனே. மேற்குப்பகுதிப் பெட்டை சுலோசனா அதோடை அங்கை போட்டுவாறன்-'' என்றாள் வனஜா.

' எங்கை-''

''அங்கைதான்- உனக்கு மணவாளனாக வரப்போறாரே அவரின்ரை வீட்டுப் க்கம்-'' என வனஜா சொன்னாள்.

''இப்ப அதுக்கென்ன-''

''இப்ப அதுக்கென்னவோ- உன்ரை போக்கு என்ன மாதிரி எண்டு எனக்கு விளங்கேல்லை. நான் வடிவாய் எல்லாம் விசாரிச்சனான். எனக்கென்னவோ அவரைப் பார்க்க வேணும் போல இருந்தது. அதுதான் பஸ்சைவிட்டு இறங்கி சுலோசனாவோடை போனனான், சுலோசனா வீட்டுக்குக்கிட்டத்தான் அவரின்ரை வீடு அவருக்குக் கந்தசாமியாம் பெயர் தேப்பனுக்கு சங்கரப்பிள்ளையாம் நான் சுலோசனாவோடை போகேக்கை வழியிலை அவரைப் பார்த்தால் சரி இல்லாட்டியும் ஒருஐடியா வைச்சிருந்தனாங்கள் அவரின்ரை அக்காவின்ரை மகள் சுலோசனாவுக்கு சிநேகிதமாம். கடைசி அவளைச் சந்திக்கிறமாதிரி வீட்டை போயாவது பார்ப்பம் எண்டு நினைச்சம் ஆனால் ஏதோ நல்லகாலம் அவரை வழியிலை கண்டனான்'' என்று தன் பேச்சை நிறுத்திய வனஜா ராகினியைப் பார்த்தாள்.

ராகினியின் முகத்தில் மாற்றமில்லை. தன் வருங்காலக் கணவரைப்பற்றிச் சொல்லுகிறாளே என்ற பரபரப்பு கிளு

கிளுப்பு கடைசி பரவசம் கொஞ்சம்கூட முகத்தில் எட்டிப் பார்க்கவில்லை. தனது அகன்றவிழிகளால் அகத்திமரத்தைப் பார்த்துக்கொண்டு ராகினி இருந்தாள்.

"என்னக்கா நான் சொல்லுறதைக் கேட்கிறியா?"

"நான் களைச்சு விழுந்து உனக்காகக் கஸ்டப்பட்டு அவரைப் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறன். நீ என்னடா எண்டால் எதையோ பறிகொடுத்த ஆள் மாதிரி இருக்கிறாய். நீ இருக்கிறகோலம் கலியாணச் சந்தோஷம் போல வும் தெரியேல்லை. என்ன உனக்கு" எனத் தமக்கையின் தோளைப்பிடித்து உலுப்பியபடி கேட்டாள் வனஜா.

"எனக்கு ஒண்டும் இல்லை வனஜா. நீ சொல்லு நான் கேட்கிறேன்."

வனஜா தொடர்ந்தாள்.

"நாங்கள் போற வழியிலைதான் அவரின்ரை வீடு. பார்த்தால் வீட்டு வாசலிலை ஆரோடையோ கதைச்சுக் கொண்டு நிற்கிறார். நீலக்கோடன் சேட்டோடை நிற்கிற வர்தான் என சுலோசனா ரகசியமாகச் சொன்னாள் நானும் அவரை வடிவாய் பார்த்தன்-" என்ற வனஜா தமக்கையை மிக நுட்பமாகப் பார்த்தாள்.

"எப்படியான ஆள்- வடிவோ என்னமாதிரி-" என்று பெரும் பதட்டத்துடன் தமக்கை கேட்பாள் என நினைத்த வனஜாவுக்கு ராகினி அப்படிக் கேட்காமல் விட்டது புதி னமாகப் பட்டது.

அவர் பெரிய வடிவு எண்டு இல்லை அக்கா. நல்லநிறம் தான். ஆனால் தலையிலை மயிர் குறைவு. முன்பக்கம் நல்ல வழுக்கை. மெல்லிய மீசை. பல்லும் நல்ல மிதப்புப்போல. நல்ல வண்டியும் இருக்கவேணும் லோங்ஸ் போட்டால்

பிறிம்பாய் தெரியும். ஆனால் ஆள் நல்ல பிள்ளையாம். அக்சா ஏதோ இவ்வளவாவது வந்தது பரவாயில்லை. முப்பத்தியெட்டு வயதுதானே. நீ நாற்பத்திரண்டு வயதுக்காரனை, அதுவும் பொம்பிளைப் பிள்ளையும் இருக்கிற ஒருத்தனை கலியாணம் முடிக்க ஓமென்று சொன்னதுக்கு இது பரவாயில்லை-'' வனஜா சொல்லி முடித்தாள்.

ராகினி அசையாமல் இருந்தாள். விழிகள் நாற்புறம் சுழல்கின்றன.

''அக்கா இதிலையே இருக்கப்போறியே நான் போய் உடுப்பை மாத்திக்கொண்டு வாறன் '' என்று சொன்ன வனஜா பழையபடி ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி ஓடினாள்.

ராகினி கந்தசாமி என்ற பெயரை மனதுக்குள் சொல்லிக் கொண்டாள். உடல் சிலிர்த்துக் கொள்ளவில்லை. நுண்ணுணர்வுகளாக உடல் எங்கும் இனிய உணர்வுகள் பாயவில்லை. இதயத்தில் இருந்து புது இரத்தம் பாய்ந்து கிளர்ச்சியை உண்டாக்கவில்லை. நெஞ்சம் விம்மவில்லை.

கற்பனையில் கந்தசாமி தோன்றினார். வழுக்கைத் தலையும், பொம் என்று ஊதிய வண்டி, மிதந்து கொண்டு நிற்கும் பல்லு, மெல்லிய மீசையுமாக கண்கள் எப்படி? கன்னங்கள் என்ன தன்மை? வயிறுபெருத்து இருந்தால் மார்பு என்ன மாதிரி இருக்கும். வெற்றுடம்புடன் பார்க்க சகிக்குமா? ஸ்டில் படங்கள் போல பட்பட் என்று பலவிதமான நினைவுகள்.

மீண்டும்மீண்டும் துண்டுதுண்டுகளாக வனஜா சொன்ன விடயங்களை மனக்கண்முன் தோன்றின.

சட்டென்று பஸ்சில் தான் கண்ட ஜோடியை நினைத்துக் கொண்டாள். சித்திரவதை காரணமாக ஒப்புதல்

வாக்கு மூலம் கொடுப்பதைப்போல அந்தப் பெண்ணும் சந்தர்ப்பங்களால் சம்மதிக்க வேண்டும். அவள் வழியே தானே நானும்.

அந்தப் பெண் வெட்கப்பட்டுச் சிரித்ததை நினைத்துக் கொண்டாள். நாளைக்கு கந்தசாமி கையைப் பிடிக்கும் போது அப்படித்தானே சிரிக்க வேண்டும். எப்படி வெட்கப்படுவது? என் பிரியநாதா நான் உன்னில் அடக்கம். என் உடல் ஆவி அத்தனையும் உனக்குத்தான். என்னை இயக்கி என்மீது இயங்கவல்லமை படைத்தவன் நீதான். என் மணவாளனே என் மனத்தினை நீ வெற்றி கொள்வாயா? என்மனம் உன் மனத்தோடு இசைந்து வாழுமா? பயந்து வாழுமா? அல்லது சமாளித்துக் கொண்டு வாழுமா?'' நாடகத்தில் வசனம் பேசுவதுபோல ராகினி தனக்குள் பேசி சிலிர்த்துக் கொண்டாள்.

சின்ன வயசில் அவள் கண்ட கனவுகள் மனக்கண்ணில் நிழலாடின. வீட்டில் பொருளாதாரப் பிரச்சனை என்று ஒன்று இருந்ததைத் தவிர வேறு எந்த சிக்கலும் இல்லாத அந்த நேரத்தில் அன்பை பொழியும் அம்மா அதட்டியே பேசத்தெரியாத ஐயா, தங்கை, சின்னத்தம்பி எல்லாமே இன்பமாக இருந்தன.

பதினாறு பதினேழு வயதிருக்கும் காரணமில்லாமலே சிரிப்புவரும் விழிகள் துடிக்கும். அடிக்கடி முகம் துடைக்கும் கரங்கள். தெருவில் போவோர் வருவோர் தன்னையே பார்க்கின்றார்கள் என்ற மனப்பிரம்மை.

அந்த நேரத்தில் கூடப்படிப்பவர்களைப் பற்றி கல்லூரியில் ஒளிர்விடும் கதாநாயகர்கள் பற்றி மாணவிகளிடையே மிகச் சுவாரசியமான கதைகள் நடக்கும். கம்பீரமான ஆண்களைக் காணும் போது விபரிக்க முடியாத விளங்கிக் கொள்ள முடியாத சில உணர்வுகள் பிறக்கும் நெஞ்சம் படபடக்கும். முகத்தில் வியர்வை அரும்பும்.

மாணவிகள் இடையே எதிர்காலக் கணவர்கள் எத்படியாக அமைய வேண்டும் என்ற பரஸ்பர ரகசியக் கதைகள் நடக்கும்.

நல்ல கறுப்பான அடர்த்தியான மீசையும் சுருள் சுருளான தலைமயிரும் நீளமூக்கும் உயரமான தோற்றமும் கொண்ட ஒருவன் தான் எனக்குக் கணவராக வரவேண்டும் எனப் பயந்து பயந்து சகதோழியின் காதில் சொன்னதை இப்போது ராகினி நினைவூட்டினுள்.

அந்த நினைப்புத் தோன்றியதும் அவளை அறியாமல் அவளுக்குச் சிரிப்பு உண்டானது. அந்த ஆரம்பகாலத்து இனிய கனவுகளுக்கு முற்றிலும் மாருக கொஞ்சம் கூட ஒத்துப்போகாத வகையில் இப்போது மாப்பிள்ளை.

இளமைக் கனவு என்ருலும்கூட இதுவரை காலமும் அதுதான் அடிமனத்தின் கருத்தாக உறங்கிப்போய் இருந்தது. அது இப்போது பழையபடி விழித்துக் கொண்டு முகம் தெரியாத கந்தசாமியை நினைத்து கேலி செய்வது போல இருந்தது.

கலியாணம் சரிவந்த பின்னரும்கூட இன்னமும் சந்தோஷம் வராமைக்குக் காரணம் இந்த அடிமனமா? ராகினிக்கு ஒரு வெளிப்பு உண்டானது? அகமனம் திருப்திப்படவில்லை.

ஆனல் என்ன செய்ய முடியும்? கறுத்த உருவமும் நீண்ட மூக்கும் அடர்த்தியான மீசையும் சுருள் தலையும் உயரமுமான தோற்றமும் கொண்ட ஒருவன் "சீதனம்" இல்லாமல் திருமணம் செய்ய வருவானே? அப்படி வந்திருந்தால் ஏன் இப்படி எல்லாம் கவலைப்பட வேண்டும்.

ஒரு பெண்ணின் தலைவிதி எத்தினை பேர்களால் நிர்ணயமாகின்றது. எங்கள் சமுதாய முன்னேற்றம், நாகரீகத்தின் வளர்ச்சியெல்லாம் எங்குபோய் நிற்கின்றன? என்ன செய்கின்றன.?

எல்லாமே சரியாக இருந்தால் எல்லாருமே ஒழுங்காக செயல்பட்டால் கறுத்த உருவமும் அடர்த்தியான மீசை

யும் கொண்ட ஒருவரை எப்போதோ...... ராகினியால் மேலும் யோசிக்க முடியவில்லை.

நெஞ்சில் தவிப்பு உண்டானது. இதுவரை காலமும் மறைபொருளாக இருந்த ஒன்று வெளிப்பட்டது போல தன்மனம்நெகிழ்ச்சி இல்லாமல் போனதற்கான காரணத்தை இப்போதுதான் புரிந்து கொள்ள முடிந்தது.

பழையபடி என்ன செய்யலாம் என்று யோசித்தால் வயது தப்பிய பெண் வேறு என்னத்தைச் செய்ய முடியும் தன் சுய விருப்பு வெறுப்புக்களைப் பார்க்க முடியுமா? இந்தக் கலியாணம் வேண்டாம் என்று சொல்ல முடியுமா?

இவள் ஏன் கலியாணம் செய்யாமல் இருக்கிறாள் என்று சகல நேரமும் கேள்விக்கணைகள் தொடுத்து கேலி பேசும் சமூகம், கண்ணீர் விடும் அம்மாவும், கவலைப்படும் ஐயாவும் என்ன நினைப்பார்கள்.

இவர்களுக்காகத்தான் இந்தக் கலியாணத்துக்காகச் சம்மதம் தெரிவித்தாகி விட்டது. இதுவல்ல எந்தக் கலியாணம் என்றாலும் சம்மதிக்கத்தான் வேண்டும்.

இனிமேல் யோசித்தோ கவலைப்பட்டோ, இளமைக்கனவுகளை மீள் சிந்தனை செய்தோ பிரயோசனம் இல்லை இனி நடக்க வேண்டியதைக் கவனிக்க வேண்டியதுதான்.

தொடர்ந்தும் இப்படியே "உம்" என்று இருந்தால் எல்லோரும் பிழையாக நினைப்பார்கள் எனவே கடைசி சந்தோஷமாக இருப்பதாக பாவனையாவது செய்ய வேண்டும் என நினைத்த போது முகத்தில் இருந்த தீவிரத்தன்மை மறைந்தது.

பொழுது நன்றாகப் போய் இருள் சூழ்ந்திருந்தது. வனஜா வந்தாள்.

"என்னக்கா. இன்னும் நீ சாப்பிடேல்லையாம் நானும் முகத்தைக் கழுவிக்கொண்டு வாறன். சாப்பிடுவம்" என்றாள் அவள்.

துவாயைக் கிணற்றடிக் கொடியில் போட்டு விட்டு அவள் தண்ணீர் அள்ளத் தொடங்கினாள்.

இருவரும் முகம் கழுவி சுவாமி கும்பிட்டு திருநீறும் பூசிக்கொண்டு வெளிப்பட்டபோது வல்லிபுரத்தாரும் கந்தையா மாஸ்டர், அந்தப் புதிய மனிதர் இன்னுமொருவர் என நான்கு பேரும் விறுந்தைப்படியேறிக் கொண்டிருந்தார்கள்.

இருவரும் குசினிக்குள் போக அம்மா தட்டங்களில் சோற்றைப் போட்டுவிட்டு கறிகள் போட்டுக் கொண்டு இருந்தார்.

''அம்மா கந்தையா மாஸ்டரும் வேறை இரண்டு பேரும் வந்திருக்கினம்'' என்றாள் வனஜா.

''ஓமோம் கண்டனான். ஐயாதான் இப்ப கொஞ்சம் முதல்தான் கந்தையா மாஸ்ரரிட்டைப் போனவர்'' என தாய் சொன்னாள்.

''ஏன் இரவிரவாய்த் திரியவேணுமே. பாக்கிற அலுவலைப் பகலிலே பார்த்தால் என்ன?'' ராகினி அம்மாவை நேரடியாக முகம் கொடுக்காமலே கேட்டாள்.

''அவை கிட்டடியிலை தானே இருக்கிறவை. இரவு எட்டு மணிவரை றேட்டிலை சனப்புழக்கம் இருக்குத்தானே-', என்று அம்மா

''நீங்கள் சாப்பிடுங்கோ நான் வந்தவைக்குத் தேத்தண்ணி குடுத்திட்டு வாறன்.'' என்று சொல்லி விட்டு அப்பால் நகர்ந்தாள்.

' பாத்தியே அக்கா உன்ரை கலியாணம் சரிவந்தவுடனே ஐயாவும் அம்மாவும் எப்படி சந்தோஷமாயும், உஷாராயும் வேலை செய்யினை எண்டு. ஐயா இண்டைக்குச் சுருட்டுக்கே போகேல்லை.''

ராகினி மெதுவாகப் புன்னகைத்தாள்.கலியாணக் கதை தொடங்கிய பிறகு இப்போதுதான் முதல் தடவையாக அவள் முகத்தில் சிரிப்பு பிறந்துள்ளது.

வனஜா தமக்கையை ஆர்வத்துடன் பார்த்தாள். அக்காவின் முகத்தில் பிறந்த சிரிப்பு அவளுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்தது.

"அக்கா ஜேர்மனிக்குப் போனாலும் என்ரை ஞாபகம் இருக்கும் தானே. தம்பியும் இல்லாமல் நீயும் இல்லாமல் என்பாடுதான் பிரச்சனை" என்று அவள் இயல்பாகச் சொன்னது போல் சொன்னாலும்- குரலில் இழையோடி இருந்த கவலையை ராகினியால் உணரமுடிந்தது.

நெஞ்சில் ஊசி செருகியது போல வலித்தது. "போடி விசரி- ஏன் விசர்க்கதை கதைக்கிறாய்-" என்று மாத்திரம் தான் சொல்ல முடிந்தது.

தேனீர்த்தட்டுடன் போனதாய் சிறிது நேரம் கழித்து குசினிக்குள் வந்தாள்.

"நாளைக்கு நல்ல நாளாம். மாப்பிள்ளை வீட்டுக்காரர் நாளைக்கு வருவினமாம். மாப்பிள்ளை தானே பொம்பிளையைப் பார்த்தவர். மாப்பிள்ளை வீட்டுக்காரர் பார்க்க வேணுமாம். அதோடை மாப்பிள்ளை பகுதி வந்து போறது ஒரு சம்பிரதாயம் தானே." என்ற அம்மா உற்சாகமாக இருந்தார்.

ராகினி தாயைப்பார்த்து புன்னகைக்க அந்தத்தாயின் மனம் நிறைந்தது.

# 10

தமிழ்ச் சினிமாவின் கனவுக் காட்சிகள்போல அதிவிரைவாக காட்சிகள் மாறிக்கொண்டிருந்தன. ராகினி வீட்டில் நிலவிய உற்சாகமான சூழ்நிலைக்கு தன்னை ஆட்படுத்திக் கொண்டாள்.

வீட்டின் விருந்தையின் முன்படியில் அமர்ந்திருந்து ஒழுங்கையைப் பார்த்தபடி இருந்தாள் ராகினி. வீட்டிலை ஆட்களில்லை. ஐயா வீட்டிலை இருக்கும் நேரம் குறைவு. ஓய்வு இல்லாமல் அவர் இயங்கிக் கொண்டிருந்தார்.

வீட்டை விட்டு எப்போதாவது வெளியே போகும் அம்மா சோர்ந்து கருவளையங்கள் பூண்ட வதனத்தில் புத்துணர்ச்சியைப் பரவிவிட்டபடி நடமாடினுள்.

தாய் தகப்பன் இருவரும் பார்க்க முடியாத சிறு அலுவல்களை ஒரு இளைஞனுக்கு உரிய சுறுசுறுப்புடன் வனஜா செய்தாள். இப்போது கூட அவள் ரவுணுக்குப் போய் விட்டாள்.

அப்படிச் செய்வோமா அக்கா? இப்படிச் செய்வோமா? அக்கா என்று அவள் ராகினியைப் படாதபாடு படுத்திவிடுவாள்.

ராகினி வீட்டில் இருக்கும் நேரங்களில்கூட முன்னைப் போல இருக்க விடமாட்டாள். முகத்தைக் கழுவு அக்கா பவுடரைப்பூசு, இந்தச் சாறியைக்கட்டு. மாப்பிள்ளை வீட்டாக்கள் வந்தால் சரியில்லை. என்று எல்லாவற்றிலுமே அக்கறையுடன் இருந்தாள்.

ராகினியை அழைத்துக்கொண்டு துணிகள் எடுப்பதில் ஆகட்டும், அதை லேட்டஸ் பாஷன்களில் தைப்பதிலாகட்டும் எல்லாமே அவள் தான்.

"அக்கா நைட்டி இப்பித்தான். இப்பத்தைய பாஷன். எங்கடை ளொசிலே உள்ள வசந்தியின்ரை அக்காவுக்கு போனகிழமை கலியாணம் நடந்த தெல்லெ. அவவின்ரை நைற்றியும் இப்பிடித்தான்" என்று அவள் சொல்லும் எல்லாவற்றுக்கும் தலையாட்டிக் கொண்டு இருந்தாள் ராகினி.

புதிதாக கிடுகுகள் பறிக்கப் பட்டு வேலிகள் வலிமையுடன் அழகாகவும் அடைக்கப்பட்டன. வளவும் துப்பரவானது. மேசனுடன் வெள்ளையடிப்பவர்களும் வந்தார்கள்.

சிதறிப்போயிருந்த விறுந்தையும் சுவர்களின் ஓட்டைகள் அடைக்கப்பட்டு வர்ணமும் பூசப்பட்டன, எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் அடிக்கப்பட்ட காவிக்கலர் வர்ணமும் அழுக்குகளும் சேர்ந்து கேவலமாகிப் போயிருந்த சுவர் முகம் மலர்ந்து சிரிக்கும் கன்னிப் பெண்ணாக புதுப் பொலிவு பெற்றது, பின்னல் அறுந்து மூலைகளில் முடங்கிப் போயிருந்த கதிரைகள் வெளியே வந்தன.

புதிதாகப் பின்னிய பின்னர் வனஜா எல்லாவற்றுக்கும் சீலைகள் தைத்துப் போட்டாள். ஜன்னல்கள், கதவுகள் கூட சீலைகளைப் பெற்றன.

கணநாதன் இருக்கும் வரை அவனால் பாவிக்கப் பட்டு பின்னர் யாருமே பாவிக்காமல் இருந்த கட்டில்கூட தூசு தட்டி புதிய பெட்சீட் விரிக்கப்பட்டு புதிதானது.

இப்படி ஒவ்வொரு சின்னச்சின்ன விடயமாக வீட்டில் மாறிவரும் மாற்றத்தினை அப்போது ராகினி உணர்ந்தாள். நடக்கப் போவது எனக்கு மட்டும் தான் கலியாணம், ஆனால் எத்தனை மாற்றங்கள் அதனூடாக நிகழ்கின்றன.

எல்லாமே இந்தச் சில நாட்களுக்கு இடையில் போன வெள்ளிக் கிழமைக்கும் இந்த வியாழக் கிழமைக்கும் இடையில் நடந்து விட்ட நிகழ்வுகள்.

மந்திர தந்திரங்கள் இல்லாமலே அரங்கேறி விட்டகாட்சிகள், போன வெள்ளிக்கிழமை அன்றைக்கு முதலாம் திகதியாக இருக்க வேண்டும்.

அன்றைய தினம் தான் மாப்பிள்ளை வீட்டார்கள்வருவது பற்றி ஐயா சொன்னார். அதன்படி அடுத்த நாள் இரண்டாம் திகதி சனிக்கிழமை அவர்கள் வந்தார்கள்.

காரில் கும்பலாக வந்து இறங்கிய அவர்களை ஐயாவும் அம்மாவும் கந்தையா மாஸ்டரும் வரவேற்றார்கள். கதவு ஓரமாக மறைந்து நின்ற வனஜா வெளியே நடக்கும் விடயங்கள் பற்றி நேர்முக வர்ணனை செய்து கொண்டு இருந்தாள்.

அறைக்குள் வழக்கத்தை விட விசேடமான அலங்காரத்துடன் இருந்த ராகினி மனத்தை ஒருநிலைப் படுத்த முடியாமல் தவித்தாள்.

நான்கு பெண்களும் ஐந்து ஆண்களும் இரண்டு சிறு பிள்ளைகளும் விருந்தை நிறைந்திருந்தார்கள் அப்போது இருந்த கதிரைகள் காணாது, எப்படியோ சமாளித்தார்கள்.

பெண்கள் அனைவரும் விருந்தையை விட்டு அறைக்குள் வந்தனர். செயற்கையாக புன்னகைத்தபடி ராகினியை ஆழமாகப் பார்த்துக் கொண்டு வந்தார்கள், அர்த்தமில்லாமல் சிரித்துக் கதைத்து, கதைத்துச் சிரித்து அவர்களுக்கு தேனீர் பலகார உபசாரம் என்று பாரம்பரிய சடங்குகளைச் செய்து அனுப்பியது பெரிய கதை.

திங்கட்கிழமை இவர்கள் போனார்கள். ஐயா அம்மா, கந்தையா மாஸ்டர், வனஜா, சம்பந்தன், பக்கத்து வீட்டு, பின்வீட்டு ஆட்கள் என்று அவர்களை விடக் குறைவான ஆட்களே போனார்கள்.

அவர்கள் வீட்டையும் வீட்டின் பொருட்களையும் காட்சிவைத்த மாதிரி இருந்த வெளிநாட்டு சங்கதிகள் பற்றியெல்லாம் வனஜா வாய் விடாமல் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

செவ்வாய்க் கிழமை கல்பனா வந்தாள். ராகினி அப்போது தான் கல்லூரியால் வந்து உடைமாற்றி தேனீர் குடித்துக் கொண்டிருந்தாள். வீட்டில் அமளியான வேலை நடந்து கொண்டிருந்தது.

வாசலில் சைக்கிள் மணி ஒலித்தது, லேடீஸ் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு கல்பனா வெளிப்பட்டாள்.

''வாரும் வாரும் உங்கடை ஒவ்பீஸ் சிலே வேலை செய்யிற ஒரு ஆளிட்டை சொல்லி விட்டனான். சொன்னவரே. என கல்பனாவை வரவேற்றபடி ராகினி கேட்டாள்.

''இல்லை ராகினி நான் கனநாளாய் உம்மைச் சந்திக் கேல்லை எண்டு வந்தனான், ஏதோ விசேஷம் போல.'' என சிரித்துக் கொண்டு கேட்ட கல்பனாவுக்கு மிக நெருக்கமாக கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள் ராகினி.

''விசேசம் தான், வாற பதினாலாந்திகதி கலியாணம்–''

''அதுதான் நல்லது. வாழ்க்கை எல்லாருக்கும் ஒரேமாதிரி அமையிறதில்லை, நான் அண்டைக்கு உம்மோடை கதைச்சுப் போட்டு வீட்டை போய் இருந்து யோசிச்சனான் இனிமேல் வாழப் போற உம்மை நான் குழப்பிப் போட்டனே. என்ரை வாழ்க்கையை வைச்சு நீர் எதையும் அளந்து பார்க்காதேம், எனக்கு வந்த புருஷன் அப்படியாப் போச்சு, நான் உமக்கு வாறவர் நிச்சயம் நல்லாய் இருப்பார். நீர் சந்தோஷமாய் இருப்பீர், எனக்கு புருஷன் தான் நல்லாய் வாய்க்கேல்லை எண்டாலும் பிள்ளையள் நல்லாய் அமைஞ்சிருக்கு. அதுகளும் இல்லாட்டி எனக்கு வாழ்க்கை எப்பவோ வேறுத்திருக்கும்.'' என்ற கல்பனாவை ஆதரவுடன் பார்த்தாள் ராகினி.

''நான் சொல்லி அனுப்புவன். எண்டாலும் இப்ப சொல்லுறன் கலியாணத்தண்டு வந்து நிண்டு எனக்குக் கெல்ப் பண்ண வேணும். உமக்குத் தெரியும் தானே எங்களுக்கு அம்மா வழியாலேயோ ஐயா வழியாலேயோ உத

விக்கு ஆட்கள் இல்லை. எல்லாரும் ஓடும் புளியம்பழமும் மாதிரி. சொன்னால் அந்த நேரம் வந்திட்டு போயிடுவினம் அக்கம் பக்கத்து அயல் ஆட்கள் தான் உதவி.'' என்னும் போதே ராகினியின் வேதனை வெளிப்பட்டது.

''அது உண்மைதான் நல்லாய் இருந்தால் எல்லாரும் வருவினம். கெட்டு நொந்து போனால் ஒருத்தரும் வரமாட்டினம்'' என்றாள் கல்பனா.

''தம்பி வெளிக்கிட்டுப்போய் செத்தது எங்கடை சொந்தக்காரர் ஒருத்தருக்கும் பிடிப்பில்லை. பிள்ளை வளர்த்தது சரியில்லையாம் எண்டு அம்மாவையும் ஐயாவையும் எல்லாச் சொந்தக்காரரும் பேசிக்கொண்டு இருந்தவை நாங்கள் சேர்ந்து கதைக்கிறதும் அவைக்குப் பிடிப்பில்லை. இப்பபாரும் கல்பனா எனக்கு கலியாணம் முற்றாகிப் போச்செண்டு ஊர் முழுக்கத் தெரியும். ஆனால் நெருங்கின சொந்தக்காரர் ஒருத்தர் தன்னும் வந்து பாக்கேல்லை. அவை வந்து பாக்க வேணும் எண்டு நாங்கள் எதிர்பாக்கேல்லை. ஆனால் அவையின்ரை மனசைப் பற்றிச் சொல்லுறன்-'' என்றாள் ராகினி

அவள் குரலில் இழையோடிய துயரத்தினைக் கல்பனா உணர்ந்து கொண்டாள்.

''ராகினி என்னதான் முன்னேறினாலும் எங்கடை ஆட்கள் இன்னமும் தங்கடை அடிப்படையான குணத்திலை எந்தவிதமான மாற்றமும் அடையேல்லை. இதைப்பற்றி நான் முந்தியும் சொல்லி இருக்கிறன். என்ரை புருஷனாலை நான் எவ்வளவு சித்திரவதைப்பட்டன். கஸ்டப்பட்டன். எத்தினை நாள் சாப்பிடாமல் கண்ணீர் விட்டுக்கொண்டு இருந்திருப்பன். இதுகளையெல்லாம் தெரிஞ்ச என்ரை சொந்தக்காரர் என்ன கதைக்கினம் எண்டு தெரியுமே. அவளுக்கு தான் உழைக்கிற திமிர். அதாலதான் புருஷனை மதிக்கிறாள்

இல்லே. வேலே செய்யிற இடத்திலேகண்டவனோடை கதைக் கிறத்துக்கும் புருஷன் கூட இருந்தால் இடைஞ்சல் தானே அதுதான் பாவம் அந்த மனுசனைக்கலேச்சுப் போட்டாள், என்று, இதை அவரின்டை ஆட்கள் கதைச்சாலும் பரவா யில்லே, என்ரை ஆட்கள், நெருங்கிய சொந்தக்காரர் கதைக்கினம். எப்படி இருக்கும் என்ரை மனம் கொஞ்ச நாள் இதைப் பற்றியெல்லாம் கவலேப் பட்டனான் தான். ஆனல் இப்ப இல்லே, எதுக்கும் ஒரு எல்லே இருக்கு. அதைத் தாண்டினல் எல்லாம் ஒன்றுதான்.'' என்று சொன்ன கல்பனவின் முகத்தில் கவலே இல்லே. சொற்களில் உறுதி தெரிந்தது.

''வீட்டிலே வேலேக்காரப் பிள்ளேயளே வைச்சிருக்கிறதை எப்படி கௌரவமாய் நினைக்கினமோ அப்படியே அதுகளே அடிச்சு சித்திரவதை செய்துகொண்டு வீட்டுக்கு வெளியிலே வந்து மனித உரிமையள் பற்றியும் கதைப்பினம். அப்பா விப் பொதுமக்களுக்காக அடிக்கடி கவலேப்படுகிற அமெரிக்கா தான் ஈரான் சிவிலியன் பிளேனையும் சுட்டு விழுத்தியது இது ஒரு உதாரணம் தான். இந்த அளவுகோல்தான் எல் லாவற்றுக்கும். இதுக்கெல்லாம் கவலேப்பட்டுப் பிரயோச னம் இல்லே. இப்ப நாங்கள் இந்த மண்ணிலே எப்படி வாழு றம், எப்படி வாழப்பழக்கப் பட்டம். அதுமாதிரி எல்லாத் தையும் பழகிக்கொள்ள வேண்டியதுதான்-'' என்ற கல்ப னவை சந்தோஷமாகப் பார்த்தாள் ராகினி

விருந்தையில் அமர்ந்திருந்த ராகினிக்கு செவ்வாய்க் கிழமை கல்பன கதைத்த கதைகள் மீண்டும் ஞாபகத் திற்கு வந்தன.

இன்னும் எட்டே எட்டு நாட்கள். அவள் சட்டப்படி யும் சம்பிரதாயப்படியும் திருமதி ராகினி கந்தசாமி ஆகி விடுவாள் பிறகு -

வாழ்க்கை எப்படி இருக்கும்? கல்பன பட்ட கஸ்டம் போல கஸ்டங்கள் வருமா? அல்லது எப்பிடி அமையும்?

அவர் என்னை தோளில் தூக்கி வைப்பாரா அல்லது காலில் போட்டு மிதிப்பாரா?

வீட்டின் வெளியேயும் உள்ளேயும் நன்ருக இருள் சூழ்ந்து விட்டது. முன் வீட்டாக்கள் விளக்குகளைப் போட்டு விட்டார்கள்.

சிந்தனைவயப்பட்டு பொழுது போனது தெரியவில்லை என யோசித்த ராகினி எழுந்து விருந்தை லைட்டைப் போட்டாள்.

"என்னக்கா இப்பதான் லைட்போடுறியே" எனக்கேட்ட படி கேற்றைத் திறந்து கொண்டு வந்த வனஜா "அம்மாவும் வரேல்லையோ" எனக்கேட்டாள்.

"உனக்குத் தேத்தண்ணி கொண்டுவரட்டே"

"இல்லை வேண்டாம் அக்கா கொஞ்சம் பச்சைத்தண்ணி கொண்டுவா சரியான தண்ணிவிடாய். தேத்தண்ணி குடிச்சால் சரிவராது" என்ருள் வனஜா.

செம்பில் கொண்டு வந்த தண்ணீரை படமடவெனறு குடித்த வனஜா—

"ஒரு குட்நியூஸ் தெரியுமே நான் அவரைக் கண்டனுன்"

"யாரடி அவர்"

"அவர் தான் உன்ரை மிஸ்டர்" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டு வனஜா சொன்னுள்

"என்னவாம்"

"அக்கா என்ன செய்யிரு என்று கேட்டவர் - பள்ளிக்கூடமும் போகாமல் உங்கடை நினைப்பிலைதான் இருக்கிரு என்று சொன்னனுன்" எனச் சொல்லி பெரிதாகச் சிரித்த வனஜாவைப் பார்த்து முறைத்தாள் ராகினி

"உதென்ன விசர்க்கதை. உப்பிடி ஏன் சொன்னனி. நான் என்ன அப்பிடியே இருக்கிறன். பகிடிக்கும் ஒரு அளவு இருக்க வேணும்" என்ருள் சற்றுக் கோபத்துடன்

பட்டென்று சிரிப்பை நிறுத்திய வனஜா "நான் படிகி விட்டனுன் அக்கா. நான் அப்பிடிச் சொல்லுவேனே நான் பஸ்சால இறங்கி வீட்டை நடக்கத்தொடங்க மோட்டார் சைக்கிள் ஒண்டு பக்கத்தில வந்து நிண்டுது. பார்த்தால் இவர். மெல்லிசாய் சிரிச்சுக் கொண்டு எங்கைபோட்டு வாறியள் எண்டு வெகு மரியாதையாய்க் கேட்டார்."

"பிறகு-"

"கொஞ்சநேரம் சும்மா கதைச்சார். இஞ்சை பொழுது போகேல்லையாம், ஜேர்மனியிலை ஒவ்வொரு செக்கனும் என்னமாதிரிப் போறதெண்டு தெரியாதாம். இஞ்சை ஒரு இடமும் வெளிக்கிட்டுத் திரியேலாமல் இருக்காம், அடையாள அட்டையும் இல்லையாம். பாஸ் போட்டைக் கொண்டு திரியிறதும் பிரச்சனை எண்டார்."

"ம்"

"சில வேளை சனி ஞாயிறு வந்தாலும் வருவர் போல"

"வருவரோ."

"ஓம் அக்கா-அவரின்ரை கதையைப் பார்த்தால் அப்பிடித்தான் இருக்கு. அக்கா சனி ஞாயிறிலை வீட்டிலை நிற்பாதானே, எண்டு கேட்டவர், அதாலதான் சொல்லுறன் பஸ்ஸ்ராண்டில உன்னைப் பார்த்து கலியாணத்துக்கு ஓமெண்டு சொன்னவருக்கு வாற கிழமை வரை காத்திருக்கப் பொறுமை இல்லைப் போலை." என்ற வனஜாவின் விழிகளில் குறும்புத்தனம் வெளிப் பட்டது

திடீர் என ஒரு தாக்கம் ராகினியினுள் ஏற்பட்டனது' வந்தால் என்ன கதைப்பார், அவருடன் எப்படிக் கதைப்பது, என்ற கேள்விக்கணைகளுடன் சற்றுக் கலக்கமும் ஏற்பட்டது.

"என்னக்கா நீ - இப்பவே இப்படிப் பயந்தால் கலியாணம் முடிச்ச பிறகு என்ன செய்யப் போறுய்"

"நேரம் ஏழு மணியாகுது, அம்மாவைக் காணேல்லை. ஐயாவோடை வருவவோ." எனக் கேட்டாள் ராகினி.

"அப்பிடித்தான் இருக்க வேணும், நேரஞ் செண்டால் ஐயா அம்மாவைக் கூட்டிக் கொண்டு வாற தெண்டுதான் சொன்னவர்." என்ற வனஜா எழுந்து வீட்டுக்குள் போய், உடைமாற்றி அறைக்குள் இருந்த தையல் மிசினைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தாள்.

சற்று நேரத்துக் கெல்லாம் அவள் தையல் பணி ஆரம்பமானது.

"இப்பதான் களைச்சுப் போய் வந்தனி கொஞ்ச நேரம் ஆறி இரன் வனஜா. உதுகளை ஆறுதலாய் தைக்கலாம் தானே." என்றாள் ராகினி.

"நெடுக இப்பிடித்தைக்கப் போறனே அக்கா, இப்ப, கொஞ்சநாளைக்குத் தானே, இந்தக் கஸ்டம் உன்ரை கலியாணம் முடிஞ்சபிறகு வேலை ஒண்டும் இல்லாமல் சும்மாதானே இருக்கப் போறன்." என்ற வனஜா.

"மழையுக்க கிடைந்து கறள் பிடிச்சு பலகையள் உக்கினாலும் மிசின் நல்லாய்த் தைக்குது." எனவும் சொன்னாள்.

'கதையோடை கதையாய் அக்கா இண்டைக்கு காலமை சம்பந்தனோடை பார்த்திபனும் வந்தவன். ஜெயப்பூர் கலோடை. தன்னாலை பெரிய வேலையள் ஒன்றும் செய்யேலாது எண்டு நினைச்சு ஒண்டும் சொல்லாமல் விடாதேங்கோ. கணநாதனின்டை இடத்துக்கு நான் இருக்கிறன். எந்த வேலையையும் சொல்லுங்கோ. என்று சொல்லிச் சண்டை பிடிச்சான். கடைசியில் சொல்லக் கேட்காமல் கிணற்றடிப் பக்கம் அவங்கள் தான் துப்பரவாக்கின வங்கள்." என்றாள் வனஜா.

"அவன் பாவம்.' என்றவாறு பார்த்திபனை நினைத்துக் கவலைப் பட்டாள் ராகினி.

"சம்பந்தன் சொன்னான் மாப்பிளைத் தேழனுக்குப் பார்த்திபனையே விடச் சொல்லி. அப்படிச் செய்தால் என்னக்கா." எனக் கேட்டாள் வனஜா.

"பார் எனக்கு உந்த மூளைவரேல்லை" எனச் சந்தோஷப்பட்டாள் ராகினி.

# 11

சோட்லீவு எடுத்துக் கொண்டு புறப்பட்டும். பிரயோசனப் படவில்லை. பஸ்சை விட்டு இறங்கிய போது நேரம் இரண்டரை மணியாகிவிட்டது.

வெய்யில் அகோரமாக எறித்தது, ரோட்டில் சன நடமாட்டமும் வாகன நட மாட்டமும் குறைவாக இருந்தது என்றாலும் இரண்டு மினிபஸ்கள் போட்டி போட்டுக் கொண்டு ஒன்றை ஒன்று கலைத்துக் கொண்டு போயின.

குடையை விரித்துக் கொண்டு ரோட்டைக் கடந்த போது கடைக்காரன் தேவையில்லாமல் பல்லைக் காட்டினான் கடைவாசலில் நின்ற யாரோ. 'சூ' அடித்தான்

மனதிற்குள் அவனைத் திட்டிக் கொண்டே ராகினி விரைவாக நடந்தாள். வாற வியாழக்கிழமை கலியாணம் அக்கா இது தான் நானும் நீயும் வெறும் ராகினியாகவும் வனஜாவாகவும் அம்மன் கோயிலுக்குப் போற கடைசி நாள் ஆனபடியால் மூண்டு நாலு மணி எண்டு வழக்கம் போல மினைக் கெடாமல் கெதியாய்வா என வனஜா காலையில் போகும் போது சொல்லியிருந்தாள்.

அதனால் இந்த ஏற்பாடு, வழக்கமான நேரம் என்றால் ரோட்டில் வழக்கமான பள்ளிக்கூடப் பிள்ளைகள் வருவார்

கள். பல்லைக்காட்டும் கடைக்காரனிட மிருந்தும், 'சூ' அடித்த மன்மதனிடம் இருந்தும் தப்பி இருக்கலாம் என ராகினி நினைத்தாள்.

விரைவாக நடந்தும் பிரயோசனப் படவில்லை. கஸ்ட காலம் பொன்னம்மா உருவில் எதிர்ப்பட்டது.

ஒழுங்கை முகப்பில் வீட்டுவாசல் கேற்றோடு வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு நின்ற பொன்னம்மாவைக் காண எரிச்சல் தான் வெளிப் பட்டது.

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத- விக்கிரமாதித்தன் போல பொன்னம்மா தூரத்தில் வந்த ராகினியை எதிர் கொண்டழைக்கத் தயாரானாள்.

''என்னடி பிள்ளை. உன்னை எத்தினை நாளாய் காண வேணும் என்று இருந்தனான் நீ எப்படி என்னைச் சுழிச்சுக கொண்டு போறாய்.'' என்ற பொன்னம்மாவைப் பார்த்து அசட்டுத் தனமாகச் சிரித்துக் கொண்டு தொடர்ந்து நடக்க முற்பட்ட ராகினியை பொன்னம்மா கையைப் பிடித்து இழுக்காத குறையாய் நிற்பாட்டினாள்.

''என்ன - நான் கேள்விப்பட்டது மெய்யே - உனக்கு விசேஷமே.'' என வெற்றிலைச்சாறு வெளியே தெறிக்கக் கேட்டாள்.

எப்படியோ தப்பினால் போதும் என நினைத்த ராகினி தலையாட்டினாள்.

'இஞ்சை பார்பிள்ளை நீ ஒண்டும் சொல்லாட்டியும் எனக்கெல்லாம் தெரியும். அது சரி ஒருநாளும் சபை சந்திக்கே போகாத மேற்குப் பக்கம் ஏன் நீங்கள் போனியள் உனக்குத் தான் விபரம் தெரியாது எண்டால் உன்ரை கொய்யா கொம்மாவுக்கும் தெரியாதே. இப்பதான் ஒரு கண்டறியாத பழக்கம் பழகிறியள். இந்தக் கிழக்குப் பக்க ஆட்கள் எப்பவாவது மேற்குப் பக்கம் கலியாணம் செய்தி

ருக்கினமே, முப்பத்தைஞ்சு முப்பத்தாறு வயது வரை இருந்து தலை தரைக்கிற நேரத்திலை கலியாணம் கட்ட வெளிக்கிட்ட உனக்கு உன்ரை ஆட்கள் பார்த்தது உதையே, எடிபிள்ளை நீ உழைக்கிறனியெல்லே, அப்பிடி உழைக்கிற பெம்பிளைக்கு மாப்பிள்ளையை ஒரு வேலை செய்யிறவனாய்ப் பார்க்கவேண்டாம். உன்ரை மாப்பிள்ளை முந்தி சங்கக் கடையிலை நிண்டவன். எஸ். எஸ். சியும் பாஸ் பண்ணினுனோ தெரியாது, ஜேர்மனியிலை இருந்தாப் போலை தகுதி வந்திடுமே.'' எனக் கத்திய பொன்னம்மாவைப் பிடித்துக் கட்ட நாலைந்து பேர் தேவைப்படும் போல இருந்தது

வனஜா சொல்லுவது போல வாயைப் பொத்தி அடிச்சாலும் இந்த மனிசி இப்பிடிக் கதைப்பதை நிற்பாட்டுமா என்பது சந்தேகமே என நினைத்த ராகினி.

''எனக்கு கன அலுவல் இருக்கு போட்டு வாறன்,'' எனக் கழற்றிக் கொள்ள முனைய.

''கடைசி கனடாவிலை இருக்கிற ஒருத்தனைப் பாத்திருக்கலாம், ஜேர்மனி இடம் சரியில்லை எண்டு உன்ரை ஆட்களுக்கு தெரியேல்லையே வாறமாதமோ, அங்காலையோ பிரச்சனை தீர்ந்திட்டுது எண்டு. ஜேர்மனியிலை இருக்கிற ஆட்களை திருப்பி அனுப்பப் போறுங்கள். அப்ப உன்ரை ஆள் என்ன செய்யப் போறுா, பழையபடி சங்கக்கடையில் வந்து நிற்கப் போறுரோ.''

ராகினி பொறுமையாக இருக்க கஸ்டப்பட்டாள். என்ன செய்வது என்று தடுமாறிக் கொண்டு இருக்க.

''என்ன பொன்னம்மாக்கா.'' என்றபடி பொன்னம்மாவைப் போன்ற தோற்ற முடைய பெண்ணொருத்தி குடையும் கையுமாக வர ராகினி அப்பாடா என மனதுக்குள் நினைத்தபடி நடக்கத் தொடங்கினுள்.

புதிதாக வந்த பெண்மணியிடமும் பொன்னம்மா தன்னைப் பற்றியே உரத்த குரலில் கதைப்பதை நடந்து கொண்டு ராகினி கேட்டாள்.

வீட்டில் வனஜா ராகினிக்காக காத்திருந்தாள்.

"என்னக்கா நேரம் மூன்று மணியாகி விட்டுது, இனி நீ சாப்பிட்டு ஆறி இருந்து நாலு மணிப் பூசைக்கு போற தெண்டால் என்ன மாதிரி, உன்னை வேலைக்கெல்லே வரச் சொன்னனான்." என்றாள் வனஜா.

"வழியிலே பேய் ஒன்று நிண்டுது, அதை தலையைச் சுத்திப் போட்டு வர நேரம் போட்டுது.

"என்ன பேயோ."

"பேய் எண்டால் வேறை ஆர் பொன்னம்மா தான்." என்றாள் ராகினி

அவர்கள் கோயிலுக்குப் போன போது பூசைக்கு உரிய நேரமாகியிருந்தது. தேர் முட்டியடியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பால் சக்கரைப் பொங்கல் அடுப்பில் வெந்து கொண்டிருக்க. வாசனை தா வென்று அழைத்தது.

கிணற்றடியில் கால்களைக் கழுவி அர்ச்சனைத்தட்டுடன் நுழைய உள்ளே நின்றவர்கள் தன்னையே புதினமாகப் பார்ப்பதை ராகினி உணர்ந்தாள்.

கைகளைக் கூப்பியபடி கண்களை அங்கும் இங்கும் அலைபாய விட்டுக் கொண்டு கோயிலுக்கு கும்பிடுவதற்காகவும் வந்து விட்ட அந்தப் பக்த கோடிகளைக்காண சனமாக இருந்தது ராகினிக்கு.

கண்களை மூடிக் கொண்டு கும்பிடத் தொடங்க நெஞ்சத்தை வேதனை சுண்டி இழுத்தது. இந்தக் கோயிலும் இந்த சூழலும் மிகச் சிறிய வயதில் இருந்து அவளோடு இரண்டறக் கலந்து விட்ட ஒன்று.

இன்று போல் கும்பல் கும்பலாக கும்பிடுவதற்கு சனங்கள் வராத காலத்தில் ஐயாவின் கையைப் பிடித்துக் கொண்டோ, அம்மாவின் பின்னாலே வந்து கும்பிட்டுப்

போன காலம் தொடக்கம், இன்று வரை உணர்வோடு ஒன்றிப் போய் விட்ட கோயிலை இந்தச் சூழலை விட்டுப் பிரியப் போகின்றேனே என நினைக்கும் போது. அவளுக்கு ஏற்பட்ட துயரத்தினை விழிகளில் ஈரம் கசிந்தது வேதனை நெஞ்சத்தைப் பற்றிப் பிடித்துச் சல்லடைக் கண்களாகத் துளைத்தது.

பொல பொல வென்று கண்ணீர் இரு கண்களில் இருந்தும் பெருக தொடங்க அவள் கும்பிட்டாள்.

என்னக்காக-' எனக் கேட்ட வஜைாவின் கண்களும் கலங்கி இருந்தன.

பூசை முடிந்து திரும்பி நடக்கும் போது கோயிலடியில் ஏற்பட்ட கவலையும் கலக்கமும் இனம் தெரியாத சோகத்தினை ஆழமாக ஆவளுள் ஏற்படுத்தியிருந்தன.

அதுகாரணமாக இருவரும் மௌனமாகவே நடந்தார்கள் வழியில் கணபதிப்பிள்ளை வாத்தியார் தென்பட்டார். சற்றே கூன் விழுந்து முதுகும் மெலிந்து தோற்றம் கொண்ட அவர் அப்போது கண்ணாடிஅணிந்திருந்த படியால்ராகினியை அடையாளம் கண்டு கொண்டார். " ராகினி " என்றஅவர் குரலில் உயிர்த்துடிப்பு இருந்தது. " வாங்கோ வாத்தியார்" என்ற ராகினியின் குரலில் மரியாதை தொனித்தது.

சின்னவயதில் அவளுக்கு அவர் படிப்பித்தார். நாசினலும் கையில் பிரம்புமாக காட்சிதரும் அவரிடம் அவளுக்கு பயமும் மதிப்பும் இருந்தது. அது இன்று கூட இருக்கின்றது. " நேற்றைக்கு ஐயாவைக் கண்டனான். கலியாண விசயத்தை சொன்னார். எனக்கு நெஞ்சு நிறைஞ்ச சந்தோஷசம் உன்ரை ஐயாவும் அம்மாவும் பட்ட கவலைக்கு உனக்கு நல்ல காலம் பிறந்திருக்கு உங்கடை குடும்பம் ஒரு நல்ல குடும்பம். உங்களுக்கு ஒரு குறையும் வராது சந்தோஷமும் பெருமையும் இணைய அவர் சொன்னதை அவர்கள் கேட்டார்கள்.

வேதனேயோடு வந்த ராகினிக்கு அந்த வார்த்தைகள் உணர்ச்சி பூர்வமாக இருந்தன. கண்கள் மீண்டும் கலங்கி என்னபதில் சொல்லுவது என்று தடுமாறி சற்றே வேதனே யின் சாயல் படியச்' சிரித்தாள் ராகினி.

தொடர்ந்து சிறிது தூரம் நடந்தார்கள்

''அக்கா எவைக்கும் எது இருக்கோ இல்லேயோ நல்ல மனம் இருக்கவேணும். நல்லமனம் ருத்தால் தான் மனிசத்தன்மை இருக்கும். அவைதான் நல்ல மனிசாரய் இருப்பினம் ''என் ருல் இருந்தாற்போல'

ராகினி வஜைாவைப் பார்த்து மெதுவாகப் புன்னகைத் தாள்.

ஒழுங்கையை விட்டு வளவுக்குள் இறங்கிய போது விருந் தைக்கு எதிரே ஒரு மோட்டார் சைக்கிள் நின்றது. வஜைா வுக்கு அதை முன்பு கண்டது போன்ற ஒரு நினேவு வரு வதற்கு முன்னரே அம்மா விரைந்து வந்தாள்.
''அவர் வந்திருக்கிருர் பிள்ளே பூசை முடிஞ்சு என்ன செய் தனீங்கள் '' என்ற அவள் குரலில் தவிப்பு. கூடவே அம் மாவின் குரலில் பதட்டமும் இருந்தது. அதைவிட ஒரு பயபக்தி வெளிப்பட்டது ராகினி அதிர்ந்து போனுள் கால் கள் அசைய மறுத்தன

பொழுது சாய்ந்து கொண்டு இருக்கும் அந்த மனோ ரம்மியமான வேளேயில் விருந்தைக் கதிரையில் அமர்த்தவாறு முகத்தை லேஞ்சியால் துடைத்துக் கொண்டு தன்னேயே பார்த்து பின்னர் வேறு எங்கையோ பார்த்து மீண்டும் தன்னேயே பார்க்கும் அவரைப் பார்த்தாள்.

அவரா ? அவரா கந்தசாமி ? அவரா என்புருஷனுக வரப் போகின்றவர் ? அவரா என்னேத் தொடப் போசிற வர்? அவரா என்னே...? மேற்கொண்டு யோசிக்க முடிய வில்லே. உடம்பில் நடுக்கம் ஆரம்பித்திருந்தது. முகத்திலே

வியர்வை சிறு சிறு குமிழ்களாக முளைவிடத் தொடங்கியது. மயிர்க்கால்கள் சிவந்தன உதடுகளில் மெல்லிய அசைவு ஏற்பட்டது. பயப்பிராந்தியுடன் இருக்கும் மனித மனம் போல விழிகள் அடுக்க நெஞ்சமும் அந்தத்துடிப்போடு இசைந்து கொண்டது.

"என்ன யோசினை பிள்ளை போ-" என தள்ளும் அம்மாவாலும் "அக்கா நிண்டு பதறுமல் வா- அங்கை கனநேரமாய் வந்து காத்துக்கொண்டு இருக்கிறுர் போல-" என்று நெருக்கும் வஜைாவாலும் விருந்தையை நோக்கி நடந்தாள். நடை வழக்கம் போல இல்லை. இதுதான் மணப் பெண் நடக்கும் இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்கும் நடையா?

ராகினியின் மனத்திலும் உடலிலும் ஏற்பட்ட அதே தாக்கங்கள் அவரிடமும் ஏற்பட்டு இருக்க வேண்டும் தலையைத் தடவிக்கொண்டும் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டும் பெரிதாக சங்கடப்பட்டார்.

வஜைா விரைவாக செயல் பட்டாள் அவருக்கு மிகச் சமீபமாக ஒருகதிரையை இழுத்துப்போட்டு ராகினியை இருக்கச் செய்தாள்.

"நாங்கள் கோயிலுக்குப் போட்டு வாறம்-" என்றுசொல்லிக் கொண்டு அர்ச்சனைத் தட்டை அவருக்கு நீட்டினுள். அசட்டுத்தனமாக சிரித்துக் கொண்டு அவர் திருநீற்றைப் பூசி சந்தணமும் வைத்துக்கொண்டார்.

"அக்கா - நீ கதைச்சுக் கொண்டிரு நான் ரீபோட்டுக் கொண்டு வாறன் -" என்று சொன்ன வனஜா விரைவாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

ராகினி உடல் அதிர்ந்து கொண்டிருந்தது. சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு சற்று தலையை நிமிர்த்தினுள். அவர் வெளியே ஒழுங்கையைப் பார்த்துக் கொண்டு இருந்தார்

லைட் வெளிச்சம் தலையில் பளபளத்தது. பக்கப் பார்வைக்கு பல்லின் மிதப்புத் தெரிந்தது. ஆனாலும் அவரிடம் வெளிநாட்டு மெருகு பளிச்சிட்டது. எல்லாவற்றையும் மிஞ்சிய ஏதோ ஒரு வகையான செழுமை இழையொட்டிப் போய் இருந்தது.

சிறு பொழுது அவரை ஊடுருவிய ராகினியின் விழிகள் திசை திரும்ப அவர் ராகினியைப் பார்த்தார் ஆரம்பத்தின் கலக்கம் சற்றே குறைந்திருந்தது பிடித்தமான ஒன்றை மிக அருகாமையில் பார்க்கும் ஆர்வம் அதில் முகிழ்ந்திருந்தது

அங்கும் இங்குமாக மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்த இருவரின் பார்வைகளும் கணப் பொழுதில் ஒன்றை ஒன்று சந்தித்துக் கொண்டன. பார்வைகள் வெட்டுப்பட்டன. பிறகு தணிந்து அணைந்து இணைந்தன.

இதயம் வெகுவேகமாக அடித்துக் கொண்டது. ராகினி சேலைத் தலைப்பினை கைகளினால் முறுக்கிக் கொண்டு அருங்கிப் போய் இருந்தாள். பொதுவாகவே இவ்வகையான தன்மை ஒருபோதும் ஏற்பட்டதில்லை. கூச்சலிட்டு வம்பு பேசும் கூட்டத்தினர் ஊடாக அஞ்சாமல் செல்லும் மனோபாவம் அவளுக்கு இருந்தது. ஆனால் இன்றைய நிலை இதன் தார்ப்பரியம் என்ன ? என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவர் மெதுவாகப் புன்னகைத்தார். ராகினியும் சிரிக்க முனைந்தாள். ஆனால் அது அவளது வழக்கமான சிரிப்பாக வெளிப்படவில்லை.

" கோயிலுக்கு போனனீங்களோ-" எனஅவர்கேட்டார்-

அது ஒரு அர்த்தமில்லாத கேள்வி எனத் தெரியும். ஆனாலும் கேட்டார்

" ஒமோம்-" என ராகினி பதில் சொன்னவுடன்இதுவரை இருந்த தயக்கம் விரைந் தோடியது

" நீங்கள் நாளைக்குஅல்லது நாளையிண்டைக்குவருவீங்கள் எண்டுதான் வனஜா சொன்னுள்."

அவரில் மாற்றங்கள் ஏற்பட்டன. நான் நினைத்த மாதிரி யான பெண் அல்ல இவள் என அவர் நினைத்திருக்க வேண் டும் " நானும் அப்படித்தான் நினைச்சனுன். ஆனுல் நாளைக்கு வேறை அலுவல் இருக்கு. நீங்கள் மூன்று மூன்றரை மணி போல வந்திடுவியள் என்று மருமகள் சொன்னுள்."

அவள் சிரித்தாள். சிரிப்பு இயல்பாக வெளிப்பட்டது. விழிகள் ஜொலித்தன. அதனூடாக அவர் பார்வைகளை ஏற் றுக்கொள்ள ஆரம்பித்தாள்.

"பள்ளிக்கூடம் போய் வாறதிலை பிரச்சனை இல்லையே" அவர் வெகு சாதாரண மாகி விட்டவர்போல அவளைப் பார் த்தார் அவர் விழிகளில் வியப்பு மேலோங்கி இருந்தது. இவள் என்மனைவி என அவை புகழ்பாடின. இந்தப் பளிச் சென்ற வெண்மையும் அழகும் கட்டுடலும் என் ஆளுமைக்கு உரியன, என உணர்வு வெளிப்பட அவர் பார்வைகள் அவளை ஊடுருவ ஆரம்பித்தன.

"எங்கை தான் பிரச்சனை இல்லை.எப்படியோஇஞ்சைசீவிக் கிறது எண்டால் எல்லாத்தையும் பழக வேண்டியதுதான்",

இருமிய படி வளவுக்குள் வந்த ஐயா இருமலைக்கஸ்ரப் பட்டு நிறுத்திக் கொண்டு விறாந்தைப் பக்கம் வராமல் பிற பக்கம் போய் விட்டார் குசினிக்குள் வனஜாவும் அம்மா வும் குசுகுசுத்துக் கொண்டிருந்தனர்.

வீட்டின் பின்பக்கம் மரத்தில் .இருந்த கோழிகள் சிறக டித்து சத்தம் போட்டன. நாயொன்று ஊளையிட்டபடிஒழுங் கையில் ஓடியது. ராகினி கோழியை நினைத்துக் கொண் டாள் எப்போதாவது அதன் விருப்பத்தை யாரும் கேட் பதுண்டா?

அவர் ராகினியை பார்த்துக்கொண்டிருந்தார். ''இந்தப் பிரச்சனைக்கை நல்லாய் கஸ்ரப்பட்டு இருப்பியல்'' எதையாவது கதைக்க வேண்டும் என்பதற்காகவா• இந்தக்கேள்வி என நினைத்த ராகினி உதடுகளை மலரச் செய்யாமல் சிரித்தாள்.

விருந்தை ஓரமாக வந்து நின்ற வனஜா அக்கா என மெதுவாக அழைத்தாள். கையில் வெள்ளித்தட்டத்தில் ஏதோ ஒருபலகாரம் திரும்பிப்பார்த்த ராகினியை

வனஜா கண்களால் அழைந்தாள். ராகினி ''ஒரு நிமிஷம்'- என அவரிடம் மன்னிப்புக்கேட்டு வனஜாவுக்கு கிட்டுட்டப்போய்-

''ஏன்-கொண்டுவந்து கொடுத்தால் என்ன? ''என்ருள்.

''நீ கொடுத்தால் தான் அக்கா நல்லாய் இனிக்கும்'' என்று கேலி பேசிய அவளிடம் தட்டத்தை வாங்கிக் கொண்டு அவரை நோக்கி அசைந்தால்.

அவருக்கு முன்னுல் நின்று தட்டத்தை நீட்டியபோது அவர் அவளை நிமிர்ந்து பார்த்தார். அந்தப்பார்வை சற்றே வேறு பட்டதாக வெளிப்பட்டது. வேகமும் இருந்தது.

''எடுங்கோ-'' என்ருள் ராகினி அவர்தட்டில் கை வைத்தார் அவருக்குப் பக்கத்தில் இருந்த ஸ்டூல் ஒன்றில் தட்டத்தை வைத்தாள்.

''நீங்களும் எடுங்கோ-''

''இல்லை நீங்கள் சாப்பிடுங்கோ- பிறகு நான் எடுக்கிறன் -''

''இல்லையில்லை'' அவர் தட்டத்தை நீட்டினுர்.

மறுக்க முடியாமல் அவளும் ஒன்றை எடுத்தாள் வனஜா இரண்டு பேருக்கும் ரீ கொண்டுவந்து கொடுத்து விட்டு சட்டென்று மறைந்து ராகினிக்குத் தெரியக் கூடிய வாறு நின்று கேலியாகச் சிரித்தாள்.

ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத வகையில் எதை எதையோ வெல்லாம் கதைத்த அவர் விடைபெற்றுப் போக ஏழரை மணியாகி விட்டது

ஐயாவும் அம்மாவும் வனஜாவும் விருந்தையில் தோன்றி அவருக்கு அதிகமாகச் சிரித்து விடைகொடுக்க ராகினி கேற் றடி வரை நடந்தாள்.

அவள் கையில் அவர் தந்த அந்தப் பெரிய பார்சல் இருந்தது. மோட்டார் சையிக்கிளில் ஏறி அதனை ஸ்டாட் செய்த அவர், புன்னகைத்துப் "போட்டுவாறன்" என்ருர். ராகினி தலையசைத்தாள்.

"எப்படி அக்கா அவர்-" என கேட்ட வனஜாவைக் பொய்யாக அடிக்க முற்பட்டாள் ராகினி.

"என்ன சொன்னவர்-"

"எப்ப"

"கேற்றடியிலைவைச்சு ஏதோ இரகசியமய்ச் சொன்னுரே என்னக்கா அது." என்று சிரித்த வனஜா.

"நான் ஒரு மடைச்சி அதைப் போய்க் கேட்கிறேன்-" என்ருள்.

## 12

இன்று திங்கட்கிழமை பாடசாலையில் ஆசிரியர்கள் பிள் ளைகள் எல்லோரும் ராகினியையே விநோதமாகப் பார்த்தார் கள். காலையில் கையெழுத்துபோடச் சென்ற போதே அதிபர் அவளை விஷ்பண்ணினுர். பதிலுக்கு நன்றிதெரிவித்து விட்டு வெளியே வந்தபோது மேலும் பலர் விஷ்பண்ணினுர்கள்.

நாளை தொடக்கம் நீண்டநாளுக்கு லீவு போட்டதன் காரணத்தால் தனது கலியாணம் உத்தியோக பூர்வமாக எல்லோர் மத்தியிலும் வெளிப் படுத்தப் பட்டுவிட்டதை ராகினி உணர்ந்தாள்.

''ரீச்சர்– உங்களுக்கு கலியாணமே, ஆறும்வகுப்பில் ஒரு பிள்ளை கேட்க பதிலுக்குச் சிரித்தாள் ராகினி.

''நாங்கள் வரலாமோ ரீச்சர்- வேறுபிள்ளைகள் கேட்டனர்.

பிற்பகல் பள்ளிக்கூடம் விடுவதற்குள்- கொடுக்கவேண்டிய கலியாண அழைப்பிதழ்களைக் கொடுத்து விட்டு எப்போதும் போல சுகந்தி ரீச்சர் சகிதம் நடந்த போது– அன்றைக்கு அம்மன் கோயிலடியால் திரும்பிய போது இருந்தமனநிலைக்கு ஒத்த மனநிலை இப்போது இருந்தது.

மீண்டும் இந்தக் கல்லூரியில் படிப்பிக்கும் காலம் காலமும் அதனூடாகக் கிடைக்கும் மனநிறைவும் எப்போதும் வரும் என நினைக்கும் போது மனம் குமுறிக் கொண்டது.

''நாளைக்கு வீட்டை வாறன் ராகினி, நாளைக்குத் தொடக்கம் நானும் லீவு, என்று சொல்லி சுகந்தி ரீச்சர் பஸ்சிலே விடைபெற்றாள்.

ஒழுங்கையால் நடக்கும் போது வழியில் பொன்னம்மா எதிர்ப்படவில்லை. வியாழக்கிழமை இந்தநேரம் கலியாணம். முடிந்துவிடும். கழுத்திலே தாலி ஏறிவிடும்.

வீட்டிற்கு வந்தபோது மூன்றரை மணியாகி விட்டது. அக்கம் பக்கத்து வீட்டார்கள், ஒருசில உறவினர்கள் எனப் பலர் இருந்தனர். எல்லோரையும் பார்த்துப் பார்த்துப்புன்னகைத்து அறைக்குள் போனாள்.

பார்த்திபனும் சம்மந்தனும் அவர்களது வேறு சில நண்பர்களும் கூட அமளியான வேலையில் இருந்தார்கள். ''ஏன் பிள்ளை நீ - இவ்வளவு நேரமும் சாப்பிடாமல் என்ன செய்

ய்ருயி'' எனக் கேட்டபடி வனஜாவைத் தேடிக்கொண்டு அம்மா வந்தாள்.

அலுமாரியினுள் உடுப்புக்களை அடுக்கிக் கொண்டிருந்த வனஜா-

''பொறுங்கோ- அம்மா வாறன் நீங்கள் வந்தாக்களுக்கு தேத்தண்ணியைக் கொடுங்கோ-''

''ஏன்வனஜா சாப்பிடேல்லை வேலை வேலை என்று சாப்பிடாமல் என்ன செய்யப்போருய்-'' கோபமாக ராகினி இரைந்தாள்.

''ஐயோ அக்கா காலமை சாப்பிடப்பிந்திப் போச்சு. அதுதான் இன்னும் பசிக்கேல்லை நான் உன்னோடை சாப்பிடுகிறேன்''என்ற வனஜா சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு

'அக்கா- விடிய உன்ரை பிரண்ட் கல்பனு வந்தவ அவபின்னேரம் வாறதெண்டவ இரவைக்கு இஞ்சைதான் நிற்பவாம், பிள்ளை ளையும் கூட்டிக்கொண்டு வருவா ''என்ருள்.

''அப்ப கூறை ப்ளவ்ஸ்சை அவ வைக் கொண்டு தைப்பம் தைச்சுத் தைச்சே உன்ரை உடம்பைப் பழுதாக்கப்போகிருய்-'' ராகினி சொன்னதைக் கேட்டு வனஜா சிரித்தாள் வெளியலை அம்மாயாரையோ ''வாங்கோ-வாங்கோ-'' என வரவேற்பது கேட்டது.

அதற்கிடையில் சம்மந்தன் அறைக்குள் வந்தான்.'அக்கா இரண்டுபேர் வருகினம் ரீச்சர் மாதிரி இருக்கு-''

ராகினி விரைவாக வெளியே வந்தாள். மிஸ்சிஸ் சந்திரா சண்முகலிங்கம் தன் மிஸ்டருடன் வந்திருந்தார். ஸ்கூட்டரை உள்ளே தள்ளிக்கொண்டு வந்த மிஸ்டரையும் அவரையும் பார்த்து சந்தோஷப்பட்ட ராகினி இருவரையும் வரவேற்ருள்.

"எல்லாரும் பிசிபோல இருக்கு-" என்றபடி வந்த மிஸ்சிஸ் சண்முகலிங்கம் விருந்தைக் கதிரையில் அமர்ந்தார் மிஸ்ரர் சண்முகலிங்கமும் வந்தார்.

"கார் ஏதும் தேவைப்பட்டால் சொல்லுங்கோ-என்னை பிரண்ட் ஒருத்தரிட்டை கார் இருக்கு. சொன்னால் அவரே கொண்டுவருவார்" என்றார் மிஸ்டர் சண்முகலிங்கம்.

"ஓம் ராகினி என்ன கெல்ப் எண்டாலும் கேளும். அதுக்குத்தான் இண்டைக்கு வந்தனான்," என்ற மிஸ்சிஸ் சண்முகலிங்கம் ராகினியின் தோளைத் தொட்டார்.

ராகினிக்கு என்ன செய்வது எண்டு தெரியவில்லை. அவர்கள் அன்பு அவளை மனமுருகச் செய்தது.

"கார் என்ன மாதிரி எண்டு ஐயாவைக் கேட்டால்த் தான் தெரியும் ஐயா வந்த பிறகு விசாரிச்சு நான் நாளை சொல்லி அனுப்புகிறேன்"

"காலமை ஒன்பது மணிக்கு வெடிங் எண்டால் றிஜிஸ் ரேசன் என்னமாதிரி-"

"அது பின்னேரம் நாலு மணிக்கு" என்றாள் ராகினி

"நான் முதல் நாளே வந்து நிற்கிறேன். இவர் டியூட்டியாய் கொழும்புக்கு போறார். அடுத்தநாள் தான் வருவார்"

பிள்ளைகளுடன் கல்பனா வாசலில் தோன்றினாள். வனஜா அவர்களை வரவேற்க ஓடினாள். பார்த்திபன் எல்லோருக்கும் கோப்பி பரிமாறினான்.

மிஸ்சிஸ் சண்முகலிங்கமும், மிஸ்டரும் விடைபெற்றுப் போனார்கள். வாசல்வரை சென்று அவர்களை வழியனுப்பி வைத்து ராகினி கல்பனாவிடம் வந்தாள். பிள்ளைகள் தாயைச் சுற்றிக் கொண்டு நின்றன,

"நீ என்னோடை கதைக்க வேணும் என்று உன்ரை

வேலைகளைக் குழப்பாதை ராகினி தைக்கிறதுகளைத் தா. நான் தைக்கிறேன் நீ போய் உன்ரை வேலையளைப் பார்'' என்ருள் கல்பனு.

கூறை சாறியையும் ப்ளவுஸ் துணியையும் பார்த்த கல்பனு ''நல்லகலர் உனக்கு நல்லாய் மச் பண்ணும் அவர் சாறி செலக் பண்ணிறதில் கெட்டிக்காரன் போல கூறைச் சாறி எடுக்க அவரும் போனவரே''

பதில் சொல்லாமல் சிரித்தாள் ராகினி.

அக்காவும் தங்கையும் முகம் கழுவிக் கொண்டு குசினிக்கு சாப்பிட வந்தபோது அம்மா நன்ருகக் களைத்துப் போய் இருந்தாள். குசினி முழுக்க சாமான்கள் பரவிக் கிடந்தன.

இருவரும் சாப்பிடத் தொடங்க அம்மா அவர்களை வெகு நுணுக்கமாகப் பார்த்தாள். ராகினியும் அம்மாவையே பார்த்தாள். வழக்கமான சோகம் இப்போதைய களைப்பு இரண்டையும் மிஞ்சி அம்மாவின் முகத்தில் ஒரு வெளிப்பும் சந்தோஷமும் இருந்தன.

''பிள்ளை- பத்திரகாளிக்கு ஒரு மச்ச மடைக்கு நேர்ந்தனுன். வியாழன் கலியாணம் எண்டால் கடைசி ஞாயிற்றுக்கிழமை அதைச் செய்யவேணும். வேளைக்கே அவருக்குச் சொல்லிவை.''

தலை நிமிர்ந்து பார்க்காமலே தலையை ஆட்டினுள் ராகினி.

''அவை பெரிய குடும்பம். சொந்தக்காரரே கனபேர். எல்லாரும் ஒரே மாதிரி இருக்கமாட்டினம் பிள்ளை. சில ஆட்களுக்குக் கதைக்கவும் தெரியாமல் இருக்கும் அப்படியான ஆட்களோடையும் சமாளிச்சுக் கொண்டு போக வேணும். தேவையில்லாமல் கதைச்சுக் கோபப்பட்டு சிரிக்காமல் கதைக்காமல் இருக்கக் கூடாது இஞ்சைநீ வளர்ந்த விதம் வேறை. அங்கை என்னமாதிரி அமையுமோ தெரி

யாது. எதையும் பொறுத்துப் பழகினால் நல்லது. இதுகளை உனக்கு நான் விளங்கப்படுத்தத் தேவையில்லை எண்டாலும் என்ரை மன ஆறுதலுக்காய் சொல்லுறன். என்ன கஸ்டப்பட்டும் ஒரு வாழ்க்கை அமைச்சுக் கொடுக்கத்தான் தாய் தேப்பனாலை முடியும். அங்காலை கொண்டு நடத்திறது அவையின்ரை கையிலை இல்லை நாங்கள் இண்டைக்கோ நாளைக்கோ கண்ணை மூடியிடுவம். நீங்கள் தான் வாழப் போற நீங்கள்-'' என்ற அம்மாவின் கண்கள் கலங்கின. அவள் தேகம் நடுங்கியது.

ராகினிக்கு வேதனையாக இருந்தது. வனஜா சோற்றைப் பிசைந்து கொண்டிருந்தாள்.

சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தபோது வந்திருந்த ஆட்கள் குறைந்திருந்தார்கள். கஸ்பனா தையல் மெசினுடன் இரண்டறக் கலந்திருந்தாள். பிள்ளைகள் மூன்றும் முன்படியில் விளையாடிக் கொண்டிருந்தன.

கிணற்றடியில் பார்த்திபனும் சம்பந்தனும் சத்தம் போட்டுச் சிரிப்பது கேட்டது. ராகினி கிணற்றடியை நோக்கி நடந்தாள்

''பெரியக்கா வாங்கோ-'' என்றான் சம்பந்தன்.

கிணற்றுக்கட்டில் ராகினி அமர்ந்தாள்

உடைகள் தோய்க்கும் கல்லில் பார்த்திபன் இருந்தான். மறுபக்கம் சம்பந்தன்

''என்ன நடக்குது'' என்றாள் ராகினி.

''இதிலை இருக்க நல்லாய் இருக்கு. அது தான் இருக்கிறம்-'' என்றான் பார்த்திபன்.

''பெரியக்கா உங்கடை அவர் நல்ல பகிடிக்காரன் போல'' எனச் சம்பந்தன் கேட்டான்.

'எனக்குத் தெரியுமே.''

"ஏன் தெரியாது அண்டைக்கு இஞ்சை வந்தவர். அப்ப கதைக்கேக்கை தெரிஞ்சிருக்க வேணுமே."

"போடா மடையா- இரண்டு பேரும் அண்டைக்குத் தான் சந்திக்கிறம். அப்பபோய் அவர் பகிடி விடுகிருரே."

"ஓ- அது சரிதான்" என்முன் பார்த்திபன்.

"அதுசரி அவர் பகிடிக்காரன் எண்டு உனக்கு எப்ப டித் தெரியும்"

"நேற்றைக்கு நான் அங்கை போனஞன்."

"அங்கை எண்டால்-"

"உங்கடை அவரின்ரை வீட்டைதான்-" சம்பந்தன் சிரித்தான்.

"அவர் நல்லாய் சிகரெட் அடிப்பார் போல. நான் போகேக்க கையிலை சிகரெட் பக்கெற்ருேடை தான் இருந் தவர் ஆனல் பெரியக்கா அவரின்ரைவாய் இன்னும் கறுக் கேல்லைப் பாருங்கோ."

ராகினி அதற்குப் பதில் சொல்ல வில்லை.

"நான் போய் இருக்க அவர், அக்கா என்ன சொல்லி விட்டவ என்று கேட்டார். நான் என்னத்தைச் சொல்லு றது, நான் சும்மா வந்தனன் எண்டு சொன்னன்"

ராகினிக்கு அவரின் நினைவு வந்தது. வெள்ளிக் கிழமை மாலை அவர் வந்து போன காட்சி மனதில் தோன் றியது கொண்டு வந்து தந்த பார்சல் பற்றிய சிந்தனை உருவானது.

அழகாகக் கட்டப்பட்டிருந்த அந்தப் பார்சலை வனஜா தான் அவசரப்பட்டுத் திறந்தாள். உள்ளே ஒரு சதுரமான பெட்டி. பெட்டியின் முகப்பில் ஒரு படம்.

சிவந்த ரோஜாப் பூ ஒன்று பெரிதாக இருக்க, அதன் மத்தியில் வெளிநாட்டுக் காதலர் இருவர் ஒருவரை ஒருவர் முத்தமிட்டுக் கொண்டிருக்கும் படம்.

பெட்டியைத் திறந்தால் பலவகையான மேக்கப் சாதனங்கள், பெட்டியை மூடினாள் ராகினி.

,'ஏனக்கா.'' என வனஜா கேட்டாள்.

' நல்லாய் வயது போன பிறகுதான் உது தேவைப் படும இப்ப என்ரை அழகு எனக்குக் காணும் '' என்றாள் சலிப்புடன்.

''என்ன பெரியக்கா கதையைக் காணேல்லை, எங்கை போட்டியள்'' சம்பந்தன் ராகினியை வார்த்தைகளால் உலுப்பினான்

''சா- அப்படி ஒன்றும் இல்லை.''

''பெரியக்கா ஒரு விசயம் தெரியுமே.''

''என்ன .''

''அவருக்கு சுணநாதன் செத்தது தெரியும்.''

''தெரியத்தானே செய்யும், அவன் என்ரைதம்பி குடும்பத்திலை எத்தனை பேர் எண்டால் மூன்று பேர் எண்டு சொல்லித்தானே. அவன் செத்துப் போன விசயத்தைச் சொல்லுவம்.''

''என்ன சொன்னவர்.'' எனப் பார்த்திபன் கேட்டான்.

''அவர் சொல்லுறார்.''

''என்ன வாம்.''

''அவர் கணநாதனை எண்டு சொல்லேல்லை, பொதுவாய்த் தான் சொன்னவர். சரியான விசர்ப் பெடியளாய் இருக்கிறாங்கள். வீணாய் சாகிறாங்கள். என்று சொல்லிப் போட்டு. பிறகு சிரிச்சுக் கொண்டு சொன்னார் ஆனால் எங்களுக்கு அவன்கள் நன்மையைத் தான் செய்யிறாங்கள். அவன்கள் சண்டைப் பிடிக்காட்டி எங்களை ஜேர்மனியிலை இருக்க விடுவன்களே எண்டவர்.''

யாரோ முகத்தில் ஓங்கி அறைந்து நெஞ்சில் உதைந்தது போல இருந்தது ஒரு தடவை தலை சுற்றியது. கிணற்றுக் கட்டை கைகளால் பிடித்துக் கொண்டாள் ராகினி.

''இப்படி ஒரு சுயநல ''மேலும்யோசிக்க முடியவில்லை, உடம்பு நடுங்கத் தொடங்கி இனம் தெரியாத வேகம் பிறந்தது கண்கள் இருண்டன. அதிர்ச்சி எதிர்பராத அதிர்ச்சி

எத்தனை விடையங்களைப் பொறுத்துக் கொண்டு எவற்றை எல்லாம் சமாளித்துக் கொண்டு எத்தனை மன உணர்வுகளை, எழுச்சிகளை தியாகம் செய்து கொண்டு- வாரிச் சுருட்டிக் கொண்டு அம்மாவுக்காக, ஐயாவுக்காக, இந்த சமூகத்திற்காக சம்மதம் தெரிவித்துக். கடைசியில்...

கிணற்றுக் கட்டில் இருக்க முடியவில்லை. உடலும் மனமும் ஆர்ப்பரித்து கிளர்த் தெழுந்து வேகம் கொண்டன.

இருந்த இடத்தை விட்டு எழும்பினுள் நல்லகாலம்

இருளாக இருந்த படியால் அவள்முகம் பட்டபாட்டை சம்பந்தனே பார்த்திருப்பினும் காண முடியவில்லை.

''இருங்கோ வாறன்,, என்றபடி குசினியை நோக்கி நடந்தாள்.

''அம்மா - அம்மா என்னை மன்னித்து விடுங்கோ என்னுல் இந்தக் கலியாணத்தை ... எனக்கு வேண்டாம். எதையும் சமாளிக்க முடியும். ஆனுல் இப்படியான மனப் பாங்கு கொண்டவரை- எனச் சொல்ல நினைத்தாள்.

குசினியில் அம்மா வேலை செய்து கொண்டு பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு

''நான் கும்பிட்ட தெய்வங்கள் என்னைக் கைவிடேல்லை. என்ரை மேன் செத்ததோடை எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு இந்தப் பொம்பிளைப் பிள்ளையளுக்காகத்தான் உயிரோடை இருந்தனுன். மூத்தவளுக்கு இந்தக் கலியாணம் செய்ய விருப்பமோ தெரியாது. ஆனுல் அவள் எனக்காகத்தான் இந்தக் கலியாணத்துக்கு ஓமெண்டவள்.

உண்மையிலே அவள் ஒரு தெய்வப்பிறவி'' எனச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ராகினி அதிர்ந்து போனாள். சொல்ல நினைத்ததைச் சொல்ல முடியவில்லை. அம்மாவின் சந்தோஷத்தை எப்படிக் குலைப்பது. என்னதான் இருந்தாலும் தன்னுடைய இயலாமையை உணர்ந்து கொண்டாள்.

''என்ன பிள்ளை-'' என தலை நிமிர்ந்த தாய் கேட்டாள்.

ஒன்றுமில்லை எனத் தலையசைத்த வண்ணம் என்ன செய்வது என்று தெரியாமல் அறையை நோக்கி விரைந்தாள். தன்னுடைய இயலாமையை நினைத்துக் கொள்ள கண்களில் கண்ணீர் பெருகத் தொடங்கியது.

கட்டிலில் குப்புற வீழ்ந்தாள். ஓவென்று அழவேண்டும் போல இருந்தது. ஆனால் சத்தம் போடவில்லை. கண்ணீர் பெருக குலுங்கிக் குலுங்கி சத்தமில்லாமல் அழத் தொடங்கினாள்.

இப்படியான மனோபாவம் உடையவன், நான் எதிர்பார்த்த கறுத்த உருவம், அடர்த்தியான மீசையும், சுருள் தலையும், நீளமூக்கும், உயரமான தோற்றமும் கொண்டவனாக இருந்தால்கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

அழுதுகொண்டு இருக்கும்போது அந்த வெளிப்பு களுக் கொண்டது. இயந்திரமாக எழுந்து உட்கார்ந்தாள். கண்ணீரைத் துடைத்தாள். உப்புக் கரித்த உதடுகளை ஒற்றி எடுத்தாள்.

''கலியாணத்தைக் குழப்பினால் என்னை நான்மாத்திரம் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆனால் கந்தசாமி போன்றவர்களின் கருத்துக்கு என்ன நடக்கும். மிஸ்டர் கந்தசாமி நான் உமது மனைவியாகி உமது கருத்தை மாற்றுவிட்டால் நான் கணநாதனின் அக்கா ராகினி அல்ல.''

தனக்குள் அதீத வேகத்துடன் சொல்லிக் கொண்டாள்.

''என்னக்கா-'' என்றபடி வந்த வனஜாவைப்பார்த்து-புதிய அர்த்தத்துடன் சிரித்து ஒன்றுமில்லை'' என்றாள் ராகினி.

முற்றும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 16 | என்ருல் | என்ருள் |
| 5 | 22 | கருத்துக்களில் | குருத்துக்களில் |
| 6 | 28 | தோப் | நோப் |
| 6 | 28 | கராணமகா | காரணமாக |
| 7 | 11 | தலேயிருந்து | தலே இழுத்து |
| 13 | 15 | கோட்டும் | கேட்டும் |
| 14 | 1 | பெலியூம் | பெவியூம் |
| 23 | 11 | அழகும் | ஆழமும் |
| 29 | 11 | மூத்தவன் | மூத்தவள் |
| 29 | 12 | வேலேசெய்யிறவன் | வேலேசெய்யிறவள் |
| 35 | 19 | பரத | பரவ |
| 40 | 21 | அவை எங்கை | அவைக்கு என்ன |
| 42 | 18 | போகவிட்து | போகவிட்டு |
| 42 | 22 | இனம் | இன்னும் |
| 42 | 22 | போரு | போருன் |
| 50 | 22 | பிரயைகள் | பிரசைகள் |
| 55 | 8 | தேடிக்கொண்டிருப்பார் | தோடிக்கொண்டிருப் பார்கள் |
| 55 | 23 | திருக்கதா | திறக்காதா |
| 63 | 21 | நிலேவுக் | நிலவுக் |
| 64 | 8 | நிலேவெளியில் | நிலவொளியில் |
| 67 | 21 | பெருமை | வெறுமை |
| 69 | 2 | சிலவெளிப்பட்டுத் | நிலவொளிபட்டுத் |
| 69 | 21 | பெடியள் | பெடியன் |
| 89 | 1 | எத்படி | எப்படி |
| 101 | 21 | கலோடை | காலோடை |
| 105 | 14 | தாவென்று | வாவென்று |
| 105 | 21 | சனமாக | சங்கடமாக |
| 107 | 7 | ருத்தால் | இருந்தால் |
| 108 | 2 | சிவந்தன | சிலிர்த்தன |
| 108 | 4 | அடுக்க | அடிக்க |
| 109 | 15 | அருங்கிப் | சுருங்கிப் |
| 110 | 8 | அவன் | அவள் |
| 110 | 10 | ஆரம்பித்தான் | ஆரம்பித்தாள் |
| 110 | 16 | என | என்ற |
| 111 | 15 | அளந்தால் | அசைந்தாள் |

ஈழத்து இலக்கிய உலகிற்கு
மீரா வழங்கும் -
இலக்கிய ஆக்கங்கள் ....

வெளிவந்தவை:

மாறுங்காலம் - செங்கை ஆழியான்

ராதையின் நெஞ்சம் - கே.எஸ்.ஆனந்தன்

கே.எஸ் ஆனந்தன்



பூஜைக்காக வாழும் பூவை




மீரா வெளியீடு